


# தமிழ்நாடு இ பேப்பர்.காம்

www. tamilnaduepaper.com




CHENNAI | Volume- 3 | Issue:243 | 19-03-2026 | வியாழக்கிழமை | Free E- Paper | ● சென்னை ● மதுரை ● கோவை ● திருச்சி

# “அரசியலில் ’முற்றுப்புள்ளி’ என்பதே கிடையாது”

## பிரதமர் மோடி



**புதுடெல்லி, மார்ச் 19:**

“அரசியலில் ’முற்றுப்புள்ளி’ என்பதே கிடையாது, ஓய்வு பெறுபவர்களின் அனுபவம் சமூகத்திற்கு பயன்படும். மூத்த உறுப்பினர்களிடமிருந்து நாம் கற்பதற்கு ஏராளம் உள்ளது” என பிரதமர் மோடி தெரிவித்துள்ளார்.

தற்போது நடைபெற்று வரும் பட்ஜெட் கூட்டத்தொடரின் போது மாநிலங்களவையில் பிரதமர் மோடி உரையாற்றினார். ஓய்வுபெறும் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு பிரதமர் மோடி பிரியாவிடை அளித்தார்.

இது குறித்து பிரதமர் பேசும்போது, “ மாநிலங்களவையில் பல்வேறு விவகாரங்கள் குறித்து விவாதங்கள் நடைபெறுகின்றன; அவற்றில் ஒவ்வொரு உறுப்பினரும் தங்களது தனித்துவமான பங்கை ஆற்றியுள்ளனர்.

மல்லிகார்ஜுன கார்கே, சரத் பவார், தேவ கவுடா ஆகியோர் தங்கள் வயதில் அதிக நாட்களை பொதுவாழ்விற்கு அர்ப்பணித்துள்ளனர். தங்களின் அனுபவத்தைக் கொண்டு சமுதாயத்திற்கு சேவையாற்ற அடுத்த கட்ட பயணத்தில் அடியெடுத்து வைக்க உள்ளனர். மூத்த உறுப்பினர்களிடமிருந்து நாம் கற்பதற்கு ஏராளம் உள்ளது.

தங்கள் பதவிக்காலம் முடிந்து இம்மன்றத்தை விட்டு விடைபெறும் தலைவர்களிடம் நான் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன்.

இது போன்ற தருணங்களில், கட்சி எல்லைகளைக் கடந்து ஒற்றுமை உணர்வுடன் நாம் ஒன்றிணைகிறோம். அரசியலில் ’முற்றுப்புள்ளி’ என்பதே கிடையாது,

ஓய்வு பெறுபவர்களின் அனுபவம் சமூகத்திற்கு பயன்படும். எதிர்காலம் உங்களுக்காகக் காத்திருக்கிறது. உங்கள் அனுபவமும், பங்களிப்பும் எப்போதும் நினைவுகூரப்படும்” இவ்வாறு அவர் கூறினார்.

# பா.ஜ.க. கூட்டணியிலிருந்து என்.ஆர்.காங்கிரஸ் விலகுகிறதா?

## பா.ஜ.க. தலைவர்கள் டெல்லி விரைந்தனர்



**புதுடெல்லி, மார்ச் 19:**

புதுச்சேரியில் என்ஆர் காங்கிரஸ் பா.ஜ.க. கூட்டணி ஆட்சி நடந்து வருகிறது. வரும் தேர்தலிலும் ஆளும் என்.ஆர்.காங்கிரஸ்-பாரதீய ஜனதா கூட்டணி உறுதி செய்யப்பட்டு என்.ஆர்.காங்கிரஸ் கட்சிக்கு 16 இடங்களும், பா.ஜனதா கூட்டணிக்கு 14 இடங்களிலும் போட்டியிட முடிவு செய்யப்பட்டது. ஆனால் தேசிய ஜனநாயக கூட்டணியில் இருந்து என்.ஆர்.காங்கிரஸ் கட்சி திடீரென விலக உள்ளதாக தகவல் பரவி வருகிறது. இதையடுத்து பாஜக நிர்வாகிகள் அவசரமாக டெல்லி விரைந்துள்ளனர்.

புதுச்சேரியில் பாஜக முதல் முறையாக கூட்டணி அரசில் கடந்த 2021ம் ஆண்டு இடம் பெற்றது. ரங்கசாமியின் என்ஆர் காங்கிரஸ் கட்சியுடன் இணைந்து ஆட்சி அமைத்தது. ஐந்து ஆண்டு ஆட்சி நிறைவு பெற்ற நிலையில், மீண்டும் சட்டசபை தேர்தல் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதில் புதுச்சேரியில் ஆளும் என்.ஆர்.காங்கிரஸ் கட்சிக்கு 16 இடங்களும், கூட்டணி கட்சியான பாஜகவிற்கு 14 இடங்களும் ஒதுக்கப்பட்டுள்ளன. ஆனால் தொகுதி பங்கீடு பேச்சுவார்த்தையின் போது முதல்வர் ரங்கசாமி சில கட்சிகளை கூட்டணியில் இணைக்க கூடாது என்று நிபந்தனை விதித்தாராம். இதனால் என்.ஆர்.காங்கிரஸ், பாஜக இடையே கருத்து வேறுபாடு ஏற்பட்டுள்ளதாம்.

நேற்று முன்தினம் நள்ளிரவு புதுச்சேரியில் உள்ள தனியார் ஓட்டலில் பேச்சுவார்த்தை நடந்தது. இதில் முதல்வர் ரங்கசாமி கலந்து கொள்ளவில்லை. மாறாக என்.ஆர்.காங்கிரஸ் கட்சியை சேர்ந்த அமைச்சர் லட்சுமி நாராயணன் தலைமையில் 5 பேர் கொண்ட குழுவினர், பாஜக தேர்தல் பொறுப்பாளர் மன்சுக் மாண்டவியாவை சந்தித்து பேசியதாக கூறப்படுகிறது.

**டெல்லி விரைந்த பா.ஜ.க. நிர்வாகிகள்**

அப்போது முதல்வர் ரங்கசாமியின் கோரிக்கையை பாஜக ஏற்காததால் இந்த தேர்தலில் என்.ஆர்.காங்கிரஸ் கட்சி தனித்து போட்டியிட போவதாக கூறினார்களாம். எனினும் தனியார் ஓட்டலில் மத்திய அமைச்சர் மன்சுக் மாண்டவியா நேற்று காலை 8.30 மணிக்கு என்.ஆர்.காங்கிரசார் வருகைக்காக காத்திருந்தார். 10.30 மணி வரை காத்திருந்தும் என்.ஆர்.காங்கிரஸ் கட்சி தரப்பில் யாரும் வரவில்லை. இதனால் ஏமாற்றமடைந்த மத்திய அமைச்சர் மன்சுக் மாண்டவியா, அவருடன் பாஜக மாநில தலைவர் வி.பி. ராமலிங்கம், சபாநாயகர் செல்வம், அமைச்சர் நமச்சிவாயம் ஆகியோர் லாஸ்பேட்டையில் இருந்து தனி விமானம் மூலம் டெல்லிக்கு புறப்பட்டுச் சென்றனர். டெல்லியில் மத்திய அமைச்சர் அமித்ஷா, பாரதீய ஜனதா தேசிய தலைவர் நிதின் நபின் ஆகியோரை சந்தித்து ஆலோசனை நடத்திய பின் இறுதி முடிவு எடுக்கப்படும் என தகவல் வெளியாகி உள்ளது. இதனால் புதுச்சேரியில் பரபரப்பான அரசியல் சூழல் நிலவுகிறது.

# தமிழகத்தில் 3 நாட்களில் உரிய ஆவணங்கள் இல்லாத ரூ.42.65 கோடிக்கு பணம், பொருட்கள் பறிமுதல்

## தலைமை தேர்தல் அதிகாரி அர்ச்சனா பட்நாயக் தகவல்



**சென்னை, மார்ச் 19:**

தமிழகம் முழுவதும் தேர்தல் பறக்கும் படையினரால் தற்போது வரை ரூ.42.65 கோடி மதிப்பிலான பணம், பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன என்று தலைமை தேர்தல் அதிகாரி அர்ச்சனா பட்நாயக் தெரிவித்துள்ளார்.

தமிழகத்தில் சட்டப்பேரவைத் தேர்தல் தேதி கடந்த 15-ம் தேதி அறிவிக்கப்பட்டது. அன்றில் இருந்தே தேர்தல் நடத்தை விதிகள் அமலுக்கு வந்துவிட்டன.

இதையடுத்து, தமிழகம் முழுவதும் பறக்கும் படையினர் மூலம் கண்காணிப்பு தீவிரப்படுத்தப்பட்டுள்ளது. தற்போது 234 தொகுதிகளிலும், தொகுதிக்கு தலா 9 பறக்கும் படைகள், 9 நிலை கண்காணிப்புக் குழுக்கள் என்ற விகிதத்தில், தமிழகம் முழுவதும் 2,160 பறக்கும் படைகள், 2,160 நிலைக் கண்காணிப்புக் குழுக்கள் தீவிர கண்காணிப்புப் பணியில் ஈடுபடுத்தப்பட்டு வருகின்றன.

இந்நிலையில், தலைமை தேர்தல் அதிகாரி அர்ச்சனா பட்நாயக் இன்று வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில், “தற்போது நடைபெற்று வரும் தேர்தல் செலவினக் கண்காணிப்பு மற்றும் அமலாக்கநடவடிக்கைகளின் ஒரு பகுதியாக, பல்வேறு பிரிவுகளின் கீழ் அதிகாரிகள் கணிசமான அளவு பொருட்களைப் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

இன்றைய (18 மார்ச்) நிலவரப்படி, பறிமுதல் செய்யப்பட்ட மொத்த மதிப்பு ரூ. 42.65 கோடி ஆகும். தமிழகம் முழுவதும் ரூ. 2.37 கோடி ரொக்கமும், ரூ.0.18 கோடி மதிப்பிலான மதுபானம், ரூ. 2.88 கோடி மதிப்பிலான போதைப் பொருட்கள், ரூ.16.42 கோடி மதிப்பிலான விலைமதிப்பற்ற உலோகங்கள் மற்றும் ரூ.20.80 கோடி மதிப்பிலான இலவசங்கள் / பிற பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

தேர்தல் செலவின கண்காணிப்புக் குழுக்கள் மற்றும் அமலாக்க முகமைகள், சட்டவிரோதப் பணப் புழக்கம், வாக்காளர்களை கவர வழங்கப்படும் இலவசப் பொருட்கள் மற்றும் பிற தடைசெய்யப்பட்ட பொருட்களின் விநியோகத்தைக் கட்டுப்படுத்த கண்காணிப்பு மற்றும் ஒருங்கிணைப்பு வழிமுறைகளைத் தீவிரப்படுத்தியுள்ளன” என்று அவர் தெரிவித்துள்ளார்.

# தமிழகத்தில் ஜனவரி மாத பரிசோதனையில் 43 மருந்துகள் தரமற்றவை

**சென்னை, மார்ச் 19:**

தமிழகத்தில் கடந்த ஜனவரி மாதம் பரிசோதனை செய்யப்பட்ட மருந்துகளில் 43 மருந்துகள் தரமற்றவையாக இருப்பது தெரியவந்துள்ளது. நாடு முழுவதும் விற்பனை செய்யப்படும் மருந்துகளின் தரத்தை உறுதி செய்வதற்காக, மத்திய, மாநில அரசுகள் ஆய்வு செய்கின்றன.

மருந்தகங்கள், சில்லறை விற்பனையகங்கள், மொத்த விற்பனைக் கூடங்கள், கிடங்குகள், உற்பத்தி அலகுகளில் இருந்தும் சில மருந்துகள் எடுத்து பரிசோதனை செய்யப்படுகின்றன.

அதன்படி, கடந்த ஜனவரி மாதம் மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் நாடு முழுவதும் 215 மருந்துகள் தரமற்றவையாக இருந்தது கண்டறியப்பட்டது. அதில் தமிழகத்திலிருந்து மட்டும் 43 மருந்துகள் இடம்பெற்றிருந்தன. அதில் சென்னை ஆய்வகத்தில் 22 மருந்துகள், மதுரை ஆய்வகத்தில் 21 மருந்துகள் பரிசோதனை செய்யப்பட்டன.

அதேபோல், கர்நாடகத்தில் 21 சதவீதமும், ராஜஸ்தானில் 17 சதவீதமும் தரமற்ற மருந்துகள் இருந்தன.

தெலங்கானா, கேரளம், ஒடிசா, ஜம்மு-காஷ்மீர், இமாசலப்பிரதேசம் மாநிலத்திலும் தரக்குறைபாடுள்ள மருந்துகள் இருப்பது தெரிய வந்தது.

இது தொடர்பாக மருந்து கட்டுப்பாட்டுத்துறை அதிகாரிகளிடம் கேட்டபோது, “ஒரு குறிப்பிட்ட உற்பத்தி தொகுப்பு (பேட்ச்) மருந்துகள் தரப்பரிசோதனையில் தோல்வியடைவது, அந்தத் தொகுப்புக்கு மட்டுமே பொருந்தும். சந்தையில் உள்ள மற்ற மருந்துகள் குறித்து கவலைப்படத் தேவையில்லை” என்று தெரிவித்தனர்.

# அமெரிக்க விசா கட்டணம் கடும் உயர்வு: சுற்றுலா, தொழில்முறை பயணிகளுக்கு கூடுதல் சுமை

**வாஷிங்டன், மார்ச் 19:**

அமெரிக்காவிற்குப் பயணம் மேற்கொள்ளும் சர்வதேச பயணிகளுக்குப் பெரும் அதிர்ச்சியளிக்கும் வகையில், அந்நாட்டு வெளியுறவுத் துறை புதிய "விசா நேர்மை கட்டணத்தை" (Visa Integrity Fee) அறிமுகப்படுத்தியுள்ளது. சுமார் 250 டாலர் மதிப்பிலான இந்தக் கூடுதல் கட்டணம், இந்தியர்கள் உட்பட உலகம் முழுவதிலுமிருந்து அமெரிக்கா செல்லும் பயணிகளைப் பாதிக்கும் எனத் தெரிகிறது.

இந்தபுதியநடைமுறையின்படி, தொழில் மற்றும் சுற்றுலாப் பயணிகளுக்கான பி1/பி2 (B1/B2) விசாக்கள் உட்பட, குடியேற்றம் அல்லாத அனைத்து விசா வகைகளுக்கும் (Non-immigrant visas) இந்தக் கட்டணம் பொருந்தும். ஏற்கனவே நடைமுறையில் உள்ள 185 டாலர் அடிப்படை விசா கட்டணத்துடன், இந்த 250 டாலர் கட்டணமும் சேர்வதால், ஒரு பயணியின் மொத்த விசா செலவு சுமார் 472 டாலராக உயர்ந்துள்ளது. இது இந்திய ரூபாய் மதிப்பில் சுமார் 40,000 ரூபாய்க்கும் அதிகமாகும்.

**நேர்மைக்கட்டணம்**

சுற்றுலாப் பயணிகள், வணிக நிமித்தமாகப் பயணம் செய்வோர் மற்றும் அமெரிக்காவில் தங்கியிருந்தபடியே விசா மாற்றம் (In-country transfer) செய்ய விரும்புவோருக்கு இந்த விலையேற்றம் பெரும் பொருளாதாரச் சுமையை ஏற்படுத்தும்.

விசா முறையின் நம்பகத்தன்மையை மேம்படுத்தவும், முறையான விசா விதிமுறைகளைப் பின்பற்றுவதை ஊக்குவிக்கவும் இந்த ’நேர்மை கட்டணம்’ அறிமுகப்படுத்தப்பட்டதாக அதிகாரிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இருப்பினும், இந்தக் கட்டண உயர்வு நடுத்தர வர்க்கப் பயணிகள் மற்றும் மாணவர்களின் திட்டங்களில் பெரிய மாற்றத்தை ஏற்படுத்தக்கூடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. குறிப்பாக, குடும்பத்துடன் அமெரிக்கா செல்லத் திட்டமிடுவோருக்கு இந்தக் கூடுதல் செலவு ஒரு பெரும் தடையாக அமையும் எனத் தொழில்முறைப் பயண ஆலோசகர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

## இன்றைய பஞ்சாங்கம்

19.03.2026 பங்குனி 5
வியாழக்கிழமை

சூரிய உதயம் 6.19

**திதி:**
இன்று காலை 7.19 வரை அமாவாசை பின்பு பிரதமை.

**நட்சத்திரம்:**
இன்று அதிகாலை 5.53 வரை பூரட்டாதி பின்பு உத்திரட்டாதி.

**யோகம் :**
இன்று அதிகாலை 4.26 வரை சுபம் பின்பு சுப்பிரம்

**கரணம்**
இன்று காலை 7.29 வரை நாகவம் பின்பு மாலை 6.14 வரை கிம்ஸ்துக்கினம் பின்பு பவம்.

**அமிர்தாதி யோகம் :**
இன்று அதிகாலை 5.53 வரை அமிர்த யோகம் பின்பு சித்த

**சந்திராஷ்டமம் :**
இன்று அதிகாலை 5.33 வரை ஆயில்யம் பின்பு மகம்

**நல்ல நேரம்**
காலை 10.30 – 11.30.
மாலை 12.30 – 1.30

**இராகு காலம்**
பிற்பகல் 1.30 – 3.00.

**எமகண்டம்**
காலை 6.00 – 7.30.

**குளிகை**
காலை 9.00 – 10.30.

இன்று தெலுங்கு வருடப்பிறப்பு.
யுகாதி பண்டிகை.

ஜோதிட நிபுணர்:
இராஜபாளையம்
இராமமூர்த்தி
செல்: 8189908040

# தமிழகத்தில் அதிகபட்ச வெப்பநிலை 7 டிகிரி வரை குறைய வாய்ப்பு

**சென்னை, மார்ச் 19:**

தமிழகத்தில் மார்ச் 22-ம் தேதி வரை அதிகபட்ச வெப்பநிலை வழக்கத்தை விட 7 டிகிரி ஃபாரன்ஹீட் வரை குறைய வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்ட செய்திக் குறிப்பு: மன்னார் வளைகுடா முதல் தென் கர்நாடகத்தின் உள்பகுதி வரை ஒரு வளிமண்டல கீழடுக்கு சுழற்சி நிலவுகிறது. இதன் காரணமாக (மார்ச் 19) தமிழகத்தில் ஒருசில இடங்களிலும், 20-ம் தேதி கடலோர தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும், 21, 22-ம் தேதிகளில் தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும் இடி, மின்னலுடன் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.

23, 24-ம் தேதிகளில் மேற்கு தொடர்ச்சி மலை மாவட்டங்கள் மற்றும் தென் தமிழகத்தில் ஓரிரு இடங்களில் லேசான மழை பெய்யக்கூடும்.

தமிழகம், புதுச்சேரி, காரைக்கால் பகுதிகளில் அதிகபட்ச வெப்பநிலை நாளை முதல் மார்ச் 22-ம் தேதி வரை ஓரிரு இடங்களில் வழக்கத்தை விட 7 டிகிரி ஃபாரன்ஹீட் வரை குறைவாக இருக்கக்கூடும். சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் நாளை வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். நகரின் ஒருசில பகுதிகளில் இடி, மின்னலுடன் லேசான மழை பெய்யக்கூடும். அதிகபட்ச வெப்பநிலை 92 டிகிரி, குறைந்தபட்ச வெப்பநிலை 77 டிகிரி ஃபாரன்ஹீட் அளவை ஒட்டி இருக்கக்கூடும்.



## திருக்குறள் குறள்-563

**வெருவந்த செய்தொழுகும் வெங்கோல னாயின்
ஒருவந்தம் ஒல்லைக் கெடும்**



குடிகள் அஞ்சும் படியான கொடுமைகளைச் செய்து ஆளும் கொடுங்கோல் அரசனானால், அவன் திண்ணமாக விரைவில் கெடுவான்.

## சிந்திக்க ஒரு நொடி



நாமாக யாரையும் வெறுக்க வேண்டாம்.... ஆனால்..... நம்மை வெறுப்பவரை எப்போதும் நினைக்கவும் வேண்டாம்

**உஷா முத்துராமன்**

## அம்மாவாசை சிறப்பு பூஜை



**வாடிப்பட்டி, மார்ச்.19:**

மதுரை மாவட்டம் வாடிப்பட்டி ரயில் நிலையம் அருகில் சொக்கையா சாமி ஜீவசமாதியில் பங்குனிமாத அமாவாசையை முன்னிட்டு சிறப்பு பூஜை நடந்தது. இந்த பூஜையை யொட்டி மதியம் 12 மணிக்கு விநாயகர், முருகன், சொக்கையா சுவாமி ஆகியோருக்கு அபிஷேக, ஆராதனை, அர்ச்சனைகளுடன் சிறப்பு அலங்காரமும் பூஜையும் செய்யப்பட்டது. இதில் பஜனை பாடல்கள் பாடி கலந்து கொண்ட பக்தர்களுக்கு அன்னதான கூடத்தில் அன்னதான வழங்கப்பட்டது. இதன் ஏற்பாடு களை சொக்கையா சுவாமி மடத்தின் நிர்வாக தலைவர் கே. மணிகண்டன் செய்திருந்தனர்.

## சந்தோஷ சந்திப்பு வெண்பா வேந்தர் விருது வழங்குதல்



இந்த ஆண்டின் வெண்பா வேந்தர் விருது பெற்ற பாவலர் கருமலைத்தமிழாழன் அவர்களை ஒசூரில் உள்ள அவர் வீட்டிற்கேச் சென்று விருதையும், ரூபாய் 3000/-பரிசுத் தொகையையும் உரத்த சிந்தனையின் பொதுச் செயலாளர் உதயம் ராம் வழங்கினார். அறம் இலக்கிய அமைப்பு செயலாளர் கவிஞர் அ,க, இராசு, பேனா நண்பர் பேரவையின் துணைத்தலைவர் முனைவர் பிரேம் பிரகாஷ், அமைப்பாளர் நாகப்பன், கவிஞர் முருககுமரன், எலைட் ரோட்டரி சங்கத் தலைவர் திரு. காளிமுத்து, முன்னாள் தலைவர் திரு,சங்கர் மற்றும் பலர் இந்தச் சந்திப்பு நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.

## சிறப்பு பேருந்துகள் இயக்கம்




உகாதி மற்றும் ரம்ஜான் பண்டிகை கால தொடர் விடுமுறையை முன்னிட்டு, தமிழக அரசு போக்குவரத்து கழகம் சார்பில் நேற்று மார்ச் 18) மற்றும் இன்று 1,200 சிறப்பு பேருந்துகள் இயக்கப்படுகின்றன. சென்னையிலிருந்து முக்கிய நகரங்களுக்கு செல்லும் பயணிகள் மீண்டும் திரும்புவதற்காக மார்ச் 22-ம் தேதி 565 பேருந்துகள் தயார் நிலையில் உள்ளன. கூட்ட நெரிசலை தவிர்க்க www.tnstc.in இணையதளம் மூலம் முன்கூட்டியே தங்களது பயணத்தை உறுதி செய்துகொள்ளுமாறு அதிகாரிகள் கேட்டுக்கொண்டுள்ளனர்.

## பஞ்சபூத நவக்கிரக தவம் மற்றும் சர்வ வசிய தன ஆகர்ஷண சங்கல்ப நிகழ்வு



**ஈரோடு, மார்ச் 19:**

ஈரோடு மாவட்டம், மொடக்குறிச்சி வட்டம், துய்யம்பூந்துறைக் கிராமம், செங்கரைப்பாளையம் மனவளக்கலை மன்ற அறிவுத்திருக்கோவிலில் அமாவாசை தோறும் நடைபெறும் பஞ்சபூத நவக்கிரக தவம் மற்றும் சர்வ வசிய தன ஆகர்ஷண சங்கல்ப நிகழ்வானது, 18.03.2026 முற்பகல் 11.30 - 1.00 மணி வரை நடைபெற்றது. ஆர்வத்துடனும் விருப்பத்துடனும் திரளாக ஆண், பெண் அன்பர்கள் கலந்து கொண்டனர்.

சர்வ வசிய தன ஆகர்ஷண சங்கல்பம் செய்ததின் வெற்றியின் அறிகுறியாக அனைவரின் முகத்திலும் திருப்தியையும் மகிழ்ச்சியையும் காண முடிந்தது.

சங்கல்ப நிகழ்வு மதிய உணவுடன் இனிதே நிறைவுற்றது வாழ்க வளமுடன் நன்றி! வணக்கம்!

## விடுதலை சிறுத்தைகள் கட்சியில் வெம்பாக்கம் கிழக்கு ஒன்றிய செயலாளராக மு.கோபிக்கண்ணன் நியமனம்!

**செய்யாறு, மார்ச் 19:**

செய்யாறு அடுத்த கீழ்நாயக்கன் பாளையத்தைச் சேர்ந்த மு.கோபிக்கண்ணன் என்பவர் விடுதலை சிறுத்தைகள் கட்சியில், வெம்பாக்கம் கிழக்கு ஒன்றிய செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

திருவண்ணாமலை மாவட்டம், செய்யாறு சட்டசபை தொகுதிக்கு உட்பட்டது வெம்பாக்கம் ஊராட்சி ஒன்றியம்.

இங்குள்ள கீழ்நாயக்கன் பாளையத்தை சேர்ந்தவர் மு.கோபிக்கண்ணன். இவர் 1990ம் ஆண்டு முதல் விடுதலைச் சிறுத்தைகள் கட்சியில் அடிப்படை உறுப்பினராக இருந்து வருகிறார். இவர் கடந்த கொரோனாவிற்கு முன்பு கீழ்நாயக்கன் பாளையம் ஊராட்சியில் வார்டு உறுப்பினராக தேர்வு செய்யப்பட்டார்.

இதன் மூலம் அப்பொழுதே ஊராட்சி துணைத் தலைவராகவும் பதவி ஏற்றுக் கொண்டார். இவருக்கு கீழ்நாயக்கன் பாளையம் ஊராட்சி மக்களிடம் நல்ல செல்வாக்கு இருந்து வந்ததால், கடந்த



உள்ளாட்சி தேர்தலின்போது மு.கோபிக்கண்ணன் கணிசமான ஓட்டுக்களை பெற்று கீழ்நாயக்கன் பாளையம் ஊராட்சி மன்றத் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டார். இதற்கெல்லாம் காரணம் இவர், விடுதலை சிறுத்தைகள் கட்சியில் இவரது சிறப்பான அணுகு முறையே காரணம் என்று கூறப்படுகிறது.

இதுதவிர வெம்பாக்கம் கிழக்கு ஒன்றியத்தில் விடுதலை சிறுத்தைகள் கட்சியில் இவரது பணிகள் கிராம மக்களால் போற்றும் அளவுக்கும் இருந்து வருவதால், கட்சி மேலிடம் மு. கோபிக்கண்ணனுக்கு வெம்பாக்கம் கிழக்கு ஒன்றிய செயலாளர் பதவியை கடந்த வாரம் வழங்கி உள்ளது.

விடுதலை சிறுத்தைகள் கட்சியில் உழைப்பவர்களுக்கு பதவி தானாகவே வந்து சேரும் என்பதற்கு மு.கோபிக்கண்ணன் ஒரு எடுத்துக்காட்டாக அமைகிறார். இவரது பணிகள் மேலும் மேலும் சிறக்க வேண்டும் என சக கட்சியை சேர்ந்த பொறுப்பாளர்கள் கூறி மு.கோபிக் கண்ணனுக்கு வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

கட்சிக்காக எனது பணியை மேலும் சிறக்கும் வகையில் எனக்கு ஒன்றிய செயலாளர் பதவியை வழங்கிய, விடுதலை சிறுத்தைகள் கட்சியின் தலைவர் தொல். திருமாவளவனுக்கு தனது நன்றியை காணிக்கை யாக்குகிறேன்.

இதேபோல், தனக்கு பதவி உயர்வுக்கு காரணமாக இருந்து வந்த வி.சி.க.,வின் மண்டல செயலாளர் செ.நன்மாறன், மாவட்ட செயலாளர் ஆ.மதியழகன் ஆகியோருக்கும், கட்சி பொறுப்பாளர்கள், நிர்வாகிகள், தொண்டர்களுக்கும் ஒன்றிய செயலாளர் மு.கோபிக் கண்ணன் தனது நன்றியை தெரிவித்துள்ளார்.

## வேத துர்க்கை அம்மன் ராகு கால பூஜை சிறப்பு வழிபாடு



**கடலூர் , மார்ச் 19:**

கடலூர் மாவட்டம் மேல் புவனகிரி, ஈஸ்வரன் கோயில் தெரு, அருள்மிகு மீனாட்சி உடனுறை வேதபுரீஸ்வரர் திருக்கோவிலில் செவ்வாய்க்கிழமை ராகு கால பூஜையை முன்னிட்டு அருள்மிகு மீனாட்சி உடனுறை வேதபுரீஸ்வரருக்கும் அருள்மிகு வேததுர்க்கைக்கும் சிறப்பு அபிஷேகங்கள், வண்ணமலர் மாலைகளால் அலங்காரங்கள், பிரசாதம், நெய்வேத்தியங்களுடன், மகா தீபாராதனையும் நடைபெற்றது. அனைவருக்கும் பிரசாதங்களும் வழங்கப்பட்டது. தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை

## பங்குனி மாதம் அமாவாசை அன்னதானம்



**கடலூர் , மார்ச் 19:**

கடலூர் மாவட்டம் புவனகிரி ஸ்ரீவாசவி கன்யகா பரமேஸ்வரி அம்மன் ஆலயத்தில் பங்குனி மாதம் அமாவாசையை முன்னிட்டு வாசவி அம்மனுக்கு அபிஷேகங்கள், வண்ணமலர் மாலைகளால் அலங்கரித்து, பிரசாதம், நெய்வேத்தியங்களுடன், மகா தீபாராதனையும் நடைபெற்றது. அமாவாசை முன்னிட்டு 300 நபர்களுக்கு மேல் அன்னதானம் வழங்கப்பட்டது.

ஆர்ய வைஸ்ய சமாஜம் புவனகிரி தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை




பஞ்சாப் நேஷனல் வங்கியில் கடந்த 2 ஆண்டுகளாக பண பரிவர்த்தனை இன்றி இருக்கும் கணக்குகள், வரும் ஏப்ரல் 16 முதல் முன்னறிவிப்பின்றி முடக்கப்பட உள்ளன. இத்தகைய செயலற்ற கணக்குகளை தொடர்ந்து பயன்படுத்த விரும்புவோர், ஏப்ரல் 15-ம் தேதிக்குள் தங்கள் வங்கி கிளைக்கு சென்று KYC விவரங்களை புதுப்பிக்க வேண்டும். வாடிக்கையாளர்கள் தங்கள் கணக்கு முடக்கப்படுவதை தவிர்க்க உடனடியாக இந்த நடவடிக்கையை மேற்கொள்ளுமாறு வங்கி நிர்வாகம் அறிவுறுத்தியுள்ளது.

## குலசேகரன் கோட்டையில் மீனாட்சி அம்மன் கோவிலில் பிரேமலதா பிறந்தநாள் விழா சிறப்பு பூஜை



**வாடிப்பட்டி, மார்ச்.19:**

மதுரை மாவட்டம் வாடிப்பட்டி பேரூர் தேசிய முற்போக்கு திராவிட கழகம் சார்பாக கலக்க பொதுச்செயலாளர் பிரேமலதா பிறந்தநாளை முன்னி ட்டு பழமையும் பெருமையும் வாய்ந்த குலசேகரன் கோட்டை அருள்மிகு மீனாட்சியம்மன் கோவிலில் மீனாட்சி அம்மனுக்கும் சுந்தரேஸ்வரருக்கும் சிறப்பு அபிஷேக ஆராதனை அர்ச்சனை செய்து இனிப்புகள் வழங்கப்பட்ட து. இந்த நிகழ்ச்சியில் மதுரை வடக்கு மாவட்ட அவைத் தலைவர் நல் கர்ணன், மாவட்ட கழக துணை செயலாளர்,சோழவந்தான் தொகுதி பொறுப் பாளர் மருத்துவர் பொன் யாழினி பாலாஜி, மாவட்ட மகளிர ணி துணை செயலாளர் கண்ணம்மா, வாடிப்பட்டி பேரூர் செயலாளர் பாலாஜி, முன்னாள் பேரூர் செயலாளர்கள் மாரியப்பன் மற்ற ஜெயராஜ், பேரூர் பொருளாளர் சோமநாதன், சங்கு பிள்ளை,அரிமலை,முருகன்,மாவட்ட இளைஞரனி துணை செயலாளர் கிருஷ்ணன், மகளிரணி நிர்வாகி ராஜாத்தி மற்றும் பேரூர் கழக இளைஞரணி செயலாளர் நாகராஜன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## புதிய பான் கார்டு விண்ணப்பிக்க புதிய அறிவிப்பு




வரும் ஏப்ரல் 1-ம் தேதி முதல் புதிய பான் கார்டு (PAN Card) விண்ணப்பிக்க ஆதார் அட்டை மட்டும் போதாது என மத்திய அரசு அறிவித்துள்ளது.

இனி விண்ணப்பதாரர்கள் பிறப்பு சான்றிதழ், வாக்காளர் அட்டை அல்லது ஓட்டுநர் உரிமம் போன்ற கூடுதல் ஆவணங்களில் ஏதேனும் ஒன்றை சமர்ப்பிக்க வேண்டியது கட்டாய மாக்கப்பட்டுள்ளது. மேலும், விண்ணப்பதாரரின் ஆதார் அட்டையில் உள்ள அதே பெயரே இனி பான் கார்டிலும் அச்சிடப்படும் என்பதால், பெயர் மாற்ற தவறுகளை தவிர்க்க இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

## ஆர்.கே.நகர் சட்டமன்ற தொகுதி தேர்தல் பணிமனைக்கான பூமிபூஜை விழா

**நிர்வாகிகள் முன்னிலையில் அ.தி.மு.க. மாவட்ட செயலாளர் ஆர்.எஸ்.ராஜேஷ் பிரார்த்தனை வழிபாடு செய்து தொடங்கி வைத்தார்..!**

**சென்னை, மார்ச்.19:**

2026 சட்டமன்ற தேர்தலை முன்னிட்டு ஆர்.கே.நகர் தொகுதிக்கான தேர்தல் தலைமை பணிமனைக்கான பூமிபூஜை விழா தண்டையார்பேட்டை டி.எச்.ரோடு (அப்போலோ) அருகே உள்ள பகுதியில் மாவட்ட செயலாளர் ஆர்.எஸ். ராஜேஷ் தலைமையில் நடைபெற்றது.

இதில் மாவட்ட செய லாளர் ஆர்.எஸ். ராஜேஷ், நிர்வாகிகள் முன்னிலையில் வேதமந்திரங்களுடன் முழங்க சிறப்பு பிரார்த்தனை மற்றும் வழிபாடு செய்து தேர்தல் பணிமனைக்கான பூமிபூஜை தொடங்கப்பட்டது.

இந்நிகழ்வில் பகுதி செயலாளர்கள் சந்தனசிவா, ஆர்.நித்தியானந்தம், எம். என். சீனிவாசபாலாஜி, கழக எம்ஜிஆர் மன்ற மாநில இணை செயலாளர் நேதாஜி கணேசன், தலைமை செயற்குழு உறுப்பினர் நாகரத்தினம்ரவிராஜன், மாவட்ட பொருளாளர் ஏ.கணேசன், மாவட்ட பிற அணி செயலாளர்கள் டி.டீ. ஜனார்த்தனன், ஜெஸ்டின்



பிரேம்குமார், முகேஷ், கழக பொதுக்குழு உறுப்பினர் ஐயப்பா எஸ்.வெங்கடேசன், பகுதி துணை செயலாளர்கள் லயன் ஈ.சண்முகவினாயகம், எஸ்.சுயம்பு, பகுதி துணை செயலாளர்கள் லயன் ஈ.சண்முக வினாயகம், எஸ்.சுயம்பு, வட்ட கழக செயலாளர்கள், வட்ட பொறுப்பாளர்கள் மக்கள் கே.மகேந்திரன், லிங்கேசன் கே.லோகு அருண்பிரசாத், கே.பி.கர்ணன், மகேஷ்குமார், வி.எஸ்.புருஷோத்தமன், எம். சீனிவாசன், ஆர்.சிவகுமார், கே.எஸ்.மூர்த்தி, கேபிள் டிவி ஆனந்தன், ஏ.வினாயகமூர்த்தி, இபி.சேகர், ஆர்.வேல்முருகன், பி.கோவிந்தராஜ், ராம்குமார், மற்றும் ஒ.ஏ.ரவிராஜன், இரா. முரளிமுருகன், பிரின்ஸ் எஸ்.ஏ.சுரேஷ், டி.அஜித்குமார், ஹரிகிருஷ்ணன், பி.எம். குட்டி, மதன்மோகன், டாஸ்மாக் சண்முகம், கார்த்திக், மற்றும் பகுதி வட்ட பிற அணி நிர்வாகிகள் உள்ளிட்ட பலர் இருந்தனர்.

# தேர்தல் கொண்டாட்டம் 2026



## இவர்கள் கூறுவதென்ன?

### தவெகவுடன் கூட்டணி இல்லை: கே.பி.முனுசாமி

தவெகவுடன் கூட்டணி இல்லை என்று அதிமுக துணைப் பொதுச் செயலாளர் கே.பி.முனுசாமி எம்எல்ஏ தெரிவித்தார்.

கிருஷ்ணகிரி புகா் பேருந்து நிலையம் அருகில் உள்ள அண்ணா சிலை எதிரே என்டிஏ கூட்டணி சாா்பில் கண்டன ஆா்ப்பாட்டம் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. அப்போது, அதிமுக துணைப் பொதுச் செயலாளர் கே.பி.முனுசாமி எம்எல்ஏ செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது: அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி கே.பழனிசாமி, தொகுதிப் பங்கீட்டு குழுவை அமைத்துள்ளார்.

விரைவில் அக்குழு வேட்பாளர் நேர்காணலை தொடங்கும். விஜய்யின் தவெகவுடன் கூட்டணிக்காகவே அதிமுக கூட்டணியில் தொகுதிப் பங்கீடு தாமதமாவதாக கூறுவதில் உண்மையில்லை.

தவெகவுடன் கூட்டணி பேச்சுவார்த்தை நடத்தவில்லை என்று எடப்பாடி பழனிசாமி கூறிவிட்டார். எனவே, அக்கட்சியுடன் கூட்டணி இல்லை என்றார்.

### ரஜினிகாந்த் வார்த்தை எப்போதும் தமிழக அரசியலில் முக்கியத்துவம் வாய்ந்தது: வானதி சீனிவாசன்

ரஜினிகாந்த்தின் வார்த்தை எப்போதும் தமிழக அரசியலில் முக்கியத்துவம் வாய்ந்தது. அவரைக் குறித்து அரசியல் கத்துக்குட்டி நபர் பேசுவது கண்டனத்துக்குரியது என வானதி சீனிவாசன் தெரிவித்தார்.

பாலியல் வன்கொடுமை, சட்டம்- ஒழுங்கு சீர்கேடு, போதைப்பொருள் புழக்கம் ஆகியவற்றை தடுக்க தவறிய திமுக அரசைக் கண்டித்து, திருப்பூர் குமரன் சிலை அருகே தேசிய ஜனநாயகக் கூட்டணியின் சார்பில் பாஜக மகளிரணி தேசியத் தலைவர் வானதி சீனிவாசன் தலைமையில் செவ்வாய்க்கிழமை ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

இந்த ஆர்ப்பாட்டத்தில் முன்னாள் தமிழக சட்டப் பேரவை துணைத் தலைவர் பொள்ளாச்சி வி.ஜெயராமன், முன்னாள் அமைச்சர்கள் உடுமலை ராதாகிருஷ்ணன், எம்.எஸ்.எம்.ஆனந்தன், சட்டப் பேரவை உறுப்பினர்கள் சி.மகேந்திரன், கே.என்.விஜயகுமார், பாஜக மாவட்டத் தலைவர்கள் சீனிவாசன், மோகனப்பிரியா, அமமுக மாவட்டச் செயலாளரும், முன்னாள் மேயருமான விசாலாட்சி உள்பட கூட்டணிக் கட்சித் தலைவர்கள் பங்கேற்றனர். இந்த ஆர்ப்பாட்டத்தில் வானதி சீனிவாசன் பேசியதாவது: பெண்களுக்கு எதிரான குற்றங்கள் 69 சதவீதம் அதிகரித்துள்ளன. 169 சதவீதம் வழக்குகள் அதிகமாகி உள்ளன. வீட்டில் உள்ள பெண்களுக்கும் வீட்டு வன்முறை 40 சதவீதம் அதிகரித்துள்ளது. மதுவும் போதையும்தான் இதற்கு காரணம். தமிழகத்தில் ஆட்சி மாற்றத்துக்காக பொதுமக்கள் வெறுப்போடு காத்திருக்கின்றனர்.

கொங்கு மண்டலம் தேசிய ஜனநாயகக் கூட்டணியின் கோட்டை. கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றாததால் மக்கள் போராடி வருகின்றனர். குப்பை நகரமாக திருப்பூர் விளங்கி வருகிறது என்றார்.

### இணையவழியில் வேட்புமனு தாக்கல் செய்ய கூடுதல் வசதி: தேர்தல் ஆணையம்

தமிழகம், புதுச்சேரி, 3 மாநிலங்களுக்கான சட்டப்பேரவைத் தேர்தல் மற்றும் 8 பேரவைத் தொகுதிகளுக்கான இடைத்தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் தங்கள் வேட்புமனுக்களை வலைதளம், கைப்பேசி செயலி என “எண்ம’ முறையில் தாக்கல் செய்யும் கூடுதல் வசதிகளும் தேர்தல் ஆணையத்தால் அளிக்கப்பட்டுள்ளன.

தமிழகம், கேரளம் உள்பட நான்கு மாநிலங்கள் மற்றும் புதுவை யூனியன் பிரதேசம் ஆகியவற்றுக்கான சட்டப்பேரவைத் தேர்தல் தேதிகளை இந்திய தேர்தல் ஆணையம் அண்மையில் அறிவித்தது.

தேர்தலில் போட்டியிடும் கட்சிகளின் வேட்பாளர்கள், வாக்குச் சாவடிக்கு சென்று வாக்கைப் பதிவு செய்யும் வாக்காளர்ளுக்கு உகந்த வகையில் பல்வேறு வசதிகளையும் தேர்தல் ஆணையம் ஏற்பாடு செய்து வருகிறது.

பொதுவாக தேர்தல்களின்போது வேட்பாளர்கள், சுயேச்சை வேட்பாளர்கள் தேர்தல் நடத்தும் அலுவலர்களிடம் நேரில் சென்று வேட்புமனுக்களை தாக்கல் செய்யும் நடைமுறை இருந்து வருகிறது. இத்துடன், இணையவழியிலும், செயலி வழியிலும் வேட்புமனு தாக்கலுக்கான கூடுதல் வசதியையும் தேர்தல் ஆணையம் அளித்து வருகிறது.

வேட்புமனுக்களை கைப்பேசி செயலி மூலம் தாக்கல் செய்யும் வகையில் சுவிதா வேட்பாளர் செயலி உருவாக்கப்பட்டு பயன்பாட்டில் இருந்து வந்தது. அதன் பின்னர் சுவிதா செயலி 2.0 என அச்செயலியில் புதிய அம்சங்கள் சேர்க்கப்பட்டு பயனர் பயன்படுத்துவதற்கு எளிதான வகையில் பல்வேறு அம்சங்களுடன் 2024-இல் மேம்படுத்தப்பட்டது.

அண்மையில் தேர்தல் ஆணையத்தின் பல்வேறு செயலிகளை ஒன்றாகக் கிடைக்கச் செய்யும் வகையில் தொடங்கப்பட்ட இசிஐநெட் இணையதளத்தில் இந்த சுவிதா செயலி 2.0 சேர்க்கப்பட்டுள்ளது.

வேட்புமனுத் தாக்கல் செய்வதற்கு இணையவழி (ஆன்லைன்) முறையைப் பயன்படுத்தும் கூடுதல் வசதி வழங்கப்பட்டு வருகிறது. இதற்கான வேட்புமனு படிவம் HTTPS://SUVIDHA.ECI.GOV.IN என்ற வலைதளத்திலும் கிடைக்கும்.

## தமிழகம் முழுவதும் 2 ஆயிரத்து 160 பறக்கும் படைகள் அமைப்பு; தலைமை தேர்தல் அதிகாரி

தமிழக சட்டசபை தேர்தல் அடுத்த மாதம் 23ம் தேதி நடைபெற உள்ளது. தேர்தலில் பதிவாகும் வாக்குகள் மே 4ம் தேதி எண்ணப்பட்டு அன்றே முடிவுகள் அறிவிக்கப்பட உள்ளன.

சட்டசபை தேர்தல் நெருங்கி வரும் நிலையில் தேர்தல் நடத்தை விதிகள் அமலுக்கு வந்துள்ளன. அதேவேளை தமிழகம் முழுவதும் 2 ஆயிரத்து 160 பறக்கும் படைகள் அமைக்கப்பட்டுள்ளதாக தமிழக தலைமை தேர்தல் அதிகாரி அர்ச்சனா பட்நாயக் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்ட அறிக்கையில்,

* தேர்தல் களத்தில் போட்டியிடும் அரசியல் கட்சியினை சார்ந்த வேட்பாளர்கள் மற்றும் சுயேட்சை வேட்பாளர்கள் உள்ளிட்ட அனைவருக்கும் சமமான சூழலை உருவாக்கி தர வேண்டும் என்ற நோக்கில் வேட்பாளர்களின் தேர்தல் செலவினங்கள் உன்னிப்பாக



கண்காணிக்கப்பட்டு, பதிவு செய்யப்பட்டு வருகிறது.

* ஒரு வேட்பாளர் சட்டசபை தேர்தலின்போது அதிகபட்சம் ரூபாய் 40 லட்சம் வரை மட்டுமே தேர்தல் சம்பந்தமான பணிகளுக்காக செலவினம் மேற்கொள்ள இயலும்.

* வேட்பாளரின் தேர்தல் செலவினங்களை கண்காணிப்பதற்காக, பல்வேறு தேர்தல் செலவின கண்காணிப்பு குழுக்கள் மாவட்ட அளவில் அமைக்கப்பட்டு மாவட்ட தேர்தல் அலுவலரால் கண்காணிக்கப்பட்டு வருகிறது.

* தேர்தல் கண்காணிப்பு பணிகளை தீவிரமாக கண்காணித்திட 234 சட்டமன்ற தொகுதிகளிலும் பறக்கும் படை / நிலை கண்காணிப்பு குழுக்கள் மட்டுமில்லாமல் 25 துறை சார்ந்த கண்காணிப்பு குழுக்களும் இடம் பெற்றுள்ளன. இதில் வருமானவரித்துறை, அமலாக்கத்துறை, சுங்கத்துறை உள்ளிட்ட துறைகளும் அடங்கும்.

* தற்போது 234 தொகுதிகளிலும், தொகுதிக்கு தலா 9 பறக்கும் படைகள், 9 நிலை கண்காணிப்பு குழுக்கள் என்ற விகிதத்தில், தமிழகம் முழுவதும் 2 ஆயிரத்து 160 பறக்கும் படைகள், 2 ஆயிரத்து 160 நிலை கண்காணிப்பு குழுக்கள் தீவிர கண்காணிப்பு பணியில் ஈடுபடுத்தப்பட்டு வருகின்றனர்.

* இக்கண்காணிப்பு குழுக்கள் மூலம் இன்றுவரை (17/03/2026) ரூபாய் 23.28 கோடி மதிப்பிலான பணம் மற்றும் பொருட்கள் கைப்பற்றப்பட்டு விசாரணை நிலையில் உள்ளன.

* பொதுமக்கள் புகார் தெரிவிப்பதற்கு வசதியாக, ஒவ்வொரு மாவட்டத்திலும், மாவட்ட தேர்தல் கட்டுப்பாட்டு அறை அமைக்கப்பட்டு, பொதுமக்கள் அளிக்கும் புகார்கள் மீது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

* தேர்தல் ஆணையத்தால் வழங்கப்பட்ட தேர்தல் நடத்தை விதிகள் அனைத்தும் அனைத்து தரப்பினராலும் முறையாக பின்பற்றப்படுகிறதா என்று மாவட்ட தேர்தல் அதிகாரிகள் கண்காணித்து வருகிறார்கள்.

* அதன்படி இன்று (17.03.2026) வரை தமிழகம் முழுவதும் 1.68 லட்சம் சுவர் விளம்பரங்கள் நீக்கப்பட்டு 61 இனங்களில் குற்றவியல் நடவடிக்கை தொடர்வதற்காக முதல் தகவல் அறிக்கை பதியப்பட்டு தொடர் நடவடிக்கைமேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும் தேர்தல் நடத்தை விதிகளின்படி காலம் சென்ற / மறைந்த தலைவர்களின் சிலைகள் மறைக்கப்படவேண்டியதில்லை என்றும், தற்போது அரசியல் களத்தில் உள்ள தலைவர்களின் புகைப்படங்கள் அரசு பொது இடங்களிலோ, அரசு கட்டிடங்களிலோ வைக்கப்பட்டு இருந்தால் அவைகள் தேர்தல் நடத்தை விதிகள் நடைமுறைக்கு வந்தவுடன், மறைக்கப்பட வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## புதிய வாக்காளராக பதிவு செய்ய விரும்புகிறீர்களா? உங்களுக்கு அரிய வாய்ப்பு

தமிழக சட்டசபைக்கு ஏப்ரல் 23-ம் தேதி ஒரே கட்டமாக தேர்தல் நடைபெறும் என்று இந்திய தேர்தல் கமிஷன் அறிவித்துள்ளது. வேட்பு மனு தாக்கல் வருகிற 30-ம் தேதி தொடங்குகிறது. ஓட்டு எண்ணிக்கை மே 4-ம் தேதி நடக்கிறது.

தமிழகத்தில் மொத்தம் 5. 67 கோடி வாக்காளர்கள் உள்ளனர். இந்த நிலையில், வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்க்க வாய்ப்புள்ளதா என்பது குறித்து தேர்தல் ஆணையம் அறிவிப்பு ஒன்றை வெளியிட்டுள்ளது. அதில் தமிழ்நாடு இறுதி வாக்காளர் பட்டியல் வெளியிடப்பட்டு இருந்தாலும் தகுதி உள்ள புதிய வாக்காளர்கள் தங்களது பெயரை சேர்க்க தேர்தல் ஆணையம் கூடுதல் வாய்ப்பினை வழங்கியுள்ளது.

அதன்படி, வேட்புமனுத் தாக்கல் செய்ய நிர்ணயிக்கப்பட்ட இறுதி தேதிக்கு 10 நாட்களுக்கு முன்னதாகவே வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்க்க விண்ணப்பிக்க வேண்டும். இந்த தேர்தலுக்கான வேட்பு மனு தாக்கலுக்கான இறுதிநாள் ஏப்ரல் 6-தேதியாகும். எனவே அதற்கு முன்பு 10 நாட்கள் என்றால் மார்ச் 27ஆம் தேதிக்குள் ஆன்லைன் மூலமாகவோ அல்லது நேரடியாகவும் சம்பந்தப்பட்ட அலுவலகங்களிலும் விண்ணப்பிக்கலாம் என்று தெரிவிக்கப் பட்டுள்ளது. மேலும் அவ்வாறு உரிய காலக்கெடுவிற்குள் விண்ணப்பிப்பவர்களின் பெயர்கள் துணை பட்டியலில் சேர்க்கப்படும் என்பதால் அவர்களால் அந்த தேர்தலில் வாக்களிக்க முடியும்.

புதிய வாக்காளராக பதிவு செய்ய விரும்புகிறீர்களா?

VOTERS.ECI.GOV.IN என்ற இணையதளத்தில் படிவம் 6-ஐ பூர்த்தி செய்து, உங்களது பெயர் வாக்காளர் பட்டியலில் இடம்பெறுவதை உறுதி செய்துகொள்ளுங்கள் என தமிழ்நாடு தலைமைத் தேர்தல் அதிகாரி எக்ஸ் தளத்தில் பதிவிட்டுள்ளார்.

வாக்காளர் பட்டியலில் உங்களது பெயர் உள்ளதா?

வாக்காளர் பட்டியலில் உங்கள் பெயர் உள்ளதா? என்பதை VOTERS.ECI.GOV.IN என்ற இணையதளம் மூலம் சரிபார்த்துக் கொள்ளலாம். VOTERS.ECI.GOV.IN இணையதளத்தில் SEARCH YOUR NAME IN VOTE LIST- செய்து தேவையான விவரங்களை கொடுத்து உங்களது பெயரை சரிபார்த்துக் கொள்ளலாம்.

## தேசிய ஜனநாயக கூட்டணியில் விரைவில் தொகுதிப் பங்கீடு: நயினார் நாகேந்திரன் தகவல்

திருநெல்வேலியில் செய்தியாளர்களிடம் அவர் கூறியதாவது: நடிகர் விஜய்யின் தமிழக வெற்றிக் கழகம் தனித்துப் போட்டியிடுவது அல்லது கூட்டணி வைப்பது என்பது அவர்களின் உரிமை. இதைப் பற்றி நான் ஏற்கனவே பலமுறை தெளிவுபடுத்திவிட்டேன். திமுக எப்படி கூட்டணி அமைத்து போட்டியிடுகிறதோ அதேபோல அவர்களும் ஒரு நிலைப்பாட்டை எடுத்துள்ளனர். இதில் நான் கருத்துச் சொல்ல ஏதுமில்லை.



எவ்வளவு பெரிய பணபலம் இருந்தாலும், இந்தியாவை டாட்டாவோ பிர்லாவோ ஆள முடியாது. திமுகவிடம் 50,000 முதல் 60,000 கோடி ரூபாய் பணம் இருக்கலாம், ஆனால் மக்கள் மனம் யாரிடம் இருக்கிறது என்பதுதான் முக்கியம். 5 ஆண்டுகளுக்கு முன் கொடுத்த வாக்குறுதிகள் எதையும் நிறைவேற்றவில்லை. சொத்து வரி உயர்த்தப்படாது என்று கூறிவிட்டு 300 மடங்கு உயர்த்தியுள்ளனர். மின்கட்டணத்தை உயர்த்த மாட்டோம் என கூறிவிட்டு உயர்த்திவிட்டனர். மாதந்தோறும் மின்கணக்கெடுப்புமுறை இன்னமும் அமல்படுத்தப்படவில்லை.

தமிழகத்திற்கு சாலைகள் மற்றும் பாலங்கள் அமைப்பதற்காக மத்திய அரசு இதுவரை 14 லட்சம் கோடி ரூபாய் வழங்கியுள்ளது. ஆனால்,எதையுமே தரவில்லை என தமிழக அரசு பொய் கூறுகிறது. ரேஷன் கடைகளில் மத்திய அரசு இலவசமாக வழங்கும் பொருட்களுக்கு, மாநில அரசு தனது ஸ்டிக்கரை ஒட்டித் தங்களது திட்டம் போலக் காட்டி வருகிறது. தமிழகத்தில் சட்டம் ஒழுங்கு முற்றிலும் சீர்குலைந்துள்ளது.

தேர்தல் வேட்புமனுத் தாக்கலுக்கு இன்னும் 12 நாட்கள் அவகாசம் உள்ளது. பாஜகவின் தேர்தல் பொறுப்பாளர் மத்திய அமைச்சர் பியூஷ் கோயல் சென்னை வரவுள்ளார். அவர் வந்தவுடன் தொகுதி பங்கீடு குறித்துப் பேசி இறுதி செய்யப்படும். அதிமுக உள்ளிட்ட கட்சிகளுடன் இணைந்து நாங்கள் ஒற்றுமையாகச் செயல்படுவோம் என்றார்.

தொகுதி மாறுவது குறித்த விமர்சனங்களுக்கு, வேட்புமனு தாக்கல் செய்த பின்பு இதற்கு பதில் சொல்கிறேன் என்று கூறினார். சர்வதேச அளவில் நிலவும் போர்ச் சூழலால் சமையல் எரிவாயு சிலிண்டர் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. இன்னும் 10 முதல் 15 நாட்களில் இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு கிடைக்கும் என்று தெரிவித்தார்.

## கலெக்டர் அலுவலகத்தில் மனு அளிக்க புதிய நடைமுறை: தேர்தல் விதிகளால் மாற்றம்



தமிழகம் முழுவதும் தேர்தல் நடத்தை விதிமுறைகள் அமலில் இருப்பதால், வாரந்தோறும் திங்கட்கிழமை நடைபெறும் நேரடி மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் ரத்து செய்யப்பட்டுள்ளது. இருப்பினும், பொதுமக்களின் அத்தியாவசியத் தேவைகள் மற்றும் புகார்களைப் பரிசீலிக்க தூத்துக்குடி மாவட்ட நிர்வாகம் இரண்டு எளிதான வழிமுறைகளை அறிவித்துள்ளது.

மனுக்களை அஞ்சல் வழியாக அனுப்பலாம். பொதுமக்கள் தங்கள் கோரிக்கை மனுக்களைத் தபாலில் எழுதி, “மாவட்ட ஆட்சியர் அலுவலகம், தூத்துக்குடி” என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கலாம். இவை உரிய முறையில் பரிசீலிக்கப்படும்.

கலெக்டர் அலுவலகத்திற்கு நேரில் வரக்கூடிய பொதுமக்கள், அலுவலக வளாகத்தில் இதற்கென பிரத்யேகமாக வைக்கப்பட்டுள்ள “மனுக்கள் பெட்டியில்” தங்களது கோரிக்கை மனுக்களை நேரடியாகச் செலுத்தலாம்.

மறு உத்தரவு வரும் வரை மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டங்கள் நேரில் நடைபெறாது என்பதால், பொதுமக்கள் மேற்கண்ட வழிமுறைகளைப் பயன்படுத்தித் தங்கள் மனுக்களைச் சமர்ப்பிக்குமாறு மாவட்ட கலெக்டர் கேட்டுக்கொண்டுள்ளார்.

## திமுகவில் வேட்பாளர் தேர்வு மும்முரம்: அறிவாலயத்தில் தொடங்கியது நேர்காணல்



சட்டப்பேரவை தேர்தலில் புதுச்சேரியில் திமுக சார்பில் போட்டியிட விருப்ப மனு அளித்தவர்களுக்கு நேற்று அண்ணா அறிவாலயத்தில் நேர்காணல் நடத்தப்பட்டது.

தமிழகத்தில் சட்டப்பேரவை தேர்தல் ஏப்ரல் 23-ம் தேதி நடைபெறவுள்ளது. புதுச்சேரியில் ஏப்ரல் 9-ம் தேதி வாக்குப்பதிவு நடைபெறுகிறது. இதையடுத்து ஆளும் கட்சியான திமுக தேர்தல் பணிகளை தீவிரப்படுத்தியுள்ளது.

இதனிடையே திமுக-வில், தேர்தலில் போட்டியிடுவதற்கான விருப்ப மனுக்கள் கடந்த பிப்ரவரி 20 முதல் மார்ச் 6-ம் தேதி வரை பெறப்பட்டன. இதில் அமைச்சர்கள், மூத்த நிர்வாகிகள், இளைஞரணி பொறுப்பாளர்கள் என 15,372 பேர் விருப்ப மனுக்களை வழங்கியிருந்தனர்.

இந்நிலையில், விருப்ப மனு அளித்தவர்களுக்கான நேர்காணல் சென்னை அண்ணா அறிவாலயத்தில் நேற்று தொடங்கியது. முதல் நாளில் புதுச்சேரி தொகுதிகளில் போட்டியிட விருப்ப மனுக்கள் வழங்கிய 116 பேர்களிடம் நேர்காணல் நடத்தப்பட்டது. திமுக தலைவர் மு.க ஸ்டாலின், பொதுச்செயலாளர் துரைமுருகன், பொருளாளர் டி.ஆர்.பாலு, முதன்மைச் செயலாளர் கே.என்.நேரு, அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, புதுச்சேரி மண்டல பொறுப்பாளர் ஜெகத்ரட்சகன் எம்பி ஆகியோர் அடங்கிய குழு விருப்ப மனு அளித்தவர்களிடம் தனித் தனியாக நேர்காணல் நடத்தியது. அப்போது தொகுதி நிலவரம், வெற்றி வாய்ப்பு, தேர்தல் செலவுகள் உள்ளிட்ட விவரங்களை முதல்வர் ஸ்டாலின் கேட்டதாகக் கூறப்படுகிறது.

புதுச்சேரி தேர்தலில் காங்கிரஸுடன் தொகுதிப் பங்கீடு இன்னும் நிறைவடையாத நிலையில், அங்கு விருப்ப மனு அளித்தவர்களிடம் திமுக நேர்காணல் நடத்தி இருக்கிறது.

புதுச்சேரியை தொடர்ந்து தமிழகத்தில் உள்ள அனைத்து சட்டப்பேரவை தொகுதிகளுக்கான வேட்பாளர் நேர்காணல் இன்று (மார்ச் 18) தொடங்கி மார்ச் 22-ம் தேதி வரை நடைபெறவுள்ளது அதேபோல், தேர்தல் முடிவு வெளியாகும் நாளுக்கான கவுன்ட்டவுன் டிஜிட்டல் திரையும் அறிவாலயம் வளாகத்தில் வைக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

# இன்று திருமலையில் உகாதி ஆஸ்தானம்

திருமலை, மார்ச் 19:

திருமலையில் உள்ள ஏழுமலையான் கோயிலில் ஒவ்வொரு ஆண்டும் தெலுங்கு வருடப்பிறப்பை வெகுசிறப்பாக கொண்டாடுவது வழக்கம். அதுபோல் இந்த ஆண்டு இன்று (19-ம் தேதி) உகாதி ஆஸ்தானம் கடைப்பிடிக்கப்பட உள்ளது. இதனையொட்டி வரும் செவ்வாய்க்கிழமை 17-ம் தேதி ஏழுமலையான் கோயிலில் ஆழ்வார் திருமஞ்சன சேவை நடைபெறவுள்ளது. இதனையொட்டி அன்றைய தினம் கோயில் முழுவதும் வாசனை திரவியங்களால் சுத்தம் செய்யப்பட்டு, 12 மணிக்கு மேல் பக்தர்கள் சுவாமி தரிசனம் செய்ய அனுமதிக்கப்படுவார்கள். அதன் பின்னர் 19-ம் தேதி உகாதி ஆஸ்தானம் நடைபெற உள்ளது. அதன் பின்னர் பக்தர்கள் அனைவருக்கும் 'உகாதி பச்சடி' வழங்கப்படும். இதனைத் தொடர்ந்து வரும் மார்ச் 27-ம் தேதி ராம நவமியையொட்டி, திருமலை கருடாழ்வார் சன்னதி அருகே ராம நவமி ஆஸ்தானம் கடைப்பிடிக்கப்பட உள்ளது. இதனால் மார்ச் மாதத்தில் மட்டும் ஏழுமலையான் கோயிலில் 3 ஆஸ்தானங்கள் நடைபெற உள்ளன.


# பரமத்திவேலூர்: சிவன் கோவில்களில் பிரதோஷ வழிபாடு

பரமத்திவேலூர், மார்ச் 19:

நாமக்கல் மாவட்டம் பரமத்தி வேலூர் தாலுகா கோப்பணம்பாளையம் பரமேஸ்வரர் ஆலயத்தில் உள்ள நந்தி பெருமானுக்கு பங்குனி மாத தேய்பிறை பிரதோஷத்தை முன்னிட்டு பால், தயிர், பன்னீர், இளநீர், சந்தனம், மஞ்சள், திருமஞ்சனம், பஞ்சாமிர்தம் உள்ளிட்ட 18 வகையான திரவியங்களால் அபிஷேகம் நடைபெற்றது. அதனைத் தொடர்ந்து மலர்களால் அலங்காரம் செய்யப்பட்டு தீபாராதனை காட்டப்பட்டது. சிறப்பு பூஜையில் கோப்பணம்பாளையம் மற்றும் சுற்றுவட்டார பகுதிகளைச் சேர்ந்த ஏராளமான பக்தர்கள் கலந்துகொண்டு, பரமேஸ்வரர், நந்தியெம்பெருமான், பரமேஸ்வரி அம்மன் மற்றும் பரிவார தெய்வங்களை தரிசனம் செய்தனர். பக்தர்களுக்கு பிரசாதம் வழங்கப்பட்டது.

அதேபோல் பரமத்தி வேலூரில் 400 ஆண்டுகள் பழமையான எல்லையம்மன் ஆலயத்தில் உள்ள ஏகாம்பரேஸ்வரர் கோவில், பரமத்தி வேலூர் அருகே உள்ள பாண்டமங்கலம் புதிய காசி விஸ்வநாதர், நன்செய் இடையாறு திருவேலீஸ்வரர், மாவுரெட்டி பீமேஸ்வரர், பில்லூர் வீரட்டீஸ்வரர், பொத்தனூர் காசி விஸ்வநாதர், பேட்டை மீனாட்சி சுந்தரேஸ்வரர், பிலிக்கல்பாளையம் கரட்டூர் விஜயகிரி வடபழனியாண்டவர் கோவிலில் எழுந்தருளியுள்ள பருவதீஸ்வரர், வெங்கரை, ரகுநாதபுரம் காவிரி கரையில் அமைந்துள்ள ஸ்ரீ ஜலகண்டேஸ்வரர், பரமத்தி வேலூர் வல்லப விநாயகர் கோவிலில் உள்ள விசாலாட்சி சமேத பானலிங்கவிஸ்வேஸ்வரர், வடகரையாத்தூர் சிவன் கோவில் மற்றும் பரமத்தி வேலூர் சுற்றுவட்டார பகுதியில் உள்ள சிவன் கோவில்களில் பிரதோஷத்தை முன்னிட்டு சிறப்பு அபிஷேக ஆராதனை நடைபெற்றது. சிறப்பு வழிபாடுகளில் அந்தப் பகுதியை சேர்ந்த பக்தர்கள் கலந்து கொண்டு சுவாமி தரிசனம் செய்தனர்.

# கன்னியாகுமரி வெங்கடாஜலபதி கோவிலில் தெலுங்கு வருடப்பிறப்பு விழா



கன்னியாகுமரி, மார்ச் 19:

கன்னியாகுமரி விவேகானந்தபுரம் கடற்கரையில் திருமலை திருப்பதி தேவஸ்தானத்தின் வெங்கடாஜலபதி கோவில் அமைந்து உள்ளது. இந்த கோவிலில் தெலுங்கு வருடப் பிறப்பு விழா நாளை (வியாழக்கிழமை) கொண்டாடப்படுகிறது

இதையொட்டி நாளை காலை 6 மணிக்கு சுப்ரபாத சேவையும் அதைத்தொடர்ந்து வெங்கடாஜலபதிக்கு பூலங்கி சேவை, சிறப்பு வழிபாடு, விசேஷ பூஜைகள், அலங்கார தீபாராதனை போன்றவை நடைபெறுகின்றன.

அதன்பின்னர் காலை 8.30 மணி முதல் 9.30 மணி வரை அர்ச்சகர்கள் பஞ்சாங்கம் வாசிக்கின்றனர். அதன் பிறகு சுவாமிக்கு படைப்பதற்கான பூஜை பொருட்களை கோவில் அர்ச்சகர்கள் மற்றும் நிர்வாகிகள் தலையில் சுமந்து கொண்டு மேளதாளம் முழங்க கோவிலின் வெளி பிரகாரத்தை சுற்றி ஊர்வலமாக எடுத்துச் செல்கின்றனர்.

அந்த பூஜை பொருட்களை வெங்கடாஜலபதி முன்பு படைத்து சிறப்பு வழிபாடு நடக்கிறது. கோவிலில் உள்ள ஸ்ரீதேவி, பூதேவி, கருட பகவான், பத்மாவதி தாயார், ஆண்டாள் ஆகியோருக்கு சிறப்பு வழிபாடுகள் மற்றும் விசேஷ பூஜை நடக்கிறது. அதன் பின்னர் மதியம் 12 மணிக்கு சிறப்பு அன்னதானம் நடக்கிறது.

மாலை 5.30 மணிக்கு தோமாலை சேவையும், மாலை 6 மணிக்கு அன்னதானமும், இரவு 8 மணிக்கு ஏகாந்த சேவையும், சுவாமி பள்ளியறை எழுந்தருளும் நிகழ்ச்சியும் நடக்கிறது.

இதில் திரளான பக்தர்கள் கலந்து கொண்டு சாமி தரிசனம் செய்கின்றனர்.

இதற்கான ஏற்பாடுகளை கன்னியாகுமரி திருமலை திருப்பதி தேவஸ்தான வெங்கடாஜலபதி கோவில் ஆய்வாளர் ராமையா, கோவில் நிர்வாகி லட்சுமிபதி மற்றும் பக்தர்கள் செய்து வருகின்றனர்.

# வல்லக்கோட்டை முருகன் கோவிலில் சிறப்பு வழிபாடு



காஞ்சிபுரம், மார்ச் 19:

காஞ்சிபுரம் மாவட்டம் ஶ்ரீபெரும்புதூர் அடுத்த வல்லக்கோட்டையில் புகழ்பெற்ற சுப்பிரமணிய சுவாமி திருக்கோவில் உள்ளது. இங்கு பங்குனி மாத செவ்வாய்க்கிழமையினை முன்னிட்டு சிறப்பு வழிபாடு நடைபெற்றது.

அதிகாலை 4 மணிக்கு சந்நிதி திறக்கப்பட்டு கோ பூஜை செய்யப்பட்டது. பிறகு மூலவருக்கு பால் தயிர் மஞ்சள் விபூதி முதலிய பொருட்களால் சிறப்பு அபிஷேகம் நடைபெற்று, மஞ்சள் சாமந்தி மாலை அலங்காரம் செய்யப்பட்டது. இதனைத்தொடர்ந்து பக்தர்கள் தரிசனத்திற்கு அனுமதிக்கப்பட்டனர்.

உற்சவர் வள்ளி தெய்வானை சமேத சுப்பிரமணிய சுவாமிக்கு காலையில் பால் அபிஷேகம் செய்யப்பட்டு ரோஜா, சாமந்தி, சம்பங்கி மாலைகள் அணிந்து அலங்காரம் செய்யப்பட்டது. சண்முகருக்கு சத்ரு சங்கார திரிசதீ யாகமும் அர்ச்சனையும் நடைபெற்றது. முருகப் பெருமானுக்கு உகந்த செவ்வாய்க்கிழமை என்பதால் இன்று திரளான பக்தர்கள் வல்லக்கோட்டைக்கு வந்து சுவாமி தரிசனம் செய்தனர். பக்தர்களுக்கு தேவையான குடிநீர்வசதி, கழிப்பிட வசதிகளை திருக்கோவில் நிர்வாகத்தினர் செய்திருந்தனர். பக்தர்களுக்கு சர்க்கரைப் பொங்கல், கதம்பசாதம், நீர்மோர், பிரசாதங்களும் வழங்கப்பட்டன.

# திருவாலங்காடு வடாரண்யேஸ்வரர் கோவிலில் தீர்த்தவாரி



மயிலாடுதுறை, மார்ச் 19:

மயிலாடுதுறை மாவட்டம் திருவாலங்காட்டில் திருவாவடுதுறை ஆதீனத்திற்குச் சொந்தமான வண்டார்குழலி அம்பிகை சமேத வடாரண்யேஸ்வரர் கோவில் அமைந்துள்ளது. புத்திர பாக்கியம் அருளும் புத்திர காமேஸ்வரர் இங்கு எழுந்தருளியிருப்பது, இக்கோவிலின் சிறப்பு அம்சம் ஆகும்.

ஆண்டுதோறும் பங்குனி அமாவாசை நாளில் கோவிலின் தீர்த்தமான புத்திர காமேஸ்வரர் தீர்த்தத்தில் தீர்த்தவாரி உற்சவம் நடைபெறும். அந்த வகையில் இன்று தீர்த்தவாரி உற்சவம் நடைபெற்றது. இதையொட்டி வண்டார்குழலி அம்பிகை மற்றும் வடாரண்யேஸ்வரருக்கு சிறப்பு மலர் அலங்காரம் செய்யப்பட்டது.

சிறப்பு ஹோம பூஜைகளுக்கு பிறகு புத்திர காமேஸ்வரர் தீர்த்தத்தில் அஸ்திர தேவருக்கு மஞ்சள் பொடி, மாபொடி, திரவிய பொடி, பால், சந்தனம், இளநீர் உள்ளிட்ட திரவியங்களை கொண்டு சிறப்பு அபிஷேகம் நடந்தது. தொடர்ந்து சிவாச்சாரியார்கள் வேத மந்திரங்கள் முழங்க வாண வேடிக்கைகளுடன் மகா தீர்த்தவாரி உற்சவம் நடைபெற்றது. இதில் தமிழகத்தின் பல்வேறு பகுதிகளைச் சேர்ந்த ஏராளமான பக்தர்கள் தம்பதியினராய் கலந்துகொண்டு நீராடி வழிபட்டனர்.




வறுமை, நோய், அறியாமை மூன்றும் முற்றிலும் நீங்கும்
போர் என்னும் பொல்லா அரக்கனை பூமியில் இல்லாமல் ஆக்கினால்...!
தொடர்புக்கு: 9791667528



## நலம் தரும் மருத்துவம்

# புற்றுநோய் செல்களை வேட்டையாடும் எலுமிச்சை தோல்!

எலுமிச்சை சாற்றில் இருப்பதை விட அதன் தோலில்தான் (LEMON PEEL BENEFITS) வைட்டமின்கள், மினரல்கள், நார்ச்சத்து அதிகம் உள்ளது. எலுமிச்சை தோலில் பொட்டாசியம், கால்சியம், வைட்டமின் சி, வைட்டமின் ஏ, ஆன்டி ஆக்ஸிடென்ட்கள் நிறைந்துள்ளன. எலுமிச்சை தோலில் நிறைந்திருக்கும் ஆன்டி ஆக்ஸிடென்ட்கள் நோய் எதிர்ப்பு சக்தியை நம் உடலில் அதிகரிக்கச் செய்கிறது.

எலுமிச்சை தோலுடன் தயாரிக்கப்பட்ட ஊறுகாயை உணவில் சேர்த்துக்கொள்ள சில வகை சருமப் புற்று நோய்கள் வராமல் தடுக்கலாம். இதன் தோலில் இருந்து கிடைக்கும் எண்ணெயில் டி-லைமோனீன் என்ற ஆன்ட்டி ஆக்சிடென்ட் அதிக அளவில் உள்ளது. இது பெருங்குடல், மார்பக புற்றுநோய் வராமல் தடுக்கும். எலுமிச்சை தோலில் இருக்கும் ஃப்ளேவனாய்டு வைட்டமின் சியை உள்வாங்கிக் கொள்ளும் திறனை அதிகரிக்கச் செய்கிறது.

பற்கள், எலும்புகளுக்கு வலு சேர்க்கும் கால்சியம் இதில் உள்ளது. எலுமிச்சை தோலில் சிட்ரிக் அமிலம் நிறைந்துள்ளது. இது பற்கள் மற்றும் ஈறு தொடர்பான பிரச்னைகளை எதிர்த்துப் போராட உதவுகிறது. இதில் உள்ள வைட்டமின் சி நம் உடலில் உள்ள குருத்தெலும்புகள், தசைநார்கள், தசை நாண்கள், சருமம், இரத்தக் குழாய்களை கட்டமைக்கும் செயல்களில் உதவுகின்றன.

எலுமிச்சை தோலில் கரோட்டினாய்டுகள் அதிகமாக உள்ளதால் இவை கண்களை பாதுகாக்கும். இதில் உள்ள நார்ச்சத்து மலச்சிக்கல் ஏற்படாமல் தடுக்கும். உடல் எடையை சீராக வைத்துக் கொள்ளவும் உதவும். பிரிட்ஜில் சில எலுமிச்சை தோல்களை போட்டு வைக்க குளிர்சாதனப் பெட்டியிலிருந்து துர்நாற்றம் வருவதை தடுக்கலாம். எலுமிச்சை தோல்களை நன்கு வெயிலில் காயவைத்து பொடித்து வைத்துக் கொள்ளவும். அரிசி மாவு ஒரு ஸ்பூன், எலுமிச்சை தோல் பொடி அரை ஸ்பூன், சிறிதளவு பால் கலந்து குழைத்து முகத்தில் தடவி 20 நிமிடங்கள் கழித்து குளிர்ந்த நீரால் கழுவி விட முகம் பளிச்சென்று மாசு மருவின்றி காணப்படும்.

எலுமிச்சை தோல்களை கொதிக்கும் நீரில் போட்டு சிறிது ஆறியதும் வடிகட்டி அதனை முக டோனராகப் பயன்படுத்தலாம். எலுமிச்சை தோல் பொடியுடன் ஓட்ஸ் ஒரு ஸ்பூன், சிறிது தேன் கலந்து ஃபேஸ் ஸ்க்ரபாகப் பயன்படுத்தலாம். செப்பு, பித்தளைப் பாத்திரங்களை எலுமிச்சை தோலுடன் சிறிது உப்பு சேர்த்து தேய்த்துக் கழுவ பளிச்சென்று மின்னும். எலுமிச்சை தோலை தினமும் ஏதாவது ஒரு வகையில் உணவில் சேர்த்துக்கொள்ள உடலிலுள்ள நச்சுக்களை வெளியேற்றி பலவிதமான உடல்நல பாதிப்புகளிலிருந்து நம்மை பாதுகாக்கும்.

# புல் மூலம் முழு நகரத்திற்கே மின்சாரம்... விஞ்ஞானிகளின் அதிரடி கண்டுபிடிப்பு!

இயற்கை மனிதர்களை அடிக்கடி ஆச்சரியப்படுத்திக் கொண்டே இருக்கிறது. சில நேரங்களில் விஞ்ஞானிகள் கண்டுபிடிக்கும் விஷயங்கள் எதிர்கால தொழில் நுட்பத்தையே மாற்றக்கூடிய அளவுக்கு முக்கியமானதாக உள்ளது.

சமீபத்தில் ஆசியாவில் மேற்கொள்ளப்பட்ட ஒரு ஆராய்ச்சி இதற்கு சிறந்த உதாரணம். ஒரு அரிய தாவரம் அதன் உடலில் கிரிஸ்டல்களை உருவாக்கும் திறன் கொண்டது என்று விஞ்ஞானிகள் செய்த ஆய்வில் கண்டுபிடிக்கப் பட்டுள்ளது. இந்த கண்டுபிடிப்பு மூலம் எதிர்காலத்தில் முழு நகரங்களுக்கே மின்சாரம் வழங்கும் புதிய வழிகளை உருவாக்க இயலும் என்று ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர்.

இந்த ஆச்சரியமான தாவரம் ஆசியாவின் பல பகுதிகளில் காணப்படுகிறது. இதன் பெயர் BLECHNUM ORIENTALE. இது ஒரு வகை பச்சை நிற புல்வகை. இது தென் சீனா உள்ளிட்ட ஆசியாவின் ஈரப்பதமான பகுதிகளில் வளரக்கூடிய ஒரு சாதாரண காட்டுச் செடி.

விஞ்ஞானிகள் இந்த செடியை ஆய்வு செய்தபோது, இந்த தாவரம் மண்ணில் உள்ள 'RARE EARTH ELEMENTS' எனப்படும் அரிய உலோகங்களை அதன் வேர் மூலம் உறிஞ்சும் திறன் கொண்டது என்பதை கண்டுபிடித்தனர். இந்த தன்மை கொண்ட செடிகளை 'HYPERACCUMULATOR PLANTS' என்று அழைக்கின்றனர். அதாவது மண்ணில் உள்ள உலோகங்களை சாதாரண தாவரங்களைவிட அதிக அளவில் உறிஞ்சி சேமிக்கும் திறன்கொண்டவை. இந்ததிறன் காரணமாகவே விஞ்ஞானிகள் இந்த தாவரத்தை ஆராய்ந்து வந்தனர்.



ஆய்வில், இந்த தாவரம் அதன் திசுக்களில் வேர் மூலம் உறிஞ்சிய உலோகங்களை மிகச் சிறிய அளவிலான மோனசைட் என்ற கனிம கிரிஸ்டல்களாக மாறுகின்றன என்பது தெரியவந்துள்ளது. இந்த கிரிஸ்டல்கள் நானோ அளவில் இருக்கும். அதாவது, மனிதக் கண்களுக்கு தெரியாத அளவு சிறியவை.

மோனசைட் என்பது நியோடிமியம், லாந்தனம், செரியம் போன்ற அரிய உலோகங்களை கொண்ட முக்கியமான கனிமமாகும். இவை மின்சார வாகனங்கள், ஸ்மார்ட் ஃபோன்கள், காற்றாலை டர்பைன்கள் மற்றும் பல உயர் தொழில்நுட்ப சாதனங்களில் பயன்படுத்தப் படுகின்றன. இந்த RARE EARTH ELEMENTS இல்லாமல் நவீன தொழில்நுட்ப உலகமே இயங்காது.

ஆனால், இந்த வகை கனிமங்கள் பெரும்பாலும் பூமியின் ஆழத்தில் அதிக வெப்பம் மற்றும் அழுத்தத்தில் உருவாகும். இவற்றை பெறுவதற்கு பெரிய அளவில் சுரங்கம் தோண்ட வேண்டியிருக்கும். இது சுற்றுச்சூழலுக்கு பெரும் சேதத்தை ஏற்படுத்துகிறது.

ஆனால், இந்தகண்டுபிடிப்பு 'PHYTOMINING' என்ற புதிய கருத்துக்கு வழி வகுக்கிறது. PHYTOMINING என்றால், உலோகங்கள் நிறைந்த மண்ணில் இந்த மாதிரியான செடிகளை வளர்த்து, அவை மண்ணிலிருந்து உலோகங்களை உறிஞ்சும் வரை காத்திருந்து பின்னர் செடியை அறுவடை செய்து, அதன் பிறகு அந்த செடியிலிருந்து கிரிஸ்டல்கள் அல்லது உலோகங்களை எளிதாகப் பெறும் செயல்முறை. இந்த முறை சுற்றுச்சூழலுக்கு ஏற்படும் சேதத்தைக் குறைக்க உதவுகிறது.

RARE EARTH ELEMENTS பல்வேறு பசுமை ஆற்றல் தொழில்நுட்பங்களின் முக்கிய அங்கமாக உள்ளன. காற்றாலை மின் உற்பத்தி, மின்சார வாகனங்கள், சோலார் தொழில்நுட்பங்கள் போன்றவற்றில் இந்த உலோகங்கள் பயன்படுத்தப்படு கின்றன. எனவே, இந்த மாதிரியான செடிகள் மூலம் அதிக அளவில் இந்த கனிமங்களை பெற முடிந்தால், எதிர்காலத்தில் பசுமை ஆற்றல் உற்பத்தி மிகவும் எளிதாகவும் மலிவாகவும் மாறலாம். அதனால் ஒரு நாள் முழு நகரங்களுக்கே இந்த தொழில்நுட்பம் மறைமுகமாக ஆற்றல் வழங்க உதவலாம் என்று விஞ்ஞானிகள் நம்புகின்றனர். தற்போது, இந்த கண்டுபிடிப்பு ஆரம்ப கட்டத்தில் உள்ளது. இந்த செடி எப்படி இந்த கிரிஸ்டல்களை உருவாக்குகிறது? இதை பெரிய அளவில் வளர்க்க முடியுமா? மற்ற செடிகளுக்கும் இதே திறன் இருக்கிறதா? என இன்னும் பல கேள்விகளுக்கு விஞ்ஞானிகள் பதில் தேடிக்கொண்டிருக்கின்றனர்.



# விளையும் வினை

ஜெயபால் ஒரு கார் டிராவல்ஸ் நிறுவனம் நடத்தி வந்தார். அவரிடம் நாணா என்பவர், நண்பர் போல் பழகிய தனபால் கேட்டதற்காகத் தனது காரை மூன்று ஆண்டு ஒப்பந்த அடிப்படையில் ஒப்படைத்தார்.

மாதம் 20,000 ரூபாய் வாடகை எனப் பேசப்பட்டது. ஆரம்பத்தில் சரியாகப் பணம் கொடுத்த ஜெயபால், பின் ஏமாற்றத் தொடங்கினார்.

கொடுத்த செக்குகளும் வங்கியில் பணம் இல்லாமல் திரும்பின. வழக்கு நீதிமன்றத்திற்குச் சென்றது. ஆனால், அங்கு "பணத்தைத் திருப்பிக் கொடுத்துவிட்டேன்" எனப் பொய் சாட்சி சொல்லி வழக்கை இழுத்தடித்தார் ஜெயபால்.

நாட்கள் நகர்ந்தன. ஜெயபாலின் தொழிலில் திடீர் நஷ்டம் ஏற்பட்டது. போதாக்குறைக்கு, அவருக்குக் கடுமையான மூச்சுத்திணறலும் உடல் உபாதைகளும் ஏற்பட்டன. மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட அவருக்குச் செலவு செய்தே கையில் இருந்த பணம் கரைந்தது.

ஒரு நள்ளிரவில் வலியால் துடித்த ஜெயபாலைப் பார்த்த அவர் மனைவி மல்லிகா கண்ணீருடன் பேசத் தொடங்கினார். "ஏங்க, நாம ஏன் இப்படி கஷ்டப்படுறோம்னு யோசிச்சீங்களா? அந்த நாணா சார் உங்களை நம்பித் தானே காரைக் கொடுத்தாரு? உழைக்காத காசு என்னைக்குமே ஒட்டாதுங்க.

நீங்க கோர்ட்டுல பொய் சொல்லி அவரை ஏமாத்துன அந்தப் பாவம்தான் இன்னைக்குத் தீராத நோயா வந்து நிக்குது. அந்த மனுஷனோட சாபம் நம்ம நிம்மதியையே பறிச்சிருச்சு. இனியும் வேணாங்க இந்த அநியாயம்," என்று விம்மினாள். மனைவியின் வார்த்தைகள் ஜெயபாலின் இதயத்தைத் தைத்தன.




தன் தவறை உணர்ந்து கண்கள் கலங்கினார். மறுநாளே நாணாவை வரவழைத்தார். "சார், என்ன மன்னிச்சிடுங்க. பணத்தாசையில தப்பு பண்ணிட்டேன். கோர்ட்டுல சொன்னது அத்தனையும் பொய். இதோ உங்களுக்கான பாக்கிப் பணத்தை செட்டில் பண்ணிடுறேன். வழக்கை வாபஸ் வாங்கிக்கோங்க," என்று கூறிப் பணத்தைத் திருப்பிக் கொடுத்தார்.

மனபாரம் குறைந்ததும், ஜெயபாலின் உடல்நிலையிலும் முன்னேற்றம் தெரிந்தது. நேர்மையான உழைப்பே நிலைக்கும் என்ற உண்மையை அவர் உணர்ந்தார்.



-லால்குடி வெ.நாராயணன்

# "ஆறுதல் சொல்லாதீர்கள்"

காலை முதலே அந்த வீட்டில் பரபரப்பு மித மிஞ்சியிருந்தது. மாடத்தில் மஞ்சள் நீர் தெளிக்கப்பட்டிருக்க, வாசலில் பெரிய வண்ணக் கோலம். நடுவில் ஒரு சின்ன பூக்கோலம்.
நாதஸ்வரத்தின் ஓசை காற்றில் தவழ்ந்திருக்க, அந்த வீட்டின் இளவரசி சாவித்திரி மஞ்சள் நிறப் பட்டுப் புடவை, நெற்றியில் குங்குமம், தலை முழுதும் மல்லிகைப்பூ என அழகு தேவதையாய் கண்ணாடி முன் நின்றாள். அவள் கண்களில் கனவு தெரிந்தது. "என் இல்லற வாழ்க்கை இன்று துவங்கப் போகுது..." என்ற அமைதியான மகிழ்ச்சி.
அவள் தாய் லட்சுமி மகளின் பின்னால் வந்து தோளில் கை வைத்தாள். "என் பொண்ணைப் பார்த்தா என் கண்ணே பட்டுடும் போலிருக்கே" என்றவள் கண்களில் நீர் துளித்தது.
மணமேடையில் மணமகன் பக்கத்தில் அமர்ந்திருந்த போது சாவித்திரியின் மனம் உற்சாக ஊஞ்சலில் ஆடியது.
நாதஸ்வர ஓசை சற்று அதிகமான போது, "கெட்டி மேளம்... கெட்டி மேளம்!" என்று யாரோ கத்தினர்.
அந்த நிமிடத்தில், மணமகன் வீட்டு உறவுக்காரர்களில் ஒரு பெரியவர் சாவித்திரியின் தந்தையைத் தனியே அழைத்துச் சென்றார்.
"பேசியபடி வரதட்சணைப் பணம் இன்னும் முழுசா வரலையே..." என்றார் அந்தப் பெரியவர்.
சாவித்திரியின் தந்தை கைகளைக் கூப்பி, "என்னால முடிஞ்ச வரைக்கும் கொடுத்துட்டேன் ஐயா... கொஞ்சம் டைம் குடுங்க மீதியைக் கல்யாணம் முடிந்த பிறகு தந்திடறேன்!"
"அப்படின்னா இந்தக் கல்யாணம் நடக்காது..." என்ற பெரியவர் கோபத்துடன் நடந்தார். நாதஸ்வரம் திடீரென்று நின்றது.
திருமணத்திற்கு



வந்திருந்தவர்கள் ஒருவர் முகத்தை இருவர் பார்த்துக் கொண்டனர்.
. சாவித்திரி இன்னும் மேடையிலேயே அமர்ந்திருந்தாள்.
என்ன நடக்கிறது? என்று அவளுக்குப் புரியவில்லை.
பிறகு யாரோ வந்து மெதுவாகச் சொன்னார்கள் "கல்யாணம் நின்னு போச்சு..."
அந்த ஒரு வாக்கியம் அவள் கனவுகளை உடைத்தது.
அந்தச் சம்பவம் ஊரில் பேசு பொருளானது. "பாவம் அந்தப் பொண்ணு..."
"மணமேடையிலேயே நின்னு போச்சாமே..."
"வரதட்சணைதான் காரணமாம்..."
மக்கள் பேசிக் கொண்டே இருந்தார்கள். சிலர் வீட்டுக்குக் கூட்டம் கூட்டமாய் வந்தார்கள்.
"கவலைப்படாதே..."
"இதுவும் ல்லதுக்குத்தான்..."
"உனக்கு இன்னும் நல்ல வரன் கிடைக்கும்..."
அவர்கள் நினைத்தது ஆறுதல். ஆனால் அந்த வார்த்தைகள் சாவித்திரியின் உள்ளக் காயத்தை மீண்டும் திறந்தன.
ஒரு நாள் அவள் திடீரென்று கத்தினாள். "போங்க! ... போங்க வெளியே... எனக்கு யாரோட ஆறுதலும் வேணாம்! என்னை அமைதியா விடுங்க!"
வந்தவர்கள் அதிர்ந்து போனார்கள்.
"இவளுக்கு மனசு சரியா இல்ல போல..." என்று பேசிக்கொண்டே வெளியேறினர். அந்தக் கதை வேற மாதிரி ஊரில் பரவியது.
"அந்தப் பொண்ணுக்கு மனநிலை பாதிச்சிடுச்சு..." என்று. அந்த வார்த்தைகள் சாவித்திரியின் தாய் இதயத்தை குத்தின. ஒரு மாலையில் அவள் மெதுவாக சாவித்திரியின் அருகில் உட்கார்ந்தாள்.
சாவித்திரி ஜன்னலுக்கு வெளியே வெறுமனே பார்த்துக் கொண்டிருந்தாள்.
"ஏண்டி சாவித்திரி... ஏன் இப்படி எல்லாரிடமும் கோபமா நடந்துக்கறே?" என்று தாய் சன்னமாய்க் கேட்டாள். சில நிமிடங்கள் அமைதி காத்த சாவித்திரி, பிறகு மெல்லத் திரும்ந்னாள். கண்களில் கண்ணீர் வழிந்தது. "அம்மா... அவர்கள் ஆறுதல் சொல்ல வரும் போது... அந்த மணமேடை நினைவுக்கு வருது... அப்பா கைகளை கூப்பினது நினைவுக்கு வருது... அவர்கள் எழுந்து போனது நினைவுக்கு வருது..." சொல்லும் போது அவள் குரல் உடைந்தது.
"அம்மா... அந்த நிமிஷத்தை நான் மறக்கணும்னு முயற்சி பண்மிட்டிருக்கேன்... ஆனா என்னை அவர்கள் 'பாவம்'ன்னு சொல்லும் ஒவ்வொரு தடவையும் அந்த காட்சி மீண்டும் என் முன்னாடி நிக்குது... அதனால்தான் வலி இன்னும் அதிகமாகுது அம்மா..." குழந்தை போல அழ ஆரம்பித்தாள்.
தாய் அவளைத் தன்னிடம் இழுத்து அணைத்துக் கொண்டாள்.
சாவித்திரி தாயின் மார்பில் முகம் புதைத்துக் கொண்டாள்.



-முகில் தினகரன்
கோயமுத்தூர்.

# Boomer to Gen Z

பாகம் 22



வி.பிரபாவதி
மடிப்பாக்கம்.

வாசுவுக்குக் கவலையாக இருந்தது. அம்மா உடல்நிலைக் குறித்து கவலைக் கொண்டான்.

மாலு அம்மா அப்பாவை நினைத்துக் கொண்டாள். அவர்கள் கிராமத்திலிருந்து வரவில்லை. கொஞ்சம் நிலங்களை குத்தகைக்கு விட்டாலும், சில ஏக்கர்களை வரதன் பார்த்துக் கொண்டார். கோமளத்திற்கும் தள்ளாமை தான்.

பஞ்சு ஐயரும், பார்வதியும் மறைந்த போது பேரன் பேத்திகள், உறவுகள் என கூடி விட்டார்கள். எத்தனை வயதானாலும் அவர்கள் இருப்பார்கள். பார்த்துக் கொள்வார்கள் என்றிருந்த நிலை மாறும் போது மனம் தடுமாற்றம் அடைந்தது உண்மைதான். ஊரில் அனைவரும் துக்கப்பட்டார்கள். அனைத்துக் கட்சியினரும் மாலை மரியாதை செய்தார்கள். குடும்பத்திற்கு பேரிழப்பாக இருந்தது. இயல்பு நிலை திரும்ப பல மாதங்கள் ஆனது.

வரதனுக்கும் போறாது. கோமளம் முட்டுக் கொடுத்து சமாளித்து வருகிறாள். கோடியாத்து வெங்கிட்டு மாமாவின் பிள்ளை சாமாளி என்கிற சாமிநாதன்



இவர்களுக்கு உதவியாக இருக்கிறான். பிரயாணமும் அவ்வளவு எளிதாக இல்லை.

ஸ்ரீஹரியும் சித்ராவும் முடிந்த போது பிள்ளையை அழைத்துக் கொண்டு கிராமத்திற்கு சென்று வருகிறார்கள். சுந்தரிக்குப் புக்ககம் பத்து மைல் தாண்டிதான் இருந்தது. இரண்டு பஸ் பிடித்துப் போகவேண்டும். அவள் ஒரு கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியராக இருந்தாள். முடிந்தபோது அம்மா அப்பாவைப் போய் பார்த்து வந்தாள். அவள் கணவன் மூர்த்தி வங்கியில் வேலை பார்த்தான். அவர்களுக்கும் ஒரு பெண், ஒரு பிள்ளை. இரட்டைக் குழந்தைகள்.

ஸ்ரவந்திக்கு ஜாதகம் எடுத்தாயிற்று. தற்போது ஜாதக பரிவர்த்தனை நிலையங்கள் இருப்பதால் சுவாமியிடம் வைத்துவிட்டு வாசு கைப்பட எழுதின ஜாதகத்தை இருவரும் சேர்ந்து போய் கொடுத்து விட்டு வந்தனர். அவ்வப்போது சென்று பிள்ளை ஜாதகம் வாங்கி ஊருக்கு அனுப்பிப் பொருத்தம் பார்த்தனர். ஒன்னும் பெரிதாக அமையவில்லை.

"மாமி நான் சுந்தரம் பேசறேன். ஒங்காத்துப் பொண்ணு ஸ்ரவந்தியோட ஜாதகம் எங்க புள்ளை சதீஷுக்கு நன்னா பொருந்திருக்கு. மேற்கொண்டு பேசலாம் வாங்கோ. விலாசம் வாட்சாப்புல அனுப்பறேன். இந்த நம்பர்ல வாட்சாப் இருக்கோனோ?" என்று பரபரத்தார் பிள்ளையின் அப்பா. மதுரையிலிருந்து பேசுவதாகச் சொன்னார்.

"அவர் வரட்டும். கோவிலுக்குப் போயிருக்கார். புள்ளை ஜாதகம் அனுப்புங்கோ. ஊருக்கு ஜாதகத்தை அனுப்பிப் பொருத்தம் பார்த்துட்டு சொல்றேன்" என்று சொல்லி போனை வைத்தாள் மாலு. நல்ல சகுனமாகத்தான் தோன்றியது. இந்த வரன் தெகைஞ்சா நன்னாருக்கும்.

வாசு வந்ததும் விபரம் சொன்னாள். "பையன் என்ஜினியர்னு சொன்னார். நா வேற ஒன்னும் கேட்டுக்கல. ஜாதகம் பொருந்தட்டும்னு பார்க்கறேன்" என்றாள்.

"சரி, பகவான் சித்தம் நல்லபடியாக நடக்கட்டும். தாத்தா பாட்டி ஆசிர்வாதம் இருக்கட்டும்" என்றான் வாசு.

ஸ்ரவந்திக்கு நல்ல வரன் வேண்டும். அதுவும் வெளிநாட்டு வரனாக இருக்கலாம் என்று உள்ளூர ஆசை இருந்தது. வெளிக்காட்டிக் கொள்ளவில்லை.

அம்மாவும் அப்பாவும் தேடித்தேடி வரன் பார்க்கிறார்கள். தான் ஏதேனும் சொன்னால் மனம் புண்ணாகிவிடுவார்கள் என்று எண்ணினாள்.

அபிஷேக்கிடம் சொல்லலாமா என்று யோசித்தாள். அன்று மாலை மொட்டை மாடியில் அபிஷேக்கிடம் சொல்லி விட்டாள். "அபி எனக்கு நன்னா படிச்சு, நல்ல உத்தியோகம் அதுவும் வெளிநாட்டுல வேலை பார்க்கிறவரா கெடைச்சா நல்லதுடா. ஆனா அம்மா அப்பாகிட்ட சொல்ல முடியாது. ப்ராப்தம் இருக்குமா தெரில" என்றாள் ஸ்ரவந்தி.

"நா வேணும்னா மெல்ல அம்மாகிட்ட சொல்லட்டுமா" அபி கேட்டான்.

"வேண்டாம் அபி, பயமா இருக்கு. விட்டுடு" என்றவளைப் பார்த்து அபி சிரித்தான்.

"ஒனக்கு தைரியமே இல்லை" என்றான்.
பிறகு அவரவர் கல்லூரி, அலுவலகம் குறித்துப் பேசிக் கொண்டிருந்தார்கள்.

"பையனோட அப்பா ஜாதகம் அனுப்பிருக்கார். பையன் வெளிநாட்டுல இருக்கான் போல இருக்கே. நமக்கு ஒத்து வருமா தெரிலயே?"

"பொருத்தம் இருந்தா பேசுவோம். இப்பல்லாம் இப்டித்தான் அமையறது" என்றான் வாசு.
அபியும் ஸ்ரவந்தியும் பார்த்துக்கொண்டார்கள்.

தொடரும்...

# 60 மற்றும் 70 வயது திருமணம் (பீமரத சாந்தி) பற்றி அறிவோம்

60-ஆம் கல்யாணம் அல்லது சஷ்டியப்தபூர்த்தி என்பது ஒரு ஆண் தனது 60 வயதை நிறைவு செய்து, 61-வது வயதில் அடியெடுத்து வைக்கும் போது, மனைவியுடன் மீண்டும் திருமணம் செய்து கொள்ளும் ஒரு புனிதமான வைபவம் ஆகும். இது மணிவிழா என்றும் அழைக்கப்படுகிறது. ஆயுள், ஆரோக்கியம் மற்றும் குடும்ப மகிழ்ச்சியை அதிகரிக்கவும், கணவனின் நீண்ட ஆயுளுக்காகவும் இந்த சடங்கு செய்யப்படுகிறது


**60-ஆம் கல்யாணத்தின் முக்கிய அம்சங்கள் :**

**பொருள் :**
சஷ்டி (60) + அப்த (ஆண்டு) + பூர்த்தி (முடிவு) = 60 ஆண்டுகள் நிறைவு.

**காரணம் :**
ஜோதிட ரீதியாக, 60 வயதில் காலயவனன், ஸுதூம்ரன் போன்ற தேவதைகள் உடலில் புகுந்து பலவீனப்படுத்துவார்கள், அதைத் தடுக்கவும் ஆரோக்கியத்தை மேம்படுத்தவும் இந்த யாகம் செய்யப்படுகிறது. இது ஒரு புதுப்பிறவியாகக் கருதப்படுகிறது.

**எப்போது :**
கணவர் பிறந்த தமிழ் மாதம், நட்சத்திரம் மற்றும் திதியில், 60 வயது முடிந்து 61-வது வயது தொடங்கும் போது நடத்தப்பட வேண்டும்.

**யார் நடத்துவது :**
பிள்ளைகள், மருமகள்கள், மருமகன்கள் மற்றும் பேரன் பேத்திகள் முன்னிலையில் இந்த விழா குடும்ப உறுப்பினர்களால் நடத்தப்படுகிறது.



**சடங்குகள் :**
கணபதி ஹோமம், மிருத்யுஞ்ஜய ஹோமம் (ஆயுள் ஹோமம்), தன்வந்திரி ஹோமம் மற்றும் கலசாபிஷேகம் ஆகியவை முக்கிய சடங்குகளாகும். திருக்கடையூர் போன்ற புனிதத் தலங்களில் செய்வது சிறப்பு.

இந்த விழா கணவன்-மனைவி இடையேயான பந்தத்தை வலுப்படுத்தி, அவர்களின் புதிய வாழ்க்கைப் பயணத்திற்கு ஆசீர்வாதம் பெறுவதாக அமைகிறது.

70-வயது கல்யாணம், பீமரத சாந்தி என்று அழைக்கப்படுகிறது. ஒருவர் தனது 69 வயதை நிறைவு செய்து 70-வது வயதில் அடியெடுத்து வைக்கும்போது (அல்லது 70 முடிந்து 71-ல்), ஆரோக்கியம் மற்றும் நீண்ட ஆயுளுக்காக இந்த ஹோமம் மற்றும் சாந்தி பூஜைகள் செய்யப்படுகின்றன. இது தம்பதிகளின் ஆயுளை நீட்டிக்கும் புனிதமான சடங்காக கருதப்படுகிறது.

**முக்கிய தகவல்கள்:**
**பொருள் :** பீம ரதன் (எமன்/மிருத்யு) சாந்திப்படுத்துதல்.

**நேரம் :**
பிறந்த நட்சத்திர நாளில் நடத்தப்படுகிறது.

**சடங்குகள் :**
ஆயுஷ் ஹோமம், ம்ருத்யுஞ்சய ஹோமம், தன்வந்திரி ஹோமம் மற்றும் மாங்கல்ய தாரணம்.

**சிறப்பிடம் :**
திருக்கடையூர் போன்ற முக்கிய சிவ தலங்கள் அமைந்துள்ள ஊர்களில் இது சிறப்பாக செய்யப்படுகிறது.

இந்த விழா பொதுவாக தம்பதிகளின் குழந்தைகள் அல்லது பேரக்குழந்தை மற்றும் உறவுகள் நண்பர்களால் நடத்தப்படுகிறது, இது உறவுகளைப் புதுப்பித்து, புதிய உற்சாகத்துடன் வாழ்க்கையைத் தொடர உதவுகிறது.



**ப.கோபிபச்சமுத்து**
புதுப்பேட்டை,
கிருஷ்ணகிரி - 1


---

**தினம் ஒரு தலைவர்கள்**

# கேமு கலானி வரலாறு

கேமு கலானி (1923 மார்ச் 23 - 1943 சனவரி 21) இவர் இந்தியச் சுதந்திர இயக்கத்தின் போது சிந்தி புரட்சிகர மற்றும் சுதந்திரப் போராட்ட வீரர் ஆவார். நாட்டின் சுதந்திரப் போராட்டத்திற்காகத் தியாகம் செய்த இளைய புரட்சியாளர்களில் ஒருவரான இவர், தனது 20 வது பிறந்தநாளுக்கு இரண்டு மாதங்களுக்கு முன்னர் 19 வயதாக இருந்தபோது ஆங்கிலேயர்களால் தூக்கிலிடப்பட்டார். இவர் அகில இந்திய மாணவர் கூட்டமைப்புடன் இணைந்த ஒரு மாணவர் அமைப்பான சுய இராச்சிய சேனையின் தலைவராக இருந்தார்,

ஆரம்பக் கால வாழ்க்கை
இவர் 1923 மார்ச் 1923 அன்று சிந்து (இப்போது பாக்கித்தான் ) சுக்கூர் என்ற இடத்தில் பிறந்தார். இவரது பெற்றோர் பெசுமல் கலானியும், ஜெதி பாய் ஆகியோராவர். ஓர் இளைஞனாக இவர் தனது நண்பர்களுடன் சேர்ந்து வெளிநாட்டுப் பொருட்களைப் புறக்கணிப்பதற்காகப் பிரச்சாரம் செய்தார். மேலும் சுதேசி பொருட்களைப் பயன்படுத்த மக்களை வற்புறுத்த முயன்றார். புரட்சிகர நடவடிக்கைகளில் ஈர்க்கப்பட்ட இவர், பிரித்தானியரை விரட்டியடிக்கும் நோக்கத்துடன் எதிர்ப்பு நடவடிக்கைகளில் பங்கேற்கத் தொடங்கினார். இவர் பிரித்தானிய இராச்சியத்திற்கு எதிரான தாக்குதல்களையும் அவர்களுக்குச் சொந்தமான வாகனங்களை எரிப்பதிலும் ஈடுபட்டிருந்தார்.



சுதந்திரப் போராட்டம்

கேமு கலானியின் இறுதிச் சடங்கு, 21 சனவரி 1943 1942 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டபோது, மகாத்மா காந்தியின் வெள்ளையனே வெளியேறு இயக்கத்தில் இவர் சேர்ந்தார். சிந்தில் இயக்கத்திற்கு ஆதரவு பிரித்தானிய ஆட்சியாளர்கள் ஐரோப்பியப் படைவீரர்களைக் கொண்ட சிறப்புத் துருப்புக்களை அனுப்ப வேண்டியிருந்தது. இந்தத் துருப்புக்களின் இரயிலும், அவற்றின் பொருட்கள் தனது நகரத்தின் வழியாகச் செல்லும் என்று இவர் கண்டுபிடித்தார். இரயில் பாதையிலிருந்து உலோகப் பட்டிகளை அகற்றுவதன் மூலம் அதைத் தடம் புரள முடிவு செய்தார். இவருக்கோ அல்லது இவருடைய சகாக்களுக்கோ தேவையான கருவிகள் இல்லை. எனவே இதற்காக ஒரு கயிற்றைப் பயன்படுத்த வேண்டியிருந்தது. நாசவேலை முடிவதற்கு முன்னர் இவர்கள் பிரித்தானியத் துருப்புக்களால் கண்டுபிடிக்கப்பட்டனர். இவர் பிடிபட்டு, சிறையில் அடைக்கப்பட்டார். இவரது சக சதிகாரர்களின் பெயர்களைக் கூறச் சித்திரவதை செய்யப்பட்டார். இவர் எந்தத் தகவலையும் வெளியிட மறுத்து, விசாரணைக்கு




உட்படுத்தப்பட்டு மரண தண்டனை விதிக்கப்பட்டார். சிந்து மக்கள் ஆளுநரிடம் கருணையைக் கோரினர். ஆனால் அதை வழங்குவதற்கான நிபந்தனை என்னவென்றால், இவரது இணைச் சதிகாரர்களின் அடையாளத்தை அதிகாரிகளுக்குத் தெரிவிக்க வேண்டும். இவர் மீண்டும் தகவல்களை வெளியிட மறுத்துவிட்டார். இவர் சனவரி 21, 1943 அன்று தூக்கிலிடப்பட்டார்.

மரண தண்டனை வழங்கப்பட்டதில் இவர் மிகவும் மகிழ்ச்சியடைந்ததாகக் கூறப்படுகிறது. வழக்கத்திற்கு மாறாக, இவர் தண்டனைக்கும், மரணதண்டனைக்கும் இடையேயான நேரத்தில் இவர் ஒரு நல்ல உடல் எடையைப் பெற்றார். மரணதண்டனை நிறைவேற்றப்பட்ட நாளில், இவர் மிகுந்த மகிழ்ச்சியுடன் காணப்பட்டார். பகவத் கீதையின் நகலை கையில் வைத்துக் கொண்டு தூக்கு மேடைக்குச் சென்றார், முழு வழியிலும் புன்னகைத்துக் கொண்டே இருந்தார்.

# மறுதணிக்கை நிறைவு?

விஜய் நடித்துள்ள 'ஜன நாயகன்' கடந்த ஜனவரி மாதம் 9-ந்தேதி திரைக்கு வருவதாக இருந்தது. இந்நிலையில் படம் மறுதணிக்கையாவதில் தாமதம் ஏற்பட்டதை தொடர்ந்து படம் வெளியாவது தேதி குறிப்பிடாமல் ஒத்தி வைக்கப்பட்டு உள்ளது.

இது தொடர்பாக சென்னை ஐகோர்ட்டில் தயாரிப்பு நிறுவனம் சார்பில் வழக்கு தொடரப்பட்டது. வழக்கை விசாரித்த நீதிபதி ஆஷா மறுஆய்வுக் குழு பார்வையிட பரிந்துரை செய்த தணிக்கை வாரிய தலைவரின் உத்தரவை ரத்து செய்து உத்தரவிட்டார்.

தனி நீதிபதி உத்தரவை எதிர்த்து தணிக்கை வாரியம் மேல்முறையீடு செய்தது. இதை அடுத்து படக்குழு சுப்ரீம் கோர்ட்டை நாடியது. வழக்கை தலைமை நீதிபதி அமர்வே விசாரிக்கும் என சுப்ரீம் கோர்ட்டு தெரிவித்தது.

சுப்ரீம் கோர்ட்டு வழக்கை விசாரித்து தனி நீதிபதி பிறப்பித்த உத்தர வுக்கு தடை விதித்ததோடு தணிக்கை வாரியத்துக்கு உரிய கால அவகாசம் அளித்து வழக்கை மீண்டும் விசாரிக்க தனி நீதிபதி பி.டி. ஆஷாவுக்கு உத்தரவிட்டது.

இந்நிலையில் 'ஜன நாயகன்' பட மறுதணிக்கை தொடர்பான வழக்கு திரும்ப பெறப்பட்டது. இதை தொடர்ந்து மறு தணிக்கைக்கு படத்தை படக்குழு அனுப்பி இருக்கிறது.

இந்நிலையில், ஜனநாயகன் திரைப்படத்திற்கான மறு ஆய்வு மும்பையில் நடந்து முடிந்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. படத்தில் சர்ச்சைக்குரிய காட்சிகள் நீக்கப்பட்டுள்ளனவா என மறு ஆய்வின்போது சரிபார்க்கப்பட்டுள்ளது. ஜனநாயகன் படத்தை தேர்தல் ஆணைய அதிகாரிகள் பார்வையிட தணிக்கைக் குழு பரிந்துரை எனத் தகவல் வெளியாகியுள்ளது.





நடிகை பூனம் பஜ்வா ஒருகாலத்தில் தமிழ் சினிமாவில் பல முன்னணி நடிகர்கள் ஜோடியாக நடித்தவர். சமீபகாலமாக குணச்சித்திர ரோல்களில் நடித்து வந்த அவரை கடந்த சில வருடங்களாக படங்களில் பார்க்க முடியவில்லை.

இருப்பினும் அவர் இன்ஸ்டாக்ராமில் அதிகம் கவர்ச்சியாக வெளியிடும் ஸ்டில்கள் ரசிகர்களை கவர்ந்து வருகிறது.

தற்போது ஷார்ட் உடையில் யோகா செய்யும் ஸ்டில்களை அவர் வெளியிட்டு இருக்கிறார். புகைப்படங்களை பாருங்க.



கன்னடம் மற்றும் தெலுங்கில் மிகவும் பிரபலமான நடிகை நபா நடேஷ். iSmart Shankar, டிஸ்கோ ராஜா போன்ற திரைப்படங்களில் நடித்திருக்கிறார். இன்ஸ்டாகிராமில் ஆக்டிவாக இருக்கும் நடிகை நபா நடேஷ், தனது போட்டோஷூட் புகைப்படங்களை அதில் பதிவிடுவதை வழக்கமாக கொண்டுள்ளார். இந்த நிலையில், சேலையில் சமீபத்தில் எடுத்துக்கொண்ட தனது கிளாமர் போட்டோஷூட் புகைப்படங்களை தற்போது பதிவிட்டுள்ளார். இந்த புகைப்படங்கள் தற்போது இணையத்தில் வைரலாகி வருகின்றன.

# வெளிநாட்டு பாக்ஸ் ஆபீஸ் வசூல் எவ்வளவு தெரியுமா?




சிவகார்த்திகேயன் தயாரிப்பில் ராதிகா நடித்துள்ள படம் 'தாய் கிழவி'. இந்தப் படத்தை அறிமுக இயக்குநர் சிவகுமார் முருகேசன் இயக்கியுள்ளார். நிவாஸ் கே. பிரசன்னா இசையமைத்துள்ள இப்படத்தில் சிங்கம் புலி, அருள்தாஸ், பாலசரவணன், முனிஷ்காந்த், இளவரசு உள்ளிட்ட பலர் நடித்துள்ளனர்.

பவனுதாயி என்கிற பெயரில் தாய் கிழவியாக ஊரில் வலம் வருபவர் ராதிகா. அங்குள்ளவர்களுக்கு வட்டிக்கு விட்டு மிரட்டி வட்டி வசூலில் ஈடுபட்டு வருகிறார். ஒரு கட்டத்தில் கிழவி எப்போது இறக்கும் என ஊரே காத்திருக்கிறது. ராதிகாவிற்கு அருள்தாஸ், பால சரவணன், சிங்கம்புலி என 3 மகன்கள், ஒரு மகளும் இருக்கிறார்கள். ராதிகாவிற்கு திடீரென உடல்நலம் மோசமாகிறது. இன்னும் சில நாட்களில் ராதிகா இறந்து விடுவார் என்று ஊரே காத்திருக்கிறது. அப்போது, ராதிகா 160 சவரன் சேர்த்து வைத்துள்ளது மகன்களுக்கு தெரியவருகிறது. பாசத்தால் இல்லாவிட்டாலும், நகை சொத்துக்காகவாவது தாய் ராதிகாவை காப்பாற்ற வேண்டும் என மெனக்கிடுகிறார்கள்.

இறுதியில் தாய் கிழவி உயிர் பிழைத்தாரா? அந்த 160 சவரன் நகை என்னவாயிற்று? என்பது படத்தின் மீதிக்கதை. இப்படம் திரையரங்குகளில் வெளியானது முதல் ரசிகர்களின் வரவேற்பை பெற்று வருகிறது. மேலும் இப்படம் வசூலையும் குவித்து வருகிறது.

இதனிடையே, 'தாய்கிழவி' படம் வெளியான 18 நாட்களில் 1.2 மில்லியன் டாலருக்கும் மேல் வெளிநாடுகளில் வசூலித்துள்ளதாக படதயாரிப்பாளர்கள் அறிவித்துள்ளனர்.

இந்தியாவில் 'தாய் கிழவி' திரைப்படம் இதுவரை 51.60 கோடி ரூபாய் வசூலித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

# திவ்யா - திரை விமர்சனம்




திவ்யா- விமர்சனம்(2.5 / 5)

மதுரை அருகே உள்ள கிராமத்தில் தாத்தா, தம்பி உடன் வாழ்ந்து வரும் நாயகன் ஆர்.ஜே.பி, கல்லூரியில் படித்து கொண்டு பறை அடித்து வருகிறார். இவர் படிக்கும் கல்லூரியில் புதியதாக சேரும் நாயகி கேத்தியை ராக்கிங் செய்யும் போது பிரச்சனை ஏற்படுகிறது. இந்த பிரச்சனைக்கு பிறகு இருவருக்கும் பழக்கம் ஏற்படுகிறது. பழக்கம் நாளடைவில் காதலாக மாறுகிறது.

இருவரும் காதலித்து வரும் நிலையில் கேத்தியின் அப்பாவிற்கு தெரிய வருகிறது. உடனே கேத்தியை கல்லூரியில் இருந்து நிறுத்திவிட்டு, வேறு ஒருவருடன் திருமணத்திற்கு ஏற்பாடு செய்கிறார்கள். நாயகன் ஆர்.ஜே.பி, கேத்தியை அழைத்துக் கொண்டு ஊரைவிட்டு ஓட திட்டம் போடுகிறார்.

இறுதியில் நாயகன் ஆர்.ஜே.பி, நாயகி கேத்தி இருவரும் காதலில் ஜெயித்தார்களா? இல்லையா? என்பதே படத்தின் மீதிக்கதை.

நடிகர்கள்

படத்தில் நாயகனாக நடித்து இருக்கும் ஆர்.ஜே.பி, எதார்த்தமான நடிப்பை வெளிப்படுத்தி இருக்கிறார். சில இடங்களில் சாதாரண நடிப்பை கொடுத்து இருக்கிறார். நாயகியாக நடித்திருக்கும் கேத்தி, அளவான நடிப்பை வெளிப்படுத்தி இருக்கிறார். நாயகன் ஆர்.ஜே.பி, நண்பர்களாக நடித்திருக்கும் சபி, ஜிவி இருவரின் நடிப்பு திரைக்கதை ஒட்டத்திற்கு பெரிதும் உதவி இருக்கிறது.

நாயகன் தாத்தா பவுன்ராஜ், நாயகி அப்பா அனந்த் ராம், நாயகி அம்மா கலாவதி ஆகியோர் கொடுத்த வேலையை செய்து இருக்கிறார்கள்.

இயக்கம்:நாயகனாக நடித்து இருக்கும் ஆர். ஜே.பி, இப்படத்தை இயக்கி இருக்கிறார். ஆணவ கொலையை மையமாக வைத்து படத்தை இயக்கியிருக்கிறார். பல படங்கள் இந்த சாயலில் வந்தாலும், கிளைமாக்சில் மட்டும் கொஞ்சம் வித்தியாசம் காண்பித்து இருக்கிறார். மெதுவாக செல்லும் திரைக்கதை படத்திற்கு பலவீனம். இன்னும் வலுவான காட்சிகள் வைத்திருந்தால் கூடுதலாக ரசித்து இருக்கலாம்.

இசை: சங்கர் ராம் இசையில் பாடல்கள் கேட்கும் ரகம். பின்னணி இசையில் கவனிக்க வைத்து இருக்கிறார்.

ஒளிப்பதிவு :செல்வகுமார் ஒளிப்பதிவை ஓரளவிற்கு ரசிக்க முடிகிறது.

# நான் நாயுடு பையன்... சாதி குறித்த சர்ச்சை பேச்சுக்கு நடிகர் பார்த்திபன் விளக்கம்



சென்னையில் பிறந்து வளர்ந்ததால் எனக்கு தெலுங்கு அவ்வளவாக வராது. தமிழ்தான் எனக்கு இயல்பாக வரும் மொழி.

இந்த படத்தின் வெற்றிக்குப் பிறகு சந்திப்போம். அப்போது நான் முழுமையாக தெலுங்கில் பேசுவேன் என்று இந்த மூர்த்தி உங்களுக்கு உறுதியளிக்கிறேன். மூர்த்திதான் எனது இயற்பெயர்" என்று கூறினார். ஐதராபாத்தில் பார்த்திபன் தனது சாதியை குறிப்பிட்டு பேசியது தமிழ்நாட்டில் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியது. .

இந்நிலையில், இந்த சர்ச்சைக்கு முற்றுப்புள்ளி வைக்கும் வகையில் பார்த்திபன் விளக்கம் ஒன்றை அளித்துள்ளார். இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள எக்ஸ் பதிவில், "சத்தியமாக சொல்கிறேன். எந்த உள் நோக்கமும் இல்லாமல் எந்த லாப நோக்கும் இல்லாமல் வாய்ப்புக்காகவோ வசதிக்காகவோ அந்த இரண்டு வார்த்தைகளை நான் பயன்படுத்தவில்லை.

அங்கே பேசினால் இங்கே தெரிய வாய்ப்பில்லை என்று நினைத்தா நான் பேசியிருப்பேன்? ஏதோ வாய்த்தவறி....

இத்தனை வருட அனுபவத்தில் இதுவே முதன் முறை நான் ஜாதிப் பெயரைக் குறிப்பிட்டுச் சொல்வது. அப்படி ஜாதியை தலைமேல் வைத்துக் கொண்டாடுபவர்களை எனக்கே பிடிக்காது 'இவன்' உட்பட பல படங்களில் / இடங்களில் நானே அதை வன்மையாகக் கண்டித்துள்ளேன். அப்படியிருக்க நானே அதைச் செய்வேனா? தவறு நடந்து விட்டது என்பதை முழுமையாக உணர்ந்து வருந்தி கிடக்கிறேன்.

இவ்வளவு பேரின் வருத்தத்திற்கு நான் ஆளாகி இருப்பது எனக்கே பிடிக்கவில்லை. என் திறமையை மட்டுமே நம்புவேனேத் தவிர, தவறியும் ஜாதியை சொல்லி வழியே வளர்க்க விரும்புபவனல்ல. இனி ஒரு முறை கூட தவறியும் இது நடக்காது என உறுதியளிக்கிறேன். என் பேச்சால் வேதனைப் பட்டவர்கள் அனைவரிடமும் மீண்டும் ஒருமுறை மனப்பூர்வமாக மன்னிப்பைத் தெரிவிக்கிறேன். தயவுசெய்து மறந்து விட்டு பழையபடி என்னை ஊக்கப்படுத்துங்கள்.

உங்களை விடவும் நானே அதிக வருத்தத்தில் உள்ளேன். இனி மிக மிக ஜாக்கிரதையாக நீங்கள் என் மீது வைத்திருக்கும் அன்பைப் பாதுகாப்பேன்" என்று தெரிவித்தார்.

# அரசன் படத்தில் இணைந்த பிரியங்கா மோகன்

வடசென்னையை மையமாக கொண்டு படம் உருவாகி வரும் அரசன் திரைப்படம் வடசென்னை திரைப்படத்தின் காலக்கட்டத்தில் நடைபெறுவது போல் கதையம்சம் கொண்டிருக்கிறது. அடுத்தடுத்து இந்தப் படத்தின் படப்பிடிப்பு நடைபெற்று வரும் நிலையில், இந்தப் படம் இந்த ஆண்டு இறுதிக்குள் வெளியாகும் என்று கூறப்படுகிறது. இந்தப் படத்திற்கு அனிருத் இசையமைக்க, வேல்ராஜ் படத்தொகுப்பு பணிகளை கவனிக்கிறார்.



இதனிடையே அரசன் படப்பிடிப்பு தளத்தில் இயக்குநர் வெற்றி மாறன் மற்றும் நடிகர் சிலம்பரசன் படப்பிடிப்பு இருக்கும் புகைப்படம் இணையத்தில் வெளியாகி வைரலானது.

இந்நிலையில் அரசன் படத்தில் ஒரு முக்கிய கதாபாத்திரத்தில் பிரியங்கா மோகன் நடிக்கிறார் என்று தகவல் வெளியாகியுள்ளது.

மேலும் டூரிஸ்ட் பேமிலி படத்தில் நடித்து பெயர் வாங்கிய யோக லட்சுமியும் ஒரு முக்கிய ரோலில் இப்படத்தில் நடித்து வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது..























Special Invitation
to retired seniors house wives businessmen bankers
CAs NRIs age.30 to 70.qualification SSLC/graduate
To restart your second Innings with a career business opportunity
◆ Flexible timing unlimited incentive
◆ No target work from home training provided
For successful business.
Contact Mr. Irudaya Raj
Ph.9486634780









## குறையொன்றுமில்லை!

அறுசீர் மண்டிலம்.
(காய்..விளம்..காய்)

நிறைவான வாழ்க்கையே
நிம்மதியாம் நேரான
வாழ்க்கையே நல்விதமாம்
அறைகுறையாம் வாழ்க்கையே
அருவறுப்பாம் அன்பான
வாழ்க்கையே அருமையாகும்!
அறிவான வாழ்க்கையே
அன்புடைத்தாம் அழகான
வாழ்க்கையே பண்புடைத்தாம்
செறிவான வாழ்க்கையே
செழிப்புடைத்தாம்
செம்மாந்த வாழ்க்கையே
சீருடைத்தாம்!

அளவாக செலவினைச்
செய்துவந்தால்
ஆர்ப்பாட்டம் இல்லாத
வாழ்வமையும் களிப்பான
வாழ்க்கையே தேவையெனில்
கனிவான சூழலே
வேண்டுமடா! அளிக்கின்ற
அறத்தினால் வாழ்வுயரும்
அகிலத்தில் என்றுமே
பேர்சிறக்கும் குளித்திடலாம்
கொஞ்சிடும் தமிழ்படித்தே
குறையொன்றும் இன்றியே
வாழ்ந்திடலாம்!

முனைவர்
இராம.வேதநாயகம்.

## ஞாலத்தை தழைக்கச் செய்யும் நாற்றங்கால்

காலிலே முள்ளிருக்கும்
காலணி அணிந்து செல்வாள்
தோளிலே புண்க ளோடு
சுமையெல்லாம் சுமந்து
செல்வாள் வேலியே பயிரை
மேயும் விளை நிலம்
ஆவாள்,என்றும் கூலியே
வாங்கி டாதக்குடும்பத்துப்
பணிப்பெண் ஆவாள்
கோலமாய் எழில் தந் தாலும்
குறைகளைப் பரிசாய்க்
கொள்வாள் காலனை
உதைத் தெறிந்து கருவுயிர்
பிரசவிப்பாள்.
ஞாலத்தை
மலரச் செய்யும்
நாற்றங்கால்
போல
வாழ்வாள்.



பரிபூரணன்
குடந்தை



## நெடுஞ்சாலை நினைவுகள்.!

உணவகம் நில்லா..
பேருந்திலேறி ஊர்ஊராய்
சுற்றுகிறேன்! கனவுகளோடு
கலைந்த சிகையோடு..
காற்றை நுகர்ந்து கவிதை
பாடுகிறேன்!

இருபுறமும் மரங்கள் ஓடும்..
என் விழிகள் மலைகளை
மூடும்.. மறுமொழியே கூறாது
மவுனமானேன்.. மற்றுமொரு
பயணத்திலே.!

நெடுஞ்சாலை யெங்கும்..
கானல் நீராய்.. என்
கனவு தேவதையோடு
பயணிக்கின்றேன்!
காற்றில் அலைமோதும்
நினைவுகளோடு.!

சாலையோரமெல்லாம் சற்றே
நின்று செல்ல ஆசைதான்..!
வேளை வரவில்லை.. இந்த
விரைவுவண்டி.. நின்று
செல்லுமிடம் எனக்குத்
தெரியவில்லை!

ஏதோ ஒரு ஊரில்.. எத்தனை
புதுமுகங்கள்! பத்துநிமிடம்
நிற்கு மென்றார்.. அதற்குள்
கண் பட்டதைச் சாப்பிட்டேன்.!
கழிவறைக் கடந்தேன்!இது
என் நெடுஞ்சாலை என்றே
பூரித்தேன்!

வே.கல்யாண்குமார்.

## இனிய தாம்பத்யம்

கைகள் சேர்த்து பிடித்த
அந்த தருணம் மகிழ்ச்சி
தொடங்கிய நாளாக
உணர்ந்தேன் வேஷமில்லா
காதலை உணர எனக்கு
கிடைத்த வாய்ப்பு என
உணர்ந்தேன்முகமலர்ச்சியில்
மன நிறைவும்
பூசலில்லா இனிய வாழ்வு
தொடர்கிறதுஇனி மரணமே
வந்தாலும் இனிதே...
இல்லற வாழ்வில் இன்பம்
பிறப்பதால் கனவெல்லாம்
நினைவு என்ற மலராக
மலர்கிறதே இனிய தாம்பத்ய
வாழ்விற்கு வயதே இல்லை
மனநிறைவு தந்த
இறைவனுக்கு நன்றி

உஷா முத்து ராமன்

## மகிழ்ச்சி

உள்ளத்தின் ஓரம் மலரும்
புன்னகை!

உயிரின் ஆழத்தில்
ஊறும் பேரின்பம்!

தேடலில் இல்லை
தெளிவில் உள்ளது!

தினமும் நீ காட்டும்
அன்பில் உள்ளது!

உதிக்கும் கதிரின்
ஒளியில் மகிழ்ச்சி!

மழலை பேசும் மொழியில்
மகிழ்ச்சி!

கிடைப்பதில் இல்லை
நிறைவில் மகிழ்ச்சி !

கொடுக்கும் மனதின் அன்பில்
மகிழ்ச்சி!

தேடி அலைந்தால் தொலைந்து
போகும்!

தேவை குறைந்தால்
தானாய் சேரும்! வெற்றிக்
கோப்பையில் மட்டுமல்ல
வியர்வை துடைப்பதிலும்
உண்டு மகிழ்ச்சி!

கிடைத்ததை ஏற்றால்
அமைதி! இருப்பதில்
வாழ்ந்தால் மகிழ்ச்சி!

உள்ளத்தில் பூக்கும்
அன்பு மலர் !

தேடியும் கிடைக்காத
பொக்கிஷம் இது தெரிந்தும்
ரசிக்காத அதிசயம்!

நேற்றைய கவலையை மறந்து
விடு இன்றைய பொழுதில்



இனிமை காணும்!

வாடி நின்ற செடிக்குத்
தரும்ஒரு துளி நீரிலும்
மகிழ்ச்சி உண்டு!

வாசல் தேடி வந்தவருக்கு
நாம் தரும் புன்னகையில்
அன்பு உண்டு !

ஆயிரம் கவலைகள்
நம்மைச் சூழ்ந்தாலும்!

அன்பே அதற்கு பெரிய
மருந்து !

தேடி அலைவதை
நிறுத்தி விடு!

உன் மனதிற்குள் உற்றுப்
பார்த்து விடு!

தேடி அலையும் பொருள்
இல்லை, தேனீர்க் கோப்பை
பகிர்வில் உண்டு!

பூக்களின் சிரிப்பில்
இறைவனை காண்போம் !



புன்னகை
ஒன்றில்
பகையை
வெல்வோம்!

பெ.திருமுகம்
ஆசிரியர்
மணமேல்குடி

---

1.காத்திருப்பு என்பது
மற்றவர்கள் நேரத்தை
களவாடுதல்

2. நீங்கள் தங்கமாகவே
இருந்தாலும் இருக்க
வேண்டிய இடத்தில்
இருந்தால்தான் மதிப்பு

3. ஒரு ஏழையின் செல்வம்
அவனது திறமை மட்டுமே

4. கல்யாணம் ஆன புதிதில்
ஆண்கள் கெடுபிடியாக
இருப்பதும் பின்னர்
எடுபுடியாக மாறுவதும்
வாடிக்கை

5. உண்மை யாருக்கும்
அஞ்சாது நேர்மை யாருக்கும்
அடங்காது

6. மழையில் நனைந்த
சிறகுகளை வெயிலில்
உணர்த்தும் பறவைகள் போல்
மனதில் உள்ள கவலைகளை
ஒற்றை சிரிப்பில் உதறி
தள்ளுவதே ஆனந்தம்

நடேஷ் கன்னா
கல்லிடைக்குறிச்சி

## கோபம் இருந்தாலும்,,,

நான் உன் மீது
கோபமாகதானிருக்கிறேன்
ஆனால்,,, மனசு மட்டும்
ஒவ்வொரு வினாடியும்
உன்னையே நினைக்கிறது,,,

நிசப்தமான இரவுகளில்
தெளிந்த நீரோடையில்
துள்ளிக்குதிக்கும்
வெள்ளிமீன்களைப்போல
தெளிவாய் பேசும்~உன்
வார்த்தைகளின்
வலிமையை~என்னால்
உணரமுடிகிறது,,,

அம்மா அடிக்கும்போதுக்கூட
அம்மான்னு சொல்லியே
அழும் குழந்தையைப்போல
உன்மீது
கோபமிருந்தாலும்
உன்னையேதான்
நினைக்கிறேன்,,,!



நாகை
ஆசைத்தம்பி
கோவை

## ஆண்டாண்டு தோறும்........!

பிறப்பதோ ஒருமுறை
பீடுடன் வாழ்வமே
இறப்பதும் ஒருமுறை
இதற்குளே சூழ்வமே!
அறத்தினை அன்புடன்
அழகுடன் செய்வமே
திறத்துடன் வாழ்ந்திட
தேர்ந்திட உழைப்பமே!

இயற்கையின் பிடியிலே
ஏற்றமாய்ச் சிக்கியே
நயன்மையாய் வாழ்வினை
நலத்துடன் நடத்துவோம்!
முயற்சிகள் எடுத்தினும்
மூச்சுவிட மறந்தவர்
எழுந்திவண் வந்திலர்
என்பதை அறிவமே!

அழுதுதான் வருந்தியும்
அவரினி வந்திலர்
தொழுதவர்
அறத்தினைத்
தொடர்ந்திடச்
செய்திடு
பழுதிலா
வாழ்வினைப்
பாங்குடன்
புரிந்திடு
எழுதிய ஓலையை
யாருமே மாற்றிலர்!



முனைவர்
இராம.வேதநாயகம்
திருவண்ணாமலை.



## எறும்பின் குரல்.!

நான்தான் எறும்பு..
என்னை விரும்பு!..
நீயொரு கரும்பு..
நானொரு எறும்பு.!

கடிப்பவன் எனினும்..
நடிப்பவன் அல்ல.!
கட்டெறும்பு நான்
உழைப்பின் எல்லை!

சுள்ளெறும்பு நான்
சோர்ந்தவன் அல்ல..
சுறுசுறுப் பானவன்
சோம்பேறி யல்ல.!

புற்று எழுப்புவேன்..
நாகங்கள் குடியேறும்!
கற்றுக் கொடுக்கிறேன்
காலால் மிதிக்காதீர்!

வரிசையாய் செல்வேன்
வாழ்ந்திடச் சொல்வேன்
சேமித்து வைப்பேன்..
சேவைகள் செய்வேன்!
எறும்பாய் நினைப்பீர்..
எங்களைப் போல..
இயங்கிடும் உயிர்கள்
உலகினில் உண்டோ?

மிதித்தால் கடிப்பேன்..
கடித்தால் பொறுப்பீர்!
மதித்தால் மதிப்பேன்..
எறும்பினை நினைப்பீர்!




வே.கல்யாண்குமார்.

---

# நூல் விமர்சனம்

பனிக்காலத்தின்
காலை வெயில்
நூலாசிரியர்–
சித்தார்த்தன் பாரதி அவர்கள்
நூல் விமர்சனம் – தயானி
தாயுமானவன்




வீடு திரும்பாமல் ஏதோ
காரணங்களால் வேறு
ஊர்களில் வேறு தேசங்களில்
வேறு பெயர்களில் வாழ்ந்து
கொண்டிருப்பவர்கள்
துயரவான்கள் ._ எஸ்.ரா.

கௌதமபுத்தனோ தன் வீட்டைவிட்டு வெளியேறும் நள்ளிரவில் உறங்கும் தன்குழந்தையை முத்தமிடுகிறார். அதுவே அவரின் கடைசி முத்தமாகும். அதன்பிறகு அவர் யாரையும் முத்தமிடவில்லை. முத்தங்கள் யாவும் உறைந்து புன்னகையாகிவிட்டன.

சித்தார்த்தன் பாரதியின் கவிதை புத்தகத்தை படிக்கும் போது காலத்தின் சுழலிலும் பேரலைகளுக்கும் வெயிலின் வியப்பிலும் இறங்கி வரும் பனியிலும் ஒரு பிறந்தகுழந்தையை தூக்கிச் சுமப்பது போலவே இருந்தது அவரின் கவிதைகள் .

கவிஞர்கள் எழுதும் கவிதை நூலில் ஏதேனும் ஒரு பக்கத்தில் புத்தர் புன்னகைப்பார் இவர் நூலிலே எல்லா பக்கங்களிலும் புத்தரின் பேரழகின் மொழி அடர்த்தியாக ஒரு வனத்தின் பாதையில் நடப்பது போல அத்தனை நேர்த்தியாக எழுதப்பட்ட வரிகள் .

எல்லா பக்கங்களும் புத்தனுக்காகவே செதுக்கப்பட்ட காலமாக பரிணமித்துள்ளது . எத்தனை நேசிப்பு இருந்தால் நூற்று இருபது பக்கங்கள் சாரமாகியிருக்கும் ? அதிசயமாக உணர்ந்தேன் அகம் சார்ந்த புரிதலும் நிகழ்காலத்தில் வாழும் கலையையும் கற்றுத்தரும் கவிதைகள் . மானுடம் நேற்றைய பொழுதின் வன்மத்தில் இன்றைய நாளை கொலை செய்துவிட்டு நாளை கைதியாகவும் தயங்காத உலகத்தில் இந்தக் கவிதைப் புத்தகம் பேரொளியின் காலை வெயில் பனிக்காலத்தின் பின்னிரவில் பொழியும் பனியோடு சில்லிடும் காற்று எப்படி உடலை ஊடுருவுமோ அதுபோல ஆன்மாவின் இழைகளால் நெய்யப்பட்ட வரிகள் . கடைசியில் மின்னுவது புத்தன்தான் எல்லாமுமாய் நிறைந்திருக்கிறார் அகம்புற மென இரு வெளிகளிலும் நீ ஏற்றிய அறிவெனும் தீபம் சுடர் விடுகிறது. எனக்கு நான் மட்டுமல்ல நீயும் விளக்கு தான் என்று ஆரம்பிக்கிறது முதல் கவிதை.

எளிய நடையில் மனதில் எண்ண ஓட்டம் நீரோடை போல தெளிந்த பார்வை .

பொய்களை புன்னகைத்து கடக்கவும் மெய்களை கவனித்து இருக்கவும் ஞானத்தின் விதை ஒன்றை நான் விழுங்கக் கொடுத்தாய் வணக்கத்திலோ வழிபாட்டிலோ உன்னை அடைவதில்லை வாழ்வதில் உன்னைக் கண்டடைகிறேன்-- என்ற வரிகள் வாழும் கலையை கற்பித்த ஞானம். அதை கண்டடைந்தவழியை நமக்கும் உணர்த்துகிறார்.

காலத்தை இரசிக்க மனிதனுக்கு நேரமில்லை. இயற்கையை நேசித்தால் தான் நீ உன்னை நேசிக்க முடியும் என்பதை மஞ்சளாய் வெயில் காய்கிறது சப்தமே இல்லாமல் மழை பெய்கிறது கழனியும் கனிமரங்களும் பூத்துக் குலுங்குகின்றன ... வேறொன்றும் இல்லை உன் பேரன்புதான் என முடியும் அந்தக் கவிதை இயற்கையினோடு ஒன்றுதல் புத்தனுக்கு வாய்த்தது உனக்கு வாய்த்ததா? எனில் நேரமில்லை என்பதே நமது பதில்.

எவ்வளவு முயன்றும் நிகழ் எனும் மெய்யுரைத்த புத்தரை புத்தராகாமலேயே தரிசித்துக் கொண்டிருக்கிறேன் . என்ற வரிகள் எப்படி புத்தனாவது என்பதன் சாவி உங்களிடமே இருக்கிறது . ஆயுதங்களால் நிரம்பி வழியும் இரகசிய வியாபரங்களில் களித்திருக்கிறது உலகத் தலைவர்களின் மனம். கானகத்தில் மூலிகைச்செடிகளை பறிப்பதற்காக பின்னிரவின் வெளிச்சத்தில் காட்டுக்குள் செல்வான் ஒரு கிழவன். பாம்பு ஊர்வது போல சத்தமில்லாமல் நடந்து போகிறவனாக இருக்கிறான். அவனோடு நானும் சென்றிருக்கிறேன் என்கிறார் எஸ். ரா. பறிப்பதற்கு முன்பு அவன் உதடுகள் எதையோ முனுமுணுக்கிறதே என்ன அது? என்று கேட்பார் செடியை நோக்கி விரல்களை நீட்டாதே. செடி ஒடுங்கிவிடும். பிறகு அதை மருந்தாக அரைக்க முடியாது . உனக்கு ஆசையாக இருந்தால் பார்த்துவிட்டு போய்விடு. "அழகாக இருக்கிறாயே உன் விரலை ஒடித்தால் எப்படியிருக்கும்?" என்று எச்சரிப்பான் என்று எழுதியிருப்பார் கீரை, காய்கறி, பழங்கள், என இயற்கையின் பெருங்கருணை யல்லவா? நமது வாழ்வு நமதுசாரம் நமது ஜீவிதம் . நாமோ ஓர் இரவுக்குள் ஒரு வனத்தையே அழித்து விட்டு சாலைகளை விரிவுபடுத்துகிறோம். மானுடம் எத்தனை சுயநலமானது.

வாழ்வெனும் பெருங் கோடையை குளிர்விக்கும் நீர்கனி நீ எனக்கு. என்ற வரிகளில் குளிர்மையின் முகமாக புத்தனே பேரன்பின் மொழியாகிறான் . சொற்கள் புதைந்திருக்கும் உன் அடர் மௌனத்தில் பெருவனம் பூத்து மகிழ்கிறது. என்ற வரிகளில் தொடங்கும் கவிதை ஒரு வனத்தின் உதிர்வும் துளிர்ப்பும் ஆயிரமாயிரம் ஆண்டுகள் கடந்தும் உன் அமைதியை முன்னிறுத்துவதாக எழுதப்பட்ட வரிகளில் சிறகசைக்கிறார் புத்தர் .

தாழக் கிடக்கிறது வாழ்வெனும் பெருங் கொடி என்பதில் எத்தனை பாடுகளை மறைத்து வைத்திருக்கிறது புன்னகை . அங்குதான் ஞானம் சுடர்விடுகிறது கவிதையாக.

வாழ்வெனும் பெருங்கொடி உயர உயர உயர்ந்து கொண்டே போகிறது மகிழ்வைத்துயரை சமமென மதித்து . எதனால் இந்த பக்குவம் வந்தது? நிகழ்காலத்தின் உண்மையால் பேரன் பெனும் கிளைபரப்பியதால் என்ற கவிதை தான் இந்நூலின் மகுடம் தரித்த கவிதையாக சுடர்விடுகிறான் புத்தன் புன்னகையாலே. காலத்தை அவதானிப்பது தான் முதல் வேலை. கதிர் உதிக்கிறது நிலவுகரைகிறது . ஆம் வெளியெங்கிலும் நீயே நிறைந்திருக்கிறாய் கால வெளியின் ஒளியாக.

மனிதர்கள் மலர மனிதர்கள் அடைய தேடித் தந்தவன் நீ. இப்படி மானுடம் தழைக்கவும் நேசம் மலரவும் தீங்கிழைக்காத மனம் மலரவும் புத்தன் இவ்வுலகத்தின் தேடலாகிறான். நான் பிறந்த நாளென்பது உன்னைக் கண்டடைந்த நாளில் இருக்கிறது. தேடலில் சித்தார்த்தன் பாரதியின் கண்டடைதல் இந்நூலின் தொடக்கமாக. நழுவி ஓடைக்குள் விழுந்து ....

சூரியனை அடைகிறேன் அதோடு நின்று விடவில்லை **இந்த பூமியை முழுவதும் அணைத்துக் கொள்ள மீண்டும் ஒளியாக பூமிக்கும் திரும்புகிறேன். என்ற வரிகளில் உலகையே நேசிப்பதென்பது வானம் உனதாகும் போது மட்டுமே நிகழும் அற்புதம். அற்ப மனிதர்களோ அந்த வான்வெளியையும் போர்க்களமாக மாற்றிய தந்திரக்காரனாகி விட் டானா? அதோடு இணைய வழியிலும் விளையாட்டு என்பது மறைவதும் ஓடுவதும் சுடுவதும் இயந்திர விளையாட்டுகளில் குழந்தைகளின் மனம் கூட ஹிட்லரின் வெறித்தனத்தை விளையாட்டில் காட்டுகிற இந்த காலத்தில் இது போன்ற சித்தார்த் தன் பாரதியின் கவிதைப் புத்தகம் மெய்வழியில் நேசம் காட்டும் உயிர் வளர்க்கும் என்றே விழைகிறேன்.

தனியே இல்லை நான் ஜன்னலுக்கு வெளியே நிலவு என் அறைக்குள் ஒரு புத்தர். என்ற வரிகளில் தான் இயற்கை நமது தாய் தனிமை என்பது உலகை தனதாக்கிக் கொண்டவனுக்கு இல்லை. புத்தனாகி விடும் மாயாஜாலம் நிகழ்ந்த கணம் . உதிர்தலும் மறைதலும் போலவே இயல்பாய் மன்னிக்கவும் மறக்கவும் போதித்தாய்... என்பது சாதாரண வரிகள் அல்ல மானுடம் திசைமாறி வாழ இது ஒன்றே வழியாகும். புத்தகத்தின் தலைப்பின் கவிதை பக்கம் -54 உனது உருவிலேயே இருக்கின்றன பெரும் மழைக்கு பின்பான பகலில் பேரிதபோர்வை ஒன்றை நெய்து தருகிற வெயிலின் கைகள். என்ற கவிதையில் நீ மழையாகவும் இருக்கிறாய் அதன்பிறகான குளிருக்கு போர்வை நெய்து தரும் மென்வெயிலின் கைகள். என்பது புத்தனின் கைகளாக மலர்கிறது மென் வெயில். கடவுளாவதின் இரகசியத்தை போட்டுடைக்கிறார் கவி கடவுள் பல நிலைகளை கடந்து கடவுள் என்பது சித்தார்த்தன் புத்தரானது. என முடியும் வரிகளில் கூடுபாய்கிறார் கவி. எப்படி உனக்கு மட்டும் சாத்தியம் யுத்தங்கள் நிறைந்த பூமியில் மனிதர்களை அடையும் வழி அன்பென்பது. எனவினவுகிறார் வியப்பு மேலிட. அதன் முத்தாய்ப்பாக அவர் வரிகள் நின்று கிடப்பதல்ல துயரோ ,மகிழ்வோ வாழ்ந்து கடப்பதே... வாழ்க்கை. என்பது புத்தனின் வாழ்வியல் தந்த பாடம்.

அரசனே சாதரண மனிதனாகும் போது நாம் எம் மாத்திரம்? தன்னைத் தவிர தனக்கு எதையும் துணையாக்கிக் கொள்வதில்லை அறிவு.... பிறப்பின் வழியே பெருமைகள் ஏதுமில்லை அறிவின் வழியே செயல்களின் வழியே மனிதர்களை அளவிட்டவன் நீ. என முடியும் கடைசி பக்கக்கவிதை தம்பி சித்தார்த் தன் பாரதி அவர்களின் இதய விலாசத்தை அறிமுகமாகும் யாவருக்கும் புத்தனின் புன்னகையோடு மிளிர்கிறார்.

ஒரு மலை வாழ்வின் நிகழ்வில் கூழாங்கல்லாக ஆற்றின் இரைச்சலில் அமிழ்ந்து கிடந்து வற்றியப்பின் நம் கைகளுக்கு தரும் குளிர்ச்சி மலையினுடையது அல்ல. ஆற்றினுடைய குளிர்ச்சியல்லவா? அதுபோலவே நமக்குள்ளும் புத்தன் இருக்கிறான் என்பதை உணர்த்திய நூல் தம்பி சித்தார்த்தன் பாரதியுடையது. காலம் தனது வெற்றிப்பூ வை சித்தார்த்தன் பாரதியிடம் கையளிக்கும் நாள் வெகு அருகில் . நாமும் முகமற்ற புத்தனாகிறோம் நூல் வாசிப்பின்போது . இதுவே இந்நூலின் வெற்றி. வாழ்க தமிழ் வெல்க கவிதை

பதிப்பகம் - நம் நதி புக்ஸ் நூல் மதிப்பு -₹150 அழகிய வடிவமைப்பு அட்டைப் படம் பேரழகு. பக்கங்கள் கவிதை நேர்த்தியாக அமர்ந்திருக்கிறது அருவியின் சலசலப்பு ஓடையாகும் அமைதி போல புத்தனின் இருப்பு.

தொடர்புக்கு -9894795383






உன் ஸ்பரிசம் என்னை
மாற்றி விடுகிறது..

விரல் நுனியில்
மாயம் வைத்திருக்கிறாய்..

நீ தொட்டதும்
துவண்டிருக்கும்
மனசு பூக்கிறது..

உன்னை முன் வைத்தே
என் மொழி பிறரிடமும்..

ஆனாலும்
சீண்டிப் போகிறாய்
அறியாதவள் போல..

இரவிலும்
பச்சையம்
உன்னிடம்தான்
பெறும் இந்த
உயிர்த்தளிர்..



என் உயிரைத்
தொடு !

**ரிஷபன்**



## காத்திருத்தல்

பூவையுனைக்
காண்போமென்று
பொழுதெல்லாம்
காத்திருந்தேன்

கண்முடாமல் ஆனாலென்
உறக்கம் போனாலென்
காணலில் இனிது
காத்திருத்தல் அன்புக்காய்
என்னிதயம் மழையில்
நனைந்தாலும் அயராமல்
காத்திருக்கும்

இனியநல் அன்பதனை
மறுத்தாலும் இருக்கின்ற
நம்பிக்கை இனிதல்லவா
அவரவரும் தத்தமது
பாதையில் அடியே எனை
வீட்டுச் சென்றார்கள்

எவருமில்லை என்றாலும்
கேட்க இனிதாகும் உன்
காலடி ஓசை!

பாரிந்த உலகம் பனிதூவி
என்
இதயத்தில்
ஏக்கமூட்டும்



ஏக்கமொரு
வேதனை
என்றாலும்
எனக்கந்த
உணர்வே இனிமையாகும்.

**எஸ். சந்திரசேகரன்**
**அமுதா** செஞ்சிக்கோட்டை.



1. கோவிலில் பெண்
தெய்வங்கள் ஆண்களால்
அலங்கரிக்கப்படுகின்றன
கோவிலில் உள்ள ஆண்
தெய்வங்களை பெண்களால்
தொடக்கூட முடியாது
இதுவரை விடை தெரியாத
கேள்வி இது

2. 100 கிலோ அரிசி
மூட்டையை தூக்குபவனுக்கு
அதை வாங்க சக்தி இல்லை
100 கிலோ அரிசி மூட்டை
வாங்குபவனுக்கு அதை
தூக்க சக்தி இல்லை

3. ஆப்பிள் பழமாக
இருந்தாலும் சரி ஆப்பிள்
மொபைல் ஆக இருந்தாலும்
சரி அது ஏழைகளுக்காக
இருந்தது இல்லை

4. பணம் உழைத்து
வாழ்பவர்களிடம் பேசிவிட்டு
சென்று விடுகிறது பிறர்
உழைப்பில் வாழ்பவர்களிடம்
ஏசி போட்டு தங்கி விடுகிறது

5. முன்னாடி மனுஷன்



தூங்கினால்
உடம்பு ரெஸ்ட்
எடுக்கும்
இப்போது
மனுஷன்
தூங்கினால்
மொபைல்
ரெஸ்ட் எடுக்கிறது

**நடேஷ் கன்னா**
கல்லிடைக்குறிச்சி

## கைத்திறன் போற்று..!

சிற்றெறும்பும் புற்றெழுப்ப..
சிலந்தி வலைப் பின்ன..
உற்று நீ பார்த்தபடி
உட்காரலாமா?

எற்றிசையும் பறந்துழைத்து
இனிய தேன் எடுக்கும்
தேனி..!.. பார்த்தும்
இருந்தயிடம் சொர்க்கமென
நீ இருக்கலாமா?

அற்றுவிழும் விட்டில்களும்..
ஆகா.. பார் ஒளி உமிழும்..!
கற்றுணர்ந்த மனிதா..!
கைத்திறன் போற்றாது
கிடக்கலாமா?

நற்றவமே. மனிதனாக
இவ்வுலகில் பிறந்தாய்
நீ.. பெற்றவளும்
வாழ்த்திடுவாள்..!
கைத்திறனை போற்றாமல் நீ..
இருக்கலாமா?

ஏரெடுத்தால் நிலமுழுவாய்..
இரும்பெடுத்தால்
இயந்திரமாவாய்..
கைத்திறனை போற்றாது
வாழ்வு உண்டோ?

தூரெடுத்தால் ஊற்று
பொங்கும்.. துயர்களெல்லாம்
ஓய்ந்து போகும்..
ஊருக்குள் தலைநிமிர்ந்து
நடக்க வேண்டின்..
ஒப்பற்றக் கைத்தொழிலை
மறக்கலாமா?

பேரெடுத்தால் பெற்றவர்க்கு
மகிழ்ச்சி வருமே..!
பேதமில்லா சீர்பெற்ற
பூமியிலே சிந்திப்பாய்!
சிறப்பாக கைத்தொழிலைச்
செய்யாமல் இருக்கலாமா?

யார்பெற்ற பிள்ளையென்று
உலகம் வியக்க..
யாவருக்கும் பயன் நல்கும்
சீர் பெற்ற கைத்திறனை
வளர்க்க நீயும் மறக்கலாமா.?

**வே.கல்யாண்குமார்.**

## துரோகம்

அக கண்ணில்...
ஆராய்ந்து பார்த்தேன்
வளர்த்திருந்தான்
துரோகத்தை நக கண்ணாய்
வெட்டி எறிய நேரம் பார்த்து
எதிராளி என்னை!

## என்னை பற்றி!

என்ன இருக்கிறது...
இனிமேல் உன்னைப் பற்றி
எழுத இனியாவது
எழுதுகிறேன் என்னைப் பற்றி
எல்லாம் உன்னால் ஒரு
வழியாய் முடிந்தது என்று!

## இச்சை என்பது!

சுய இச்சைக்காய்...
எடுக்கும் முயற்சிகள்
தோல்வியை தரும்

சுய இச்சைக்காய்
தொடரும் உறவுகள்
துன்பத்தைத் தரும்

சுய இச்சைக்காய்
எடுக்கும் முடிவுகள்
சோதனையை தரும்

சுய இச்சைக்காய்
செய்யும் துரோகங்கள்
வேதனையை தரும்

சுய இச்சைக்காய்
இன்னொருவர்
துணையை தொடுவது
இன்னலை தரும்

சுய இச்சையில் வரும் மோகம்
மனதில் சபலத்தை தரும்

சுய இச்சைக்காய் செய்யும்
பாவம் முடிவில்
மரணத்தை தரும்!

## அழகான பொய்கள்!

நம்ம தலை மேல...
நெருப்ப வைச்சு
தண்ணியில மூழ்காம
நடன்னு சொல்லுவான்!

நம்ம தோள் மேல...
சுமையை ஏத்திட்டு
நம்ம தலைவிதியை
மாத்திரன்னு சொல்லுவான்!

நம்ம நாட்டு மேல...
கடனை ஏத்திட்டு
நாளை எதிர்காலம் நமக்கு
இருக்குன்னு சொல்லுவான்!

விதியை நம்பாதே...
வெறிகொண்டு வீரனாய்
நாளும் துணிவோடு
போராடுன்னு சொல்லுவான்!

இருக்கின்ற கஷ்டங்கள்...
இல்லாமை கொடுமைகள்
என் ஆட்சியில் மாறும்
என்று சொல்லுவான்!

நாட்டு மக்களுக்கு...
சேவை செய்யவே
நான் இருக்கிறேன் என்று
நம்பும்படி சொல்லுவான்!

தேர்தல் வாக்குறுதி...
என்ன ஆனது என்று
கேட்டால் எதுவும்
நம் கையில் இல்லை என்று
சொல்லுவான்!

கடைசியில் ஊழல்...
வழக்கில் கைதாகி
நான் சொல்வதெல்லாம்
உண்மை உண்மை தவிர
வேறில்லை என்று
நீதிமன்றத்தில் சொல்லுவான்!

இவை
வேறொன்றுமில்லை...
ஐந்தாண்டுக்கு ஒரு முறை



அப்பாவி மக்களை
நம்பி வைக்க
அரசியல்வாதிகள்
சொல்லும்
அழகான பொய்கள்!

**ஜெ.ம.புதுயுகம்**
பண்ணந்தூர்



## அன்னத்தைக் கேட்கும் அணங்கு!

பஃறொடை வெண்பா!

என்னவனைப்பார்த்திட்டால்
என்னிலை சொல்லிடுவாய்!
அன்னவனை எண்ணாமல்
ஆரணங்கு முன்போலே
இல்லையெனக்கூறிடுவாய்
எஞ்ஞான்றும்
உன்நினைவாய்ப்பல்லாற்றும்
சொல்லிக்கழலுவாய்
பாங்கன்னாய்!
உன்னைப்பிரிந்தவள்
ஊரிலே வாழமாட்டாள்
என்றே உரைத்திடுவாய்
ஏற்றமிகு அன்னவனின்
அன்பை எடுத்துவா
ஆங்கவர் எண்ணமென்!
அன்னத்தைக் கேட்கும்
அணங்கு!

**முனைவர்**
**இராம.வேதநாயகம்.**

எங்கெங்குக் காணினும்
சக்தியடா!

சக்தி சக்தி சக்தி
நீயில்லா இடமே இல்லை
சக்தி சக்தி சக்தி!

தாயிலே இருப்பாய் அன்பாய்
சக்தி சக்தி சக்தி!

இயற்கையில் இருப்பாய்
நீயே சக்தி சக்தி சக்தி!

மழலையில் இருப்பாய்
நீயே சக்தி சக்தி சக்தி!

மண்ணிலே இருப்பாய்
நீயே சக்தி சக்தி சக்தி!

விண்ணிலே இருப்பாய்
நீயே சக்தி சக்தி சக்தி!

கோளிலே இருப்பாய்
நீயே சக்தி சக்தி சக்தி!



பாலிலே
இருப்பாய்
நீயே சக்தி
சக்தி சக்தி!

சக்தி சக்தி
சக்தி!

**முனைவர்**
**இராம.வேதநாயகம்**
திருவண்ணாமலை.




## "பொம்மை மனிதர்கள்"

வாக்கு என்ற
விலை மதிப்புள்ள
ஆயுதத்தை
கையில் வைத்தும்
விழுந்து கிடக்கிறார்கள்
பொம்மைகளாக!

தலைவா என்று
ஒருவன் கத்தினால்
தொண்டை கிழியக்
கூட்டமும் கத்தும்!
ஏன்?...எதற்கு? என
கேட்காதவர்கள்!

நேற்று ஏமாற்றினான்...
இன்று ஏமாற்றுகிறான்...
நாளையும் ஏமாற்றுவான்...
அறிந்தே கை தட்டும்
அறிவிலிக் கூட்டம்!

அரசியல்வாதி
பொம்மலாட்டக் கலைஞன்
மக்கள் அவன் விரலிலாடும்
பொம்மைகள்!

வாக்குறுதி என்ற
காகிதப் பட்டம்
பறக்க விடுவார்கள்
அதைப் பிடிக்க ஓடும்
மக்கள் சுய அறிவை
காற்றில் பறக்க
விடுவார்கள்!.

சிந்திக்க மறந்த கூட்டம்
இவர்கள்
சுரண்டப்படுவதற்கே
பிறந்த கூட்டம்!

கேள்வி கேட்காத
குடிமகன் கயிறு கட்டிய
பொம்மை மனிதன்!



இந்த
பொம்மைகள்
கயிற்றை
அறுத்து
நிமிரும் போது
அரசியல்
மேடைகள்
வெறிச்சோடிவிடும்!

**முகில் தினகரன்**
கோயமுத்தூர்

## யார் அறிவார்

மனித இனமும்
தாவர இனமும் ஒன்னுதான்,,,

மனிதர்கள் எல்லாம்
ஒன்னுப்போல
தோன்றினாலும்
மனதின் எண்ணங்கள்
மாறுப்படுகிறது


தாவரங்கள் எல்லாம்
ஒன்னுப்போல
தோன்றினாலும்
மலரின் வண்ணங்கள்
மாறுப்படுகிறது

மனது நினைப்பதையும்



மலர்கள்
மலர்வதையும்
யார்
அறிவார்,,,?

**நாகை**
**ஆசைத்தம்பி**
கோவை



## வியர்ந்து பார்க்காதே

வியப்பாய் நீ இருக்க
நீ வியர்ந்து பார்க்க என்ன
இருக்கு....

தேனாய் நீ இருக்க
திரவியம் எனக்கு எதற்கு...

ஒழியாய் நீ இருக்க
வெளிச்சம் நமக்கு எதற்கு...

உயிராய் நீ இருக்க
ஈருடல் நமக்கு எதற்கு...

உன்னை வர்ணிக்க வயது
வரம்பு நமக்கு எதற்கு...

பொழுது சாயும் முன்னே
பொருமையிழக்க
வேணாமுன்னே....
இரவு பொழுது இதமா
அமையுமுன்னே...



உன் அழகை
ஒருமுறை
ரசித்தேன்
கண்ணே....!!


**பொன்.**
**கருணா**
நவி மும்பை

எளிதில் கிடைத்திடும்



எதற்கும் நிஜ
மதிப்பில்லை.
உழைப்பெனும்
உப்பில்
உறுவதே
வாழ்வின்
சுவை.

**கே. பி. ஜனார்த்தனன்**



## வெண் மேகங்கள்

காற்றினில் மிதந்து வந்த
கார்முகிலே கனவினை
அள்ளித் தெளிக்கும்
ஆறமுதே கண்களைத்
தழுவிச் செல்லும் கானகமே
கவிதை நூறு கண்ட
நூலகமே கண்ணாடி பிம்பம்
காட்டும் வெண்மேகமே
காதலை தூது சொல்வாய்
அன்னமே கல்மாரி நீ தூவு
மனம்குளிர காவேரி
பெருகட்டும் கஷ்டம் தீரட்டும்



கணையாழி
நான் உனக்கு
சூட்டுகிறேன்
காதலனாய்
நீ வருவாய்
காதலுடன்

**கவிஞர்**
**முனைவர் நா.மோகன**
**செல்வி மனோகரன்**
கோபிசெட்டிபாளையம்

## குன்றின் மேல் இட்ட விளக்கு

இருள் சூழும் உலகில்
மேட்டு நிலத்து சுடராய் !

குன்றின் மேலிட்ட விளக்காய்
உன் அறிவு மிளிரட்டும் !

யாவருக்கும் வெளிச்சம் தந்து
தன்னலம் கருதாது உயர்ந்து
திசையெட்டும் வழிகாட்டும் !

உன் வாழ்வு நிலைக்கட்டும்!

மலையின் உச்சியில் எரியும்
தீபம் மறைக்க முடியாத
பேருண்மை!

உலகிற்கு வழி சொல்லும்
உயர்ந்த மனிதனின்
அடையாளம்!

இருளை விரட்டும் சுடர் நீ !

இயல்பில் உயர்ந்த
விளக்கு நீ!

குன்றின் மேல் இட்ட
விளக்கைப்போல
ஒருவனுடைய நற்பண்புகளும்
திறமைகளும் புகழும்
உலகிற்கு வெளிப்படையாக
தெரிய வேண்டும்!

ஒன்றா ஒளி தந்து நில்லுமே
இருளை நீக்கி உலகைக்
காக்கும்!

அருளை தந்து வழிகாட்டும்!

தன்னலம் கருதாது
உயர்த்தியே நின்று
அனைவருக்கும்
வெளிச்சம் பகிரும் பண்பு!

உயர்ந்த உள்ளத்திற்குச்
சான்றாகும்!
இருண்ட காட்டில் வலி தவறி
நின்றால் வெளிச்சம் எங்கே
என கண்கள் தேடும்!

தன்னை உருக்கி சுடரை ஏந்தி
தலை நிமிர்ந்து நிற்கும் அந்த
தீபம் !

பள்ளத்தாக்கில் வாழும்
மாந்தருக்கு பயத்தைப்
போக்கும் மங்கள ரூபம்!

மேகங்கள் மோதி
காற்றடித்தாலும் மேனி
அசையாது சுடர்விடும் ஒளி!

உயர்ந்த இடத்தில் ஊன்றிய
தீபம் உலகம் முழுமைக்கும்
பொதுவான வழி!
சொல்லும் செயலும் தூய்மை
கொண்டால்!

வாழ்வும் குன்றின் விளக்காய்
மிளிரும்!

பள்ளத்தில் இருக்கும் விளக்கு
ஒரு அறைக்கு மட்டுமே
உதவும்!

குன்றின் மேல் இருக்கும்
விளக்கு பாகுபாடு இன்றி
அனைவருக்கும் வழிகாட்டும்!

உயர்ந்த இடத்தில் உள்ள
ஒளியை யாராலும் மறைக்க
முடியாது !

உண்மையான திறமையும்
நற்பண்பும் கொண்ட மனிதர்



ஒளிந்து வாழ
முடியாது!

உலக அறிய
போற்றப்படும்!

**பெ.திருமுகம்**
ஆசிரியர்.மணமேல்குடி

## நல்லதோர் வீணை!

நல்லதோர் வீணை நம் குழந்தை
நலம் கெட புழுதியில் எரிவது முறையோ?

பிறந்தது பெண் குழந்தை என்று தெரிந்தால்
பேசாமல் தெருவில் வைத்து விடும் அவலம்!

பிஞ்சுக் குழந்தை செய்திட்ட குற்றமென்ன ?
பிறந்த குழந்தைக்குத் தண்டனை தரலாமோ?

குழந்தையில் ஆண் என்றால் மதிப்பதும்
குழந்தை பெண் என்றால் மதிக்காததும் ஏனோ?

கணினியுகத்திலும் நாட்டில் இன்னும் சிலர்
காட்டு மிராண்டிகளாக நடப்பது தான் சரியோ?

பெண்ணுரிமை பேச்சு அளவிலேயே உள்ளது
பிறக்க உரிமை இல்லாத அவல நிலையே!

ஆணை வரவென்றும் பெண்ணை செலவென்றும்
அறிவிலித்தனமாகப் பேசுவதை முதலில் நிறுத்துங்கள்!

கள்ளிப்பால் ஊற்றும் கொடுமையை ஒழியுங்கள்
கனிவோடு பெண் குழந்தையை வளருங்கள்!

நெல்மணிகளிட்டு கொலை செய்வது நிறுத்துங்கள்
நிலத்திற்கு வந்த மாமணியாக மதித்து வளருங்கள்!

பிறந்த பெண் குழந்தையிடம் பாசம் காட்டுங்கள்
பேதலிக்காது பெருமையோடு மகளை வளருங்கள்!

பெண் இனத்தின் சாதனைகள் சொல்லில் அடங்காது
பெருமைமிகு பெண் இனத்தை வளர விடுங்கள்!

ஆணாதிக்கம் சிந்தனைகளை அழித்து விடுங்கள்
ஆண், பெண் சமம் நினைவில் கொள்ளுங்கள்!

மூச்சு உள்ளவரை பாசம் காட்டுபவள் மகள்
மோசம் செய்யாது நேசம் வைப்பவள் மகள்!



வயிற்றிலிருந்து வந்த தேவதை மகள்
வையகத்தின் மகிழ்வை உணர்த்துபவள் மகள்!

வாழ்வாங்கு வாழ்ந்திட வழி செய்பவள் மகள்
வாய்விட்டுச் சிரித்து கவலை களைபவள் மகள்!

நல்லதோர் வீணை நம் பெண்குழந்தை
நாளும் போற்றி சீராட்டி வளர்த்திடுவோம்!

**கவிஞர் இரா. இரவி**

## அன்பின் அலைகள்

அன்பின் அலைகள்
உள்ளத்தில் பரவசமாக
வீசுகிறது என் உள்ளக்
கடலில் அன்பு என்ற அலை
மகிழ்ச்சியாக வந்து வந்து
போகிறது குட்டி புன்னகையில்
மெட்டு போட்ட பாட்டு போல
மனம் ரசிக்கிறது
குறைவான
வார்த்தைகளாக
இருந்தாலும்
நிறைவான மகிழ்வை
தருகிறதே...
பிரேமத்தில் வீசும்
கடல் அலைக்கு இணையே
கிடையாது இவையெல்லாம்
வருவதால் வாழ்க்கை
நிறைவாகிறதே ...
வீசும் தென்றல் கூட
கொஞ்சம் அன்பை
காட்டுகிறதே... இன்பத்தின்
அலைகளில் துன்பமெல்லாம்
கரைந்து ஓடி கடலில்



கரைகிறதே .....
மனிதாபிமானம்
நிறைந்த இறைவனை
வணங்குவோம்...
மகிழ்ச்சி கடலில்
தத்தளிப்போம் ...

**உஷா முத்துராமன்**


WANTED:
FEMALE ANCHORS
• Age 18 to 35
• Good Looking
• Work from Home
(Full-time/Part-time)
Salary: Rs. 20,000 to 50,000
Call / Whatsapp:
7789941009
9337501889


START YOUR OWN
EPAPER
WEBSITE TODAY!
CALL 7789941009


WANTED
TELECALLERS
• Work at Home
• Fulltime or Parttime
Salary Rs. 20000 to 50000/-
Call / Whatsapp:
7789941009
9337501889


அனைத்து பிரிவினருக்கும்
என் துணை
திருமண தகவல் மையம்
உங்கள் மணமகனை / மணப்பெண்ணைப் பதிவு செய்யவும்.
www.enthunai.com
support@enthunai.com
7871617005
7789941009


Sanjay
Cell: 90032 64920
Real Choice
Retail & Wholesale Dealers In: Designer Sarees, Chudidhar, Laganga, Choli & Wedding Collection
#361, Mint Street, (Opp. New Jain Temple)
Sowcarpet, Chennai-600 079.
Real Choice Chennai
Real Choice Chennai
Real Choice Chennai


WANTED
Needed female staff to look after children, patients.
Contact
9150989424


WANTED
Retd, VRS, Home Makers, NRIs, Business Person
Contact
8248951872


WANTED
Site Supervisor required
for construction work in Ambattur
Contact:
8428872887


keerthi foundation
De Addiction Cum Rehabilitation Centre
INTERNSHIP & JOB OPPORTUNITIES
MSW & M.Sc Psychology - Freshers
Internship:
Clinical Training
Counseling Practice
Case Work
Jobs:
Social Worker
Jr Psychologist
Rehab Counselor
Build Your Career in De-Addiction & Mental Health Care
Call: 9841945060 | 7845027710
www.keerthifoundation.com


Wanted
REPORTERS
சட்டமன்ற தொகுதி வாரியாக
நிருபர்கள் தேவை
PRESS
PRESS
PRGI No. TNBIL/25/A1564
பேப்பர்பாய்
8122664699


தனியார் வாகன உதிரிபாகங்கள் உற்பத்தி செய்யும் நிறுவனத்தில் பணிபுரிய ஆட்கள் தேவை.
Quality Line Inspector
Fresher/Exp Male Only
Qualification - ITI/Diploma/B.E
Final Quality Inspector
Fresher / Exp - Male/Female
Qualification: 10th/ 12th/ ITI
VMC Machine operator
Fresher/ EXP Male only
Qualif: 10th/12th/ITI/Diploma
Mr Prakesh : 8939 940 090
Mr.Neelavanan : 9884 001 253
SALARY BASED ON EXPERIENCE


அருள்மிகு ஸ்ரீ மாலையம்மன் சமேத அருள்மிகு சுப்பிரமணியர் துணை
அருள்மிகு திருச்செந்தூர் முருகர் துணை
ஸ்ரீ ஹரி
ஜோதிட மையம்
ராசி
ஜாதகம், திருமணப் பொருத்தம், ஜாமக்கோள் , ஆரூடம் பார்க்கப்படும்.
தாம்பூல பிரசன்னம் , சோழி பிரசன்னம், அஷ்ட மங்கல பிரசன்னம்
மேலும் திருமணம், புத்திர பாக்கியம், கல்வி, தொழில் ஆகியவற்றில் ஏற்பட்ட தடைகளுக்கு ஜோதிடரீதியான தீர்வு செய்யப்படும்.
ஜோதிட நிபுணர் இராஜபாளையம்
இராமமூர்த்தி MA Astro
81899 08040 / 93425 03572
harisudhan1968@gmail.com



































**WANTED**
experienced candidates in
**AUTO CAD**
Chennai / Coimbatore
minimum 3 years experience
**Cell: 9363084990**





**WANTED**
MARKETING HEAD
REAL ESTATE
Fixed Salary Rs.25000/-
& Above + INCENTIVE
(Monthly up to - 1.5 Lakhs)
Age: 25 to 40 Experienced Only
Office @ Anna Nagar
**9790021367**

**WANTED**
COLLECTION EXECUTIVES
TELECALLERS
FOR MNC BANK.
**Sal.23,000/-**
161, Bells Road, Chennai - 05.
Ct.: 98410 38488 / 93848 17349

**ஐஸ் கடை**
வேலைக்கு ஆட்கள்
தேவை (பெண்கள்)
10.00 - 7.00 மணி வரை
சௌகார்பேட்டை
**9829571998**

# பல்சுவை களஞ்சியம்




## யாருக்கு என்ன பாடல்




இன்றைய பொது வாழ்வு மற்றும் அரசியல் சூழலில்பாடல்கள் ஒரு தொகுப்பு

முகஸ்டாலின் : வாராய் நீ வாராய்.

எடப்பாடி பழனிச்சாமி : யாரை நம்பி நான் பொறந்தேன்.

விஜய் : ஆறு மனமே ஆறு.

காங்கிரஸ் : ஒன்னாயிருக்க கத்துக்கணும்.

பிரேமலதா தேமுதிக: காகித ஓடம் கடல் அலை மேலே போவது போல மூவரும் போவோம்.

சீமான் நாம் தமிழர் : வந்தவனைக்கேட்டால் சென்று விடு என்பான்

ராமதாஸ் : உன்னைச்சொல்லி குற்றமில்லை

அன்புமணி : வீடு வரை உறவு.

திருமா விசிக :இருக்கும் இடத்தைவிட்டு இல்லாத இடம் தேடி.

கம்யூனிஸ்ட் : உலகம் ஆயிரம் சொல்லட்டுமே!

நயினார் பாஜக : நான் சிரிக்கிறேன் சிரிக்கிறேன்

அண்ணாமலை : தென்பாண்டிச்சீமையிலே!

உதயநிதி : ஆண்டவன் படைச்சான்.

கமல் : ஆயிரம் கைகள்மறைத்து நின்றாலும்.

ரஜினிகாந்த் : ராமன் ஆண்டாலும் ராவணன் ஆண்டாலும்.

**நா.புவனாநாகராஜன்**
செம்பனார்கோவில்

## காகத்துக்கு ஏன் உணவு வைக்க வேண்டும்?



தினமும் ஒவ்வொரு வேலையும் சாப்பிடத் தொடங்கும் முன்பு, உங்கள் முன்னோரை நினைத்துக் கொள்ளுங்கள். 'இந்த உணவு உங்களால் வந்தது' என்று மனதுக்குள் நினைத்து அவர்களை வணங்குங்கள்

வணங்கினால் மட்டும் போதுமா? அவர்களுக்கும் உணவு கொடுக்க வேண்டாமா? அதற்கு உங்களுக்கு காகம் உதவுகிறது. தினமும் காலையில் காகத்துக்கு உணவு வையுங்கள். நீங்கள் வைக்கும் உணவை காகம் சாப்பிடும்போது உங்கள் கர்ம வினைகள் கரைவதாக ஐதீகம். தினமும் காகத்துக்கு உணவளிக்கும் பட்சத்தில் நாளடைவில் உங்கள் கர்ம வினைகள் எல்லாம் காணாமல் போய் விடும்.



**ராஜகோபாலன்.ப**
சென்னை 18

## மீம்ஸ்










## விடுகதை



| | |
|---|---|
| வாயில் இருந்து நூல் போடுவான், மந்திரவாதி இல்லை; கிளைக்கு கிளை தாவுவான் ஆனால் குரங்கு இல்லை; வலை விரித்து பதுங்கி இருப்பான் ஆனால் வேடன் இல்லை அவன் யார்? | சிலந்தி |
| நீளவால் குதிரையின் வால் ஓடஓடக் குறையும் அது என்ன? | தையல் ஊசியும் நூலும் |
| எவர் கையிலும் சிக்காத கல், எங்கும் விற்காத கல் அது என்ன? | விக்கல் |
| கண்ணால் பார்க்கலாம் கையால் பிடிக்கமுடியாது அது என்ன? | நிழல் |
| செய்தி வரும் பின்னே மணி ஓசை வரும் முன்னே அவன் யார்? | தொலைபேசி |
| அள்ள முடியும் ஆனால் கிள்ள முடியாது அது என்ன? | தண்ணீர் |

## ஜோக்ஸ்



ஒருவர் ; லட்டுப் போல பொண்ணுப் பார்த்து கட்டி வைத்தியே எப்படி இருக்கா ?
மற்றவர் ;பூந்திப் போல குடும்பத்தை உடைத்து மகனை பிரித்து தனி குடித்தனம் போய் விட்டாள்.

-------------------------


நோயாளி ;நீங்க கடைசியா எழுதி உள்ள மருந்து எங்குமே கிடைக்க வில்லை .
மருத்துவர் ;.எங்குமே கிடைக்காது .அது என் கையெழுத்து .

-------------------------

செவிலியர் ;அறுவைச்சிகிச்சை செய்யும் நேரத்தில் புத்தகம் படிக்கிறீர்கள்
மருத்துவர் ;.சிறுநீரகம் எங்கு இருக்கும் என்பது மறந்து போச்சு. புத்தகத்தில் பார்க்கிறேன் .

-------------------------

மருத்துவ் பேராசிரியர் ;ஆண் மருத்துவ மாணவர்கள் மட்டும் இருந்த வகுப்பில் கர்ப்பபையைக் காட்டி இது என்ன தெரியுதா ? என்றார்.
பலரும் யோசித்தனர் .
மருத்துவ் பேராசிரியர் ; உனக்கும் எனக்கும் இல்லாதது அது என்ன? என்றார்



மாணவன் ; மூளையா ? என்றான் .

-------------------------

10000 ரூபாய் 20000 ரூபாய் செலவு செய்து சுற்றினால் சுற்றுலா என்கின்றனர்.
10 ரூபாய் 20 ரூபாய் செலவு செய்து சுற்றினால் தண்டச்சோறு என்கின்றனர் .

-------------------------

செவிலியர் ; நாளைக்கு நீங்க அறுவைச் சிகிச்சை செய்ய இருந்த நோயாளி 10 வது மாடியில் இருந்து குதித்து இறந்து விட்டார் .
மருத்துவர் ; அசச்சோ அவசரப்பட்டு விட்டாரே

-------------------------

ஜலதோஷம் ஏன் பிடிக்கிறது ?
மூக்கு மேலே இரண்டு ஐஸ் ( eyes) இருக்கு அதனால ஜலதோஷம் ஏன் பிடிக்கிறது ?



# வாங்க சம்பாதிக்கலாம்

## வானிலை மையத்தில் வாய்ப்பு



இந்திய வெப்பமண்டல வானிலை ஆய்வு மையத்தில் (ஐ.ஐ.டி.எம்.,) தற்காலிக பணிக்கு விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.
'ரிசர்ச் பெல்லோ' பிரிவில் மொத்தம் 15 இடங்கள் உள்ளன.
கல்வித்தகுதி: எம்.எஸ்சி., + யு.ஜி.சி., நெட் / GATE / JEST தேர்வு தேர்ச்சி.
வயது: 18-28 (27.4.2026ன் படி)
தேர்ச்சி முறை: எழுத்துத்தேர்வு, நேர்முகத்தேர்வு
விண்ணப்பிக்கும் முறை: ஆன்லைன்
கடைசிநாள்: 27.4.2026
விவரங்களுக்கு: tropmet.res.in

## நிலக்கரி நிறுவனத்தில் சி.ஏ., முடித்தவருக்கு பணி




நெய்வேலி நிலக்கரி நிறுவனத்தில் (என்.எல்.சி., ) காலியிடங்களுக்கு அறிவிப்பு வெளியாகியுள்ளது.
'இன்டஸ்ட்ரியல் டிரைனி' பிரிவில் நெய்வேலி 26, தலபிரா 8, கான்பூர் 6, தூத்துக்குடி 4, சென்னை 4, பார்சிங்சர் 4 உட்பட மொத்தம் 56 இடங்கள் உள்ளன.
கல்வித்தகுதி: சி.ஏ., / சி.எம்.ஏ.,
வயது: 18-28 (1.3.2026ன் படி)
தேர்ச்சி முறை: சான்றிதழ் சரிபார்ப்பு
ஸ்டைபண்டு: மாதம் ரூ. 22 ஆயிரம்
விண்ணப்பிக்கும் முறை: ஆன்லைன்
கடைசிநாள்: 9.4.2026
விவரங்களுக்கு: nlcindia.in

## 1358 பணியிடங்கள் மத்திய அரசில்



மத்திய அரசின் பல்வேறு துறைகளில் காலியிடங்களுக்கு யு.பி.எஸ்.சி., அறிவிப்பு வெளியிட்டுள்ளது.
மெடிக்கல் ஆபிசர் பதவியில் மத்திய சுகாதார சேவை 864, ரயில்வே 450, டில்லி மாநகராட்சி கவுன்சில் 14, டில்லி மாநகராட்சி 30 என மொத்தம் 1358 இடங்கள் உள்ளன.
கல்வித்தகுதி: எம்.பி.பி.எஸ்.,
வயது: 18-32 (1.8.2026ன் படி)
தேர்ச்சி முறை: எழுத்துத்தேர்வு, நேர்முகத்தேர்வு.
விண்ணப்பிக்கும் முறை: ஆன்லைன்
விண்ணப்பக்கட்டணம்: ரூ. 200. பெண்கள் / எஸ்.சி., / எஸ்.டி., பிரிவினருக்கு கட்டணம் இல்லை.
கடைசிநாள்: 31.3.2026
விவரங்களுக்கு: upsc.gov.in

## 81 இன்ஜினியர் பணிகள் தேசிய மின்சார நிறுவனம் அழைக்கிறது



தேசிய நீர் மின்சார நிறுவனத்தில் (என்.எச்.பி.சி.,) காலியிடங்களுக்கு அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.
'டிரைனி இன்ஜினியர்' பிரிவில் சிவில் 14, எலக்ட்ரிக்கல் 39, மெக்கானிக்கல் 28 என மொத்தம் 81 இடங்கள் உள்ளன.
கல்வித்தகுதி: பி.இ., / பி.டெக்.,
வயது: 18-30 (6.4.2026ன் படி)
தேர்ச்சி முறை: GATE 2024, GATE 2025 தேர்வு மதிப்பெண், குழு விவாதம், நேர்முகத்தேர்வு
விண்ணப்பிக்கும் முறை: ஆன்லைன்
விண்ணப்பக்கட்டணம்: ரூ. 708. பெண்கள் / எஸ்.சி., / எஸ்.டி., பிரிவினருக்கு கட்டணம் இல்லை.
கடைசிநாள்: 6.4.2026
விவரங்களுக்கு: nhpcindia.com

## எரிசக்தி துறையில் மேனேஜர் வாய்ப்பு



இந்திய புதுப்பிக்கத்தக்க எரிசக்தி வளர்ச்சி நிறுவனத்தில் (ஐ.ஆர்.இ.டி.ஏ.,) காலியிடங்களுக்கு அறிவிப்பு வெளியாகியுள்ளது.
ஆபிசர் 8, எக்சிகியூட்டிவ் 1, 'ஜெனரல் மேனேஜர்' பிரிவில் அக்கவுன்ட்ஸ் 8, புராஜக்ட் 10, சட்டம் 3, பிசினஸ் டெவலப்மென்ட் 2 என மொத்தம் 32 இடங்கள் உள்ளன.
கல்வித்தகுதி: பட்டப்படிப்பு / பி.இ., / பி.டெக்., / பி.எல்., / எம்.பி.ஏ., / சி.ஏ.,
வயது: 18-55 (3.4.2026ன் படி)
அனுபவம்: தொடர்புடைய பிரிவில் பணி அனுபவம் தேவை.
தேர்ச்சி முறை: எழுத்துத்தேர்வு, நேர்முகத்தேர்வு
விண்ணப்பிக்கும் முறை: ஆன்லைன்
விண்ணப்பக்கட்டணம்: ரூ. 1000. எஸ்.சி., / எஸ்.டி., பிரிவினருக்கு கட்டணம் இல்லை.
கடைசிநாள்: 3.4.2026
விவரங்களுக்கு: ireda.in

## அழைக்கிறது சைனிக் பள்ளி




பாதுகாப்பு அமைச்சகத்தின் கீழ் செயல்படும் திருப்பூர் அமராவதிநகரில் உள்ள 'சைனிக்' பள்ளியில் காலியிடங்களுக்கு அறிவிப்பு வெளியாகியுள்ளது.
எம்.டி.எஸ்., 13, வார்டு பாய்ஸ் 3 உட்பட மொத்தம் 17 இடங்கள் உள்ளன.
கல்வித்தகுதி: பத்தாம் வகுப்பு / பட்டப்படிப்பு + பி.பிஎட்.,
வயது: 21-50 (1.5.2026ன் படி)
தேர்ச்சி முறை: எழுத்துத்தேர்வு, ஸ்கில் தேர்வு, நேர்முகத்தேர்வு.
விண்ணப்பிக்கும் முறை: இணைய தளத்தில் உள்ள விண்ணப்பத்தை பதிவிறக்கி, பூர்த்தி செய்து கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்ப வேண்டும்.
Principal, Sainik School, Amaravathinagar - 642 102, Udumalpet Taluk, Tiruppur District.
விண்ணப்பக்கட்டணம்: ரூ. 500. எஸ்.சி., / எஸ்.டி., பிரிவினருக்கு ரூ. 200.
கடைசிநாள்: 31.3.2026
விவரங்களுக்கு: sainikschool amaravathinagar.edu.in

# 2வது நாளாக பங்குச் சந்தை ஏற்றம்: 23,581 புள்ளிகளை எட்டிய நிஃப்டி, சென்செக்ஸ் 568 புள்ளிகள் உயர்வு!

சென்செக்ஸில் எடர்னல் நிறுவனம் 5.70 சதவீதம் உயர்ந்து அதிகபட்ச ஏற்றம் கண்டது. இதனை தொடர்ந்து டாடா ஸ்டீல், மஹிந்திரா & மஹிந்திரா, பாரத் எலக்ட்ரானிக்ஸ், லார்சன் & டூப்ரோ, பார்தி ஏர்டெல் மற்றும் மாருதி உள்ளிட்ட பங்குகள் உயர்ந்தன. மறுபுறம் இன்ஃபோசிஸ், பஜாஜ் ஃபைனான்ஸ், ஐடிசி, டாடா கன்சல்டன்சி சர்வீசஸ் மற்றும் எச்.சி.எல் டெக் ஆகிய பங்குகள் சரிந்தன.

நிஃப்டி-யில் எடர்னல், டாடா ஸ்டீல், எம்&எம், எச்டிஎஃப்சி லைஃப் மற்றும் பாரத் எலக்ட்ரானிக்ஸ் உள்ளிட்ட பங்குகள் உயர்ந்தும் அதே நேரத்தில் விப்ரோ, டாடா கன்ஸ்யூமர், இன்ஃபோசிஸ், சிப்லா, ஐடிசி ஆகிய பங்குகள் சரிந்தன.

நிஃப்டி மிட்கேப் 100 குறியீடு 1 சதவீதம் உயர்ந்த நிலையில், ஸ்மால்கேப் 100 குறியீடு கிட்டத்தட்ட 0.65 சதவீதம் அதிகரித்தன.

துறை வாரியாக எஃப்எம்சிஜி குறியீடு 0.7% சரிவுடனும் ஐடி துறை குறியீடும் 1% சரிந்தன. மற்ற அனைத்து குறியீடுகளும் ஏற்றத்துடன் முடிவடைந்தன. மூலதனப் பொருட்கள், தொலைத்தொடர்பு, ஆட்டோ, உள்கட்டமைப்பு, ஊடகம், உலோகம், ரியல் எஸ்டேட், தனியார் வங்கி உள்ளிட்ட பங்குகள் தலா 1 முதல் 2 சதவீதம் வரை உயர்ந்தன.

ஆசிய சந்தைகளில், தென் கொரியாவின் முக்கிய குறியீடான கோஸ்பி 1.63 சதவீதம் உயர்ந்த நிலையில் ஹாங்காங்கின் ஹாங் செங் குறியீடு சற்று உயர்வுடன் முடிவடைந்தன. ஜப்பானின் நிக்கெய் 225 குறியீடு மற்றும் ஷாங்காயின் எஸ்.



எஸ்.இ காம்போசிட் குறியீடு ஆகியவை சரிந்து முடிவடைந்தன.

ஐரோப்பாவில் சந்தைகள் உயர்வுடன் வர்த்தகமான நிலையில் அமெரிக்க பங்குச் சந்தை நேற்று (திங்கள்கிழமை) உயர்வுடன் முடிவடைந்தன.

தரவுகளின் அடிப்படையில், வெளிநாட்டு நிறுவன முதலீட்டாளர்கள் நேற்று (திங்கள்கிழமை) ரூ. 9,365.52 கோடி மதிப்புள்ள பங்குகளை விற்பனை செய்துள்ள நிலையில் உள்நாட்டு நிறுவன முதலீட்டாளர்கள் ரூ. 12,593.36 கோடி மதிப்புள்ள பங்குகளை வாங்கியுள்ளனர்.

செல்லோ வேர்ல்ட், டாடா எல்எக்ஸி, ரிலாக்ஸோ ஃபுட்வேர், ஜோதி லேப்ஸ், விப்ரோ, சி இ இன்ஃபோ சிஸ்டம்ஸ், நியூஜென் சாஃப்ட்வேர், இன்ஃபோசிஸ், சிப்லா, குஜராத் ஸ்டேட் பெட்ரோ, ஆரக்கிள் ஃபைனான்சியல் சர்வீசஸ், கோஃபோர்ஜ், டிசிஎஸ், பாட்டா இந்தியா, டாடா டெக்னாலஜிஸ், மாஸ்டெக், சொனாட்டா சாஃப்ட்வேர், எஸ்பிஐ கார்டு உள்ளிட்ட 340 மேற்பட்ட பங்குகளும் இன்றைய வர்த்தகத்தில் அதன் 52 வார குறைந்தபட்ச விலையை எட்டியது.

உலகளாவிய பிரென்ட் கச்சா எண்ணெய், பீப்பாய் ஒன்றுக்கு 2.44 சதவீதம் உயர்ந்து 102.7 அமெரிக்க டாலராக உள்ளது.

## தொடர்ந்து சரியும் தங்கம் விலை



சென்னையில் ஆபரணத் தங்கத்தின் விலை புதன்கிழமை பவுனுக்கு ரூ.640 குறைந்து ரூ.1,16,560-க்கு விற்பனையாகிறது.

சென்னையில் தங்கம் விலை கடந்த வாரம் இறுதி முதல் தொடர்ந்து குறைந்து வருகிறது. வாரத்தின் முதல் நாளான திங்கள்கிழமை விலை பவுனுக்கு ரூ.400 குறைந்து ரூ.1,17,680-க்கு விற்பனையானது.

இந்தச் சூழலில் செவ்வாய்க்கிழமை கிராமுக்கு ரூ.60 குறைந்து ரூ.14,650-க்கும், பவுனுக்கு ரூ.480 குறைந்து ரூ.1,17,200-க்கும் விற்பனையானது.

இந்த நிலையில், புதன்கிழமை பவுனுக்கு ரூ.640 குறைந்துள்ளது.

அதன்படி, கிராமுக்கு ரூ.80 குறைந்து ரூ.14,570-க்கும், பவுனுக்கு ரூ.640 குறைந்து ரூ.1,16,560-க்கும் விற்பனையாகிறது.

வெள்ளி விலை அதேபோல வெள்ளி விலையும் சற்று குறைந்துள்ளது.

கிராமுக்கு ரூ.5 குறைந்து ரூ.275-க்கும், ஒரு கிலோ (கட்டி வெள்ளி) ரூ.5,000 குறைந்து ரூ.2.75 லட்சத்துக்கும் விற்பனையாகிறது.

கடந்த 7 நாள்களுக்கான தங்கம் விலை விவரம்:

நாள் பவுன் விலை (8 கிராம்)
மார்ச் 12 ரூ.1,19,760 (-ரூ.1,200)
மார்ச் 13 ரூ.1,19,200 (-ரூ.560)
மார்ச் 14 ரூ.1,18,080 (-ரூ.1,120)
மார்ச் 15 ரூ.1,18,080 (மாற்றம் இல்லை)
மார்ச் 16 ரூ.1,17,680 (-ரூ.400)
மார்ச் 17 ரூ.1,17,200 (-ரூ.480)
மார்ச் 18 ரூ.1,16,560(-ரூ.640)




இந்த பகுதியில் உங்கள் படைப்புக்கள் வரவேற்கிறோம்



whatsapp No
8122664699

# 4 லட்சம் பணியாளர்களுக்கு விரிவான பயிற்சிகள்



**சென்னை, மார்ச் 19:**
தமிழக சட்டசபை தேர்தலை முன்னிட்டு 4 லட்சம் பணியாளர்களுக்கு விரிவான பயிற்சிகள் வழங்கப்பட்டு வருவதாக தலைமை தேர்தல் அதிகாரி அர்ச்சனா பட்நாயக் தெரிவித்துள்ளார். முதற்கட்ட மாநில அளவிலான பயிற்சிகள் முடிவடைந்துள்ள நிலையில், தற்போது தொழில்நுட்பப் பயன்பாடு குறித்த கள அளவிலான பயிற்சிகள் தீவிரமாக நடைபெற்று வருகின்றன. தேர்தலை சுதந்திரமாகவும், நியாயமாகவும் நடத்தும் நோக்கில் "தேர்தல் திருவிழா" என்ற முழக்கத்துடன் இப்பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

# மம்தா பானர்ஜி பவானிபூர் தொகுதியில் போட்டி




மேற்கு வங்கத்தில் நந்திகிராம் தொகுதியில் போட்டியிட மம்தா பானர்ஜி தயங்குவதாக மத்திய அமைச்சர் சுகந்த மஜூம்தார் விமர்சித்துள்ளார். கடந்த முறை அங்கு தோல்வியுற்றதால், இந்த தேர்தலில் பவானிபூர் தொகுதியை அவர் தேர்ந்தெடுத்துள்ளதாகவும், அங்கு அவரை எதிர்த்து பாஜகவின் சுவேந்து அதிகாரி போட்டியிடுவதால் தேர்தல் களம் சூடுபிடித்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். திரிணாமுல் காங்கிரஸ் கட்சியை மக்கள் இந்த முறை வீழ்த்துவார்கள் என்றும் அவர் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

## மாற்றுத்திறனாளிகள் வீட்டிலிருந்தே தபால் வாக்கு செலுத்த தேர்தல் ஆணையம் வழிவகை




தமிழக சட்டமன்றத் தேர்தலில் 85 வயதுக்கு மேற்பட்டோர் மற்றும் மாற்றுத்திறனாளிகள் வீட்டிலிருந்தே தபால் வாக்கு செலுத்த தேர்தல் ஆணையம் வழிவகை செய்துள்ளது. இதற்காக தகுதியுள்ள வாக்காளர்கள் 5 நாட்களுக்குள் 'படிவம் 12D'-ஐ பூர்த்தி செய்து அந்தந்த தொகுதி தேர்தல் அலுவலரிடம் சமர்ப்பிக்க வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. விண்ணப்பம் ஏற்கப்பட்டால், அதிகாரிகள் நேரடியாக இல்லங்களுக்கே சென்று வாக்குகளை பதிவு செய்ய உதவுவார்கள் என கூறப்படுகிறது.



அமெரிக்காவில் சட்டவிரோதமாக வசிக்கும் இந்தியர்கள், சீனா மற்றும் கொலம்பியா நாட்டினர் தாமாக முன்வந்து வெளியேற அந்நாட்டு அரசு வலியுறுத்தியுள்ளது. அப்படிச் செல்பவர்களுக்கு இலவச விமான டிக்கெட் மற்றும் 2600 டாலர் (சுமார் ரூ.2.4 லட்சம்) ஊக்கத்தொகை வழங்கப்படும் என அமெரிக்க உள்நாட்டு பாதுகாப்புத்துறை அறிவித்துள்ளது. இதற்காக தாஜ்மஹால் படத்துடன் கூடிய சிறப்பு விளம்பரங்களையும் வெளியிட்டுள்ளது.

## தேர்தல் விழிப்புணர்வு பிரச்சார பேரணியை கொடியசைத்து துவக்கி வைத்தல்




**திருவண்ணாமலை மார்ச் 19:**
மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாக முகப்பில் தமிழ்நாடு சட்டமன்ற பொது தேர்தல் 2026 நடைபெறவுள்ளதை முன்னிட்டு மகளிர் திட்டம் சார்பில் வாக்காளர்கள் 100 சதவீதம் வாக்களிப்பதில் அவசியம் குறித்து வலியுறுத்தும் வகையில் இருசக்கர வாகன விழிப்புணர்வு பிரச்சார பேரணியை திருவண்ணாமலை மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் உயர்திரு க. தர்ப்பகராஜ் இ.ஆ.ப.அவர்கள் இருசக்கர வாகன விழிப்புணர்வு பிரச்சார பேரணியை கொடியசைத்து தொடங்கி வைத்தார். தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை

## வட்டாட்சியர் அலுவலகத்தில் ஆய்வு கூட்டம்



திருவண்ணாமலை மாவட்டம் மார்ச் -18 போளூர் வட்டாட்சியர் அலுவலகத்தில் தமிழ்நாடு சட்டமன்ற பொதுத் தேர்தல் 2026 நடைபெறவுள்ளதை முன்னிட்டு திருவண்ணாமலை மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் உயர்திரு. க. தர்ப்பகராஜ் இ. ஆ. ப. அவர்கள் தலைமையில், சட்டமன்றத் தேர்தல் நடத்தும் அலுவலர், மண்டல அலுவலர்கள் இதர தொடர்பு அலுவலர்களுடன் மேற்கொள்ள வேண்டிய பணிகள் குறித்து ஆய்வு கூட்டம் நடைபெற்றது. தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை

## திறப்பு இஃப்தார் நிகழ்ச்சி



சென்னை குரோம்பேட்டை ST.MARK'S மெட்ரிகுலேஷன் ஹையர் செகண்டரி பள்ளியில் நேற்று ரமலான் நோன்பு திறப்பு இஃப்தார் நிகழ்ச்சி நடைபெற்றது.இதில் பள்ளியின் குழந்தைகள் பெற்றோர் பொதுமக்கள் கலந்து கொண்டார்கள்.இஃப்தார் நிகழ்ச்சி மிகவும் சிறப்பாக முதல்முறை நடைபெற்றது.அனைவரின் பாராட்டுக்கள் பெற்றது.

## தொடக்கப் பள்ளியில் உலக நீர் தினவிழா..!



**வந்தவாசி, மார்ச் 19:**
திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி அடுத்த சி.ம.புதூர் ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியில் உலக நீர் தினவிழா பள்ளி தலைமை ஆசிரியர் ஆர்.நம்பெருமாள் மேற்பார்வையில் நடைபெற்றது. இதில் மாணவர்கள் நீரின் முக்கியத்துவம் மற்றும் மழைநீர் சேகரிப்பு விழிப்புணர்வு தகவல்களை பகிர்ந்தனர். சிறப்பிடம் பெற்ற மாணவர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டது. பள்ளி ஆசிரியை பாரதி உள்ளிட்ட அனைத்து மாணவர்களும் பங்கேற்றனர். **பா. சீனிவாசன் வந்தவாசி.**

# அன்னதானத் திட்டம்



மதுரையில் உள்ள உலகப் புகழ்பெற்ற மதுரை மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோயில் பக்தர்களுக்காக நடைமுறையில் உள்ள அன்னதானத் திட்டத்தில் முக்கிய மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளதாக கோயில் நிர்வாகம் அறிவித்துள்ளது. தினமும் உள்ளூர், வெளிமாநிலம் மற்றும் வெளிநாடுகளிலிருந்து ஆயிரக்கணக்கான பக்தர்கள் இந்த திருக்கோயிலுக்கு வருகை தந்து அம்மன் மற்றும் சுந்தரேஸ்வரரை தரிசனம் செய்து வருகின்றனர். பக்தர்களின் வசதியை கருத்தில் கொண்டு தமிழ்நாடு இந்து சமய அறநிலையத்துறை சார்பில் நீண்ட காலமாக அன்னதானத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

# வரும் 21 முதல் 25ம் தேதி வரை இடி மின்னலுடன் மழை



தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் வரும் 21 முதல் 25ம் தேதி வரை இடி மின்னலுடன் கூடிய, லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும் என்று வானிலை மையம் தெரிவித்துள்ளது.

## பிரதமர் நரேந்திர மோடி 'அம்ரித் பாரத்' ரயில் சேவையை தொடங்கி வைத்தார்




ரயில்வே துறை மலிவான கட்டணத்தில் நீண்ட தூர சேவையை வழங்கும் நோக்கில், 'அம்ரித் பாரத்' ரயில் சேவையை தொடங்கி நடந்து வருகிறது. அதில் சேலம் வழியே இயக்கப்படும் போத்தனூர் - தன்பாத் அம்ரித் பாரத் எக்ஸ்பிரஸ் ரயிலை பிரதமர் நரேந்திர மோடி மார்ச் 18 அன்று தமிழ்நாட்டின் திருச்சிராப்பள்ளியில் இருந்து காணொலி வாயிலாக பல புதிய ரயில்களைக் கொடியசைத்துத் தொடங்கி வைத்தார்.



தமிழ்நாட்டில் சட்டப்பேரவை தேர்தல் நடைபெறவுள்ள நிலையில் பறக்கும் படையினர் சோதனையில் ஈடுபட்டு வருகின்றனர். இந்நிலையில், தமிழ்நாட்டி தற்போது வரை ரூ.42.65 கோடி பணம் உள்பட பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. ரூ.2.37 கோடி ரொக்கம், ரூ.18 லட்சம் மதுபானம், ரூ.2.88 கோடி போதைப் பொருட்கள், ரூ.16.42 கோடி உலோகங்கள், ரூ.20.80 கோடி மதிப்பில் பிற இலவசப் பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டதாக தேர்தல் அதிகாரி தெரிவித்துள்ளார்.

## மாற்றுக் கட்சியிலிருந்து விலகி 50 -க்கும் மேற்பட்ட இளைஞர்கள் அதிமுகவில் இணைந்தனர்



திருவண்ணாமலை மாவட்டம் மார்ச் 18 கலசபாக்கம் சட்டமன்ற தொகுதி பூண்டி ஊராட்சி பிராயம்பட்டு கிராமத்திலிருந்து வழக்கறிஞர் பிரதாப் முன்னிலையில் புதியதாக இளைஞர்கள் 50 -க்கும் மேற்பட்டவர்கள் மாற்றுக் கட்சியிலிருந்து விலகி திருவண்ணாமலை தெற்கு போளூர் சட்டமன்ற உறுப்பினர் உயர்திரு. அக்ரி.எஸ். எஸ். கிருஷ்ணமூர்த்தி அவர்கள் தலைமையில் அதிமுகவில் 50-க்கும் மேற்பட்ட மாற்று கட்சியில் இருந்து விலகி அதிமுகவில் இணைந்தனர். தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை

# சண்முகத்திற்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் தனது 'X' தளத்தில் கண்டனம்




நயன்தாரா பற்றி சர்ச்சைக்குரிய வகையில் பேசிய அதிமுக எம்.பி.சி.வி. சண்முகத்திற்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் தனது 'X' தளத்தில் கண்டனம் தெரிவித்துள்ளார். திமுக அரசு ஆக்கப்பூர்வமான திட்டங்களை செயல்படுத்தி வரும் நிலையில், எதிர்க்கட்சியினர் தரம் தாழ்ந்த விமர்சனங்களை முன்வைப்பதாக அவர் சாடியுள்ளார். இத்தகைய போக்கை மக்கள் கவனித்து கொண்டிருப்பதாகவும் அவர் தனது பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

# ரூ.40 லட்சம் வரை மட்டுமே செலவு செய்ய அனுமதி



தமிழக சட்டமன்றத் தேர்தலில் வேட்பாளர் ஒருவர் அதிகபட்சமாக ரூ.40 லட்சம் வரை மட்டுமே செலவு செய்ய அனுமதி உண்டு என தலைமை தேர்தல் அதிகாரி அர்ச்சனா பட்நாயக் தெரிவித்துள்ளார். இந்த செலவினங்களை கண்காணிக்க மாவட்ட அளவில் சிறப்பு குழுக்கள் அமைக்கப்பட்டுள்ள நிலையில், அன்றாட செலவுகளை தேர்தல் ஆணைய பதிவேட்டில் முறையாக பதிவு செய்ய அறிவுறுத்தப்பட்டுள்ளது.

## எரிவாயு சுத்திகரிப்பு ஆலை மீது இஸ்ரேல் வான்வழித் தாக்குதல்



ஈரானின் ஃபார்ஸ் மாகாணத்தில் உள்ள எரிவாயு சுத்திகரிப்பு ஆலை மீது இஸ்ரேல் வான்வழித் தாக்குதல் நடத்தியுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. ஈரானின் எண்ணெய் மற்றும் பெட்ரோலிய ஆலைகளை குறிவைத்து இந்த தாக்குதலை இஸ்ரேல் தொடங்கியுள்ளது. இதனால், எரிவாயு சுத்திகரிப்பு ஆலை பற்றி எரிந்து வருகிறது. பல கி.மீட்டருக்கு கரும்புகை சூழ்ந்ததால் பொதுமக்கள் அச்சத்தில் உள்ளனர். முதன்முறையாக ஈரானின் வருமான ஆதாரமான எரிசக்தி ஆலைகளை தகர்க்கத் தொடங்கியது இஸ்ரேல்..

## போடி தொகுதியில் போட்டியிட விருப்பமனு தாக்கல்



முன்னாள் முதல்வர் ஓ.பன்னீர்செல்வம் சமீபத்தில் திமுகவில் இணைந்த நிலையில், வரும் சட்டமன்றத் தேர்தலில் போடி தொகுதியில் போட்டியிட விருப்பமனு தாக்கல் செய்துள்ளார். இது தொடர்பான வேட்பாளர் நேர்காணலுக்காக இன்று (மார்ச் 18) அண்ணா அறிவாலயம் வந்த அவரை, திமுக தலைவர் மு.க.ஸ்டாலின் நேரில் சந்தித்து ஆலோசனை நடத்தினார். அதிமுகவிலிருந்து நீக்கப்பட்ட ஓபிஎஸ், தற்போது உதயசூரியன் சின்னத்தில் போட்டியிட இருப்பது குறிப்பிடத்தக்கது.



தமிழ்நாட்டில் ஒரே கட்டமாக ஏப்ரல் 23 ஆம் தேதி சட்டப்பேரவைத் தேர்தல் நடைபெறவிருக்கிறது. தேர்தல்களின் போது வாக்காளர்கள், எங்கே வாக்களிப்பது என்பது குறித்த விவரங்களை, வாக்காளர்களின் படங்களுடன் தேர்தல் ஆணையம் விநியோகித்து வந்தது.




## மார்ச் 23ஆம் தேதி தேமுதிக மாவட்ட செயலாளர்கள் கூட்டம்



**சென்னை, மார்ச்19:**
தேமுதிக மாவட்ட செயலாளர்கள் கூட்டம் மார்ச் 23ஆம் தேதி நடைபெறவுள்ளது.

இது தொடர்பாக தேமுதிக வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

'தேசிய முற்போக்கு திராவிட கழகத்தின், மாவட்ட கழக செயலாளர்கள் ஆலோசனை கூட்டம், பொதுச்செயலாளர் பிரேமலதா விஜயகாந்த் தலைமையில் வரும் (23.03.2026) திங்கள் கிழமை காலை 10.00 மணியளவில் சென்னை கோயம்பேட்டில் உள்ள தலைமை அலுவலகத்தில் (கேப்டன் ஆலயம்) நடைபெறவுள்ளது.இதில் அனைத்து மாவட்ட செயலாளர்களும் தவறாமல் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்' எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழகத்தில் ஏப்ரல் 23ஆம் தேதி சட்டப்பேரவைத் தேர்தலுக்கான வாக்குப் பதிவு நடைபெறவுள்ளது. தேர்தலையொட்டி திமுக தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியில் தேமுதிக இணைந்துள்ளது.

தேர்தல் நெருங்கிவருவதால், திமுக - தேமுதிக இடையே தொகுதிப் பங்கீடு குறித்து இறுதிக்கட்டப் பேச்சுவார்த்தை நடைபெற்று வருகிறது. ஏற்கெனவே ஒரு மாநிலங்களவை உறுப்பினர் பதவி வழங்கப்பட்டுள்ள நிலையில், எத்தனை பேரவைத் தொகுதிகள் கேட்டுப் பெறுவது என்பது குறித்து மாவட்ட செயலாளர்கள் கூட்டத்தில் ஆலோசிக்கப்படவுள்ளதாகத் தெரிகிறது.

# சுற்றுலா: கேரளா டைரி: மார்ச் மாதத்தின் இதமான பயணத்திற்கு 5 சிறந்த மலைப்பகுதிகள்!



குடும்பத்துடன் அல்லது நண்பர்களுடன் குறைந்த செலவில் அழகான இயற்கையை ரசிக்க விரும்பினால், கேரளாவின் இந்த மலைப் பகுதிகளை கண்டிப்பாக உங்கள் பட்டியலில் குறித்து வைத்துக் கொள்ளுங்கள். இயற்கையின் சொர்க்க பூமியான கேரளாவில் பார்க்க வேண்டிய டாப் 5 அழகிய மலைப்பகுதிகளை இங்கே பார்க்கலாம். இவற்றை பார்க்க இந்த மார்ச் மாதம் மிக ஏற்றதாக இருக்கும்.

ஏன் மார்ச் மாதம் செல்லவேண்டும்?

மார்ச் மாதம் கேரளாவின் மலைப்பகுதிகளில் அதிக வெப்பம் இருக்காது. காலை மற்றும் மாலை நேரங்களில் குளிர்ந்த காலநிலை இருக்கும். அதனால் நடைபயணம், புகைப்படம், இயற்கை சுற்றுலா போன்றவற்றை நிதானமாக அனுபவிக்க முடியும். மேலும் இந்த காலத்தில் சுற்றுலா கூட்டமும் குறைவாக இருக்கும் என்பதால் அமைதியாக பயணிக்கலாம்.

1. பொன்முடி



திருவனந்தபுரம் அருகே அமைந்துள்ள பொன்முடி, மலை சிறியதானாலும் மிகவும் அழகான மலைப்பகுதியாகும். இங்கு உள்ள சுருளும் வட்டமடிக்கும் மலைப்பாதைகள், பசுமையான காடுகள் மற்றும் மேகங்கள் சூழ்ந்த மலைகள் சுற்றுலாப் பயணிகளை கவர்கின்றன. மார்ச் மாதத்தில் இங்கு காலநிலை மிகவும் இனிமையாக இருக்கும்.

2. வாகமன்

கூட்ட நெரிசல் இல்லாமல் அமைதியான மலைப்பகுதியை தேடுபவர்களுக்கு வாகமன் சரியான இடம். பசுமையான புல்வெளிகள், மெல்லிய மலைச்சரிவுகள் மற்றும் குளிர்ந்த காற்று இங்கு ஒரு தனித்துவமான அனுபவத்தை தரும். காடு, மலைப்பகுதிகள் போன்ற இடங்கள் மிகவும் அழகான காட்சிகளை வழங்கும். புகைப்பட ஆர்வலர்களுக்கும் இது ஒரு சிறந்த இடமாகும்.

3. தேக்கடி

தேக்கடி கேரளாவின் முக்கியமான வனவிலங்கு சுற்றுலா தலமாகும். இங்கு அமைந்துள்ள பெரியார் வனவிலங்கு பூங்கா உலகம் முழுவதும் இருந்து வரும் சுற்றுலாப் பயணிகளை கவர்கிறது. இங்கு படகு சவாரி செய்யும் போது ஏரிக்கரையில் காட்டு யானைகள், மான், பல்வேறு பறவைகள் போன்றவற்றைக் காணும் வாய்ப்பு கிடைக்கும். இயற்கை மற்றும் விலங்குகளை விரும்புபவர்கள் கண்டிப்பாக தேக்கடியை பட்டியலில் சேர்க்கவேண்டும்.

4. வயநாடு

இயற்கை அழகில் மிதக்கும் மற்றொரு மலைப்பகுதி வயநாடு. அடர்ந்த காடுகள், நீர்வீழ்ச்சிகள் மற்றும் பழமையான குகைகள் இங்கு உள்ள முக்கிய அம்சங்கள். வயநாட்டில் உள்ள எடக்கல் குகை, பாணாசுர சாகர் அணை, நீர்வீழ்ச்சிகள் போன்ற இடங்கள் மிகவும் பிரபலமான சுற்றுலா தலங்கள். இயற்கை மற்றும் சாகச சுற்றுலாவை விரும்புவோருக்கு வயநாடு ஒரு சிறந்த இடமாகும்.

5. மூணார்

கேரளாவில் மிகவும் பிரபலமான மலைப்பகுதி என்றால் அது மூணார்தான். இடுக்கி மாவட்டத்தில் அமைந்துள்ள இந்த சுற்றுலா தலம், பசுமையான தேயிலை தோட்டங்கள் மற்றும் குளிர்ந்த காலநிலைக்காக உலகம் முழுவதும் இருந்து சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கிறது. மார்ச் மாதத்தில் மூணாரின் காலநிலை மிகவும் இனிமையாக இருக்கும். இங்குள்ள தேசிய பூங்கா, அணை போன்ற இடங்கள் சுற்றுலாப் பயணிகள் தவறாமல் பார்ப்பவை. மேலும் அரிய வகை நீலக்குறிஞ்சி மலர்கள் மலரும் இடமாகவும் மூணார் பிரபலமானது.

## வேலைவாய்ப்பு கார்னர்

### டிஆர்டிஓவில் வேலை வேண்டுமா..? உடனே விண்ணப்பிக்கவும்!

இந்திய ராணுவத்தின்கீழ் செயல்படும் ராணுவ ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு மையத்தின் (டிஆர்டிஓ) ஒரு முதன்மை ஆய்வகமான, பெங்களூருவில் உள்ள வானூர்தியியல் மேம்பாட்டு நிறுவனம் (ஏடிஇ) காலியாகவுள்ள பணியிடங்களுக்கான வேலைவாய்ப்பு அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது. இதற்கு தகுதியான இந்திய இளைஞர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

அறிவிப்பு எண்.: ADE / HRD / 01 /2026

பணி: Junior Research Fellow (JRF)

காலியிடங்கள் : 6 சம்பளம்: மாதம் ரூ.37,000

தகுதி: பொறியியல் துறையில் Aeronautical, Mechanical,CSE,ECE ஆகிய ஏதாவதொரு பிரிவில் முதல் வகுப்பில் பிஇ, பி.டெக் முடித்து கேட் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். வயது வரம்பு : 28-க்குள் இருக்க வேண்டும். எஸ்சி, எஸ்டி, ஓபிசி பிரிவினர்களுக்கு அரசு விதிமுறைப்படி வயது வரம்பு சலுகை தரப்படும்.

பணி: Research Associate (RA)

காலியிடங்கள் : 2 சம்பளம்: மாதம் ரூ.67,000

தகுதி: பொறியியல் துறையில் Aeronautical, Mechanical, Electronics, Material Engineering ஆகிய ஏதாவதொரு பிரிவில் முதல் வகுப்பில் முதல் வகுப்பில் எம்.இ, எம். டெக் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.

வயது வரம்பு: 35-க்குள் இருக்க வேண்டும். எஸ்சி, எஸ்டி, ஓபிசி பிரிவினர்களுக்கு அரசு விதிமுறைப்படி வயது வரம்பு சலுகை தரப்படும்.

தேர்வுசெய்யப்படும் முறை: தகுதியானவர்கள் நேர்முகத் தேர்வு மூலம் தேர்ந்தெடுக்கப்படுவர். நேர்முகத்தேர்விற்கு வரும்போது அசல் சான்றிதழ்களை கொண்டு வரவும்.

விண்ணப்பிக்கும் முறை: www.drdo.gov.in இணையதளத்தில் கொடுக்கப்பட்டிருக்கும் விண்ணப்பத்தை பதிவிறக்கம் செய்து, அதைப் பூர்த்தி செய்து, அதனுடன் தேவையான அனைத்துச் சான்றிதழ்களின் நகல்களுடன் நேர்முகத் தேர்வில் கலந்து கொள்ளவும். நேர்முகத்தேர்வு நடைபெறும் இடம் மற்றும் தேதி விவரம்:

ஜேஆர்எஃப் பணிக்கு 7.4.2026 மற்றும் 8.4.2026 தேதி நடைபெறும். ஆர்ஏ பணிக்கு 9.4.2026-இல் நடைபெறுகிறது.

இடம்: Aeronautical Development Establishment, DRDO, Bengalore - 560 075.

## பஞ்சாப் நேஷனல் வங்கி வாடிக்கையாளர் கவனத்துக்கு! கணக்கு மூடப்படலாம்?




**சென்னை, மார்ச் 19:**

பஞ்சாப் நேஷனல் வங்கியில் கணக்கு வைத்திருக்கும் வாடிக்கையாளர்களுக்கு, வங்கியிலிருந்து ஒரு அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது, அதாவது, பயன்பாட்டில் இல்லாத வங்கிக் கணக்குகள் கேஒய்சி பூர்த்தி செய்யப்படாவிட்டால் மூடப்படும் என்பதே அது.

பஞ்சாப் நேஷனல் வங்கியில் கணக்கு வைத்திருந்து, அதனைப் பயன்படுத்தாமல் இருந்தால், உடனடியாக வாடிக்கையாளர்கள் நேரடியாக வங்கிக் கிளைக்கு வந்து கேஒய்சி விண்ணப்பத்தை பூர்த்தி செய்து கொடுக்க வேண்டும் என்றும், அவ்வாறு செய்யப்படாத வங்கிக் கணக்குகள் ஏப்ரல் 15ஆம் தேதி மூடப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக, பஞ்சாப் நேஷனல் வங்கி வாடிக்கையாளர்களுக்கு வங்கித் தரப்பிலிருந்து குறுந்தகவல் அனுப்பப்பட்டுள்ளதாகவும், ஒருவேளை, கேஒய்சி பூர்த்தி செய்யப்படாவிட்டால், எந்த அறிவிப்பும் இன்றி 2026, ஏப்ரல் 16ஆம் தேதி வங்கிக் கணக்கு முடக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு இ பேப்பர்.காம்
www.tamilnaduepaper.com
இ பேப்பரை தினமும் இலவசமாக பெற விரும்புபவர்கள்.
"welcome Tamilnadu" என்று கீழ் உள்ள வாட்ஸ்ஆப் எண்ணிற்கு அனுப்பி வையுங்கள். தங்களின் அமைப்பு செய்திகள் தங்கள் பகுதியில் நடைபெறும் நிகழ்ச்சிகளை வெளியிட செய்தி மற்றும் புகைப்படத்தை கீழ்உள்ள வாட்ஸ்ஆப்பிற்கு அனுப்புங்கள்
94452 65389

## பியூஷ் கோயல் இன்று சென்னை வருகை! அதிமுக - பாஜக தொகுதிப் பங்கீடு இறுதியாகிறதா?

**சென்னை, மார்ச் 19:**

தமிழக பாஜக தேர்தல் பொறுப்பாளர் பியூஷ் கோயல் இன்று (மார்ச் 19) சென்னை வருகிறார்.

தமிழகத்தில் சட்டப்பேரவைத் தேர்தல் அறிவிக்கப்பட்டுள்ளதையடுத்து தேர்தல் களம் சூடுபிடித்துள்ளது. தொகுதிப் பங்கீடு குறித்தும் கட்சிகளிடையே மும்முரமாக பேச்சுவார்த்தை நடைபெற்று வருகிறது.

இந்நிலையில் அதிமுக - பாஜக இடையே ஓரிரு நாள்களில் தொகுதிப் பங்கீடு இறுதி செய்யப்பட வாய்ப்புள்ளதாகக் கூறப்படுகிறது.

தமிழக பாஜக தேர்தல் பொறுப்பாளர் அமைச்சர் பியூஷ் கோயல் இன்று (மார்ச் 19) சென்னை வரவுள்ளார். இதனிடையே அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி, தமிழக பாஜக தலைவர் நயினார் நாகேந்திரனைச் சந்தித்துப் பேசவுள்ளார்.

மார்ச் 20 ஆம் தேதி அதிமுக - பாஜக இடையே தொகுதிப் பங்கீடு ஒப்பந்தம் கையெழுத்தாகும் என்றும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

வருகிற மார்ச் 30 ஆம் தேதி வேட்புமனு தாக்கல் தொடங்கவுள்ளதால் இந்த வாரத்தில் கட்சிகளிடையே தொகுதிப் பங்கீடு இறுதியாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

அதிமுக கூட்டணியில் பாஜக குறைந்தது 30 தொகுதிகளையாவது பெறும் என்றும் சென்னையில் வேளச்சேரி, மயிலாப்பூர், தி.நகர் உள்ளிட்ட முக்கிய தொகுதிகளைப் பெற முனைப்பு காட்டுவதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

## சென்னை மாநகரப் பேருந்து: பட்டன் போன் வைத்திருந்தால் மாதப் பயண அட்டை!

**சென்னை, மார்ச் 19:**



சென்னை மாநகரப் பேருந்து மாதாந்திரப் பயண அட்டை வழங்கும் மையங்களில் ஆண்ட்ராய்டு அல்லாத பட்டன் போன் வைத்திருப்பவர்களுக்கு மட்டுமே பயண அட்டை வழங்கப்படுகிறது.

சென்னை மாநகரப் பேருந்துகளில் நாள்தோறும் லட்சக்கணக்கான மக்கள் பயணித்து வருகிறார்கள். நாள்தோறும் பயணிப்பவர்களுக்கு பயனளிக்கும் வகையில் மாதாந்திரச் சலுகை பயண அட்டை வழங்கப்பட்டு வருகின்றன.

குளிர்சாதன வசதி பேருந்து தவிர மற்ற அனைத்து மாநகரப் பேருந்துகளிலும் விருப்பம்போல் பயணிக்க மாதம் ரூ. 1,000-ம், குளிர்சாதன வசதி பேருந்து உள்பட அனைத்து பேருந்துகளிலும் பயணிக்க மாதம் ரூ. 2,000-ம் கட்டணமாக வசூலிக்கப்படுகின்றது.

இந்த மாதாந்திரப் பயண அட்டைகள் மூலம் 70,000-க்கும் மேற்பட்ட பயணிகள் பயனடைந்து வருகிறார்கள்.

இந்த நிலையில், பணமில்லா பரிவாத்தனையை ஊக்குவிக்கும் வகையில், சென்னை ஒருங்கிணைந்த பெருநகரப் போக்குவரத்து ஆணையம் சார்பில் 'சென்னை ஒன்' செயலி அறிமுகம் செய்யப்பட்டது. தற்போது 10 லட்சம் பேர் பதிவிறக்கம் செய்து பயன்படுத்தி வருகிறார்கள்.

சென்னை மாநகரப் பேருந்து, சென்னை மெட்ரோ ரயில், புறநகர் ரயில் உள்ளிட்டவற்றில் பயணம் செய்வதற்கு சென்னை ஒன் செயலி மூலம் டிக்கெட் பெறும் வகையில் வடிவமைக்கப்பட்டிருக்கிறது.

தொடர்ந்து, சென்னை ஒன் செயலி மூலமே மாநகரப் பேருந்துகளின் ரூ. 1,000, ரூ. 2,000 மாதப் பயண அட்டைகளும், புறநகர் ரயில்களின் மாதப் பயண அட்டைகளும் பெற்றுக் கொள்ளும் வசதி அறிமுகம் செய்யப்பட்டது.

இந்த நிலையில், சென்னை மாநகரப் பேருந்து நிலையங்களில் இயங்கும் மாதப் பயண அட்டை வழங்கும் மையங்களில் இந்த மாதம் முதல் சென்னை ஒன் செயலி மூலம் பயண அட்டைகளை புதுப்பித்துக் கொள்ள பயணிகளிடம் அலுவலர்கள் அறிவுறுத்தி வருகிறார்கள்.

மேலும், பட்டன் போன் வைத்திருப்பவர்கள், ஆண்ட்ராய்டு செல்போன் முறையாக உபயோகிக்கத் தெரியாத வயதானவர்களுக்கு மட்டும் மையங்களில் பயண அட்டை வழங்கப்பட்டு வருகின்றது.

## சிபிஐ விசாரணையில் நடந்தது என்ன? செந்தில் பாலாஜி விளக்கம்!

**கரூர், மார்ச் 19:**

கரூரில் தவெக தலைவர் விஜய்யின் பிரசார கூட்டத்தில் நெரிசலில் சிக்கி 41 பேர் உயிரிழந்த சம்பவம் தொடர்பாக திமுக முன்னாள் அமைச்சர் செந்தில் பாலாஜியிடம் தில்லியில் சிபிஐ அதிகாரிகள் செவ்வாய்க்கிழமை 6 மணி நேரம் விசாரணை நடத்தினர். இந்த நிலையில், சென்னை திரும்பிய செந்தில் பாலாஜி விமான நிலையத்தில் செய்தியாளர்களை சந்தித்து பேசியதாவது:

"கரூரில் நடைபெற்ற துயரச் சம்பவம் குறித்து முன்வைக்கப்பட்ட கேள்விகளுக்கு பதிலளித்துள்ளேன். சாட்சிகள் என்ற அடிப்படையில் அன்று நடைபெற்ற குறிப்பிட்ட சில நிகழ்வுகள் குறித்து என்னிடம் கேள்வி எழுப்பினார்கள். என்ன கேள்விகள் என்பதை பொதுவெளியில் கூறுவது சரியாக இருக்காது. உரிய பதிலை விசாரணை ஆணையத்தில் அளித்துள்ளேன்.

களத்தில் நின்று பணியாற்றியதால், சிபிஐ சந்தேகங்களுக்கு பதிலளிப்பது பொறுப்பாக எடுத்துக் கொண்டு முறையான பதில் அளித்துள்ளேன்.

நாடாளுமன்ற தேர்தல் முடிந்தவுடனே சட்டப்பேரவைத் தேர்தல் பணிகளை திமுக முன்னெடுத்து செய்து வருகின்றது. தொடர்ச்சியாக மாநாடு நடத்தி வருகிறோம். ரஜினி குறித்து ஆதவ் அர்ஜுனாவின் கருத்துகளைப் பற்றி நாங்கள் சிந்திக்க வேண்டிய அவசியம் இல்லை.

2026 சட்டப்பேரவைத் தேர்தலில் வெற்றி பெற்று இரண்டாவது முறையாக மு.க. ஸ்டாலின் முதல்வராகும் சூழல் இருக்கிறது. மக்கள் வாக்களிக்க தயாராக இருக்கிறார்கள்" எனத் தெரிவித்தார்.

## ராமதாஸ் தலைமையில் பாமக நிர்வாகக் குழுக் கூட்டம்!

**விழுப்புரம், மார்ச் 19:**

விழுப்புரம் மாவட்டம், தைலாபுரம் தோட்டத்தில் கட்சி நிறுவனர் ராமதாஸ் தலைமையில் நிர்வாகக் குழுக் கூட்டம் புதன்கிழமை நடைபெற்று வருகிறது.

பாமக தற்போது இரு அணிகளாக செயல்பட்டு வரும் நிலையில், அன்புமணி ராமதாஸ் தலைமையிலான அணி, தேசிய ஜனநாயகக் கூட்டணியில் இணைந்துள்ளது.

ராமதாஸ் தலைமையிலான அணி யாருடன் கூட்டணி என்ற எதிர்பார்ப்பு எழுந்த நிலையில், பேரவைத் தேர்தல், கூட்டணி நிலைப்பாடு குறித்து விவாதிக்க நிர்வாகக் குழு உறுப்பினர்களுடன் கலந்தாய்வுக் கூட்டம் விழுப்புரம் மாவட்டம், தைலாபுரம் தோட்டத்தில் புதன்கிழமை நடைபெற்று வருகிறது.

கூட்டத்தில் கட்சியின் செயல் தலைவர் ஸ்ரீ காந்தி, கௌரவத் தலைவர் கோ.க.மணி, சேலம் மேற்குத் தொகுதி எம்எல்ஏ ஆர். அருள் உள்ளிட்ட 20 நிர்வாகக் குழு உறுப்பினர்கள் பங்கேற்றனர்.

இந்த கூட்டத்தில் சட்டப் பேரவைத் தேர்தலில் கட்சியின் நிலைப்பாடு, கூட்டணி குறித்து நிலைப்பாடு, கட்சித் தொடர்பான நீதிமன்ற வழக்கு நிலவரம் போன்றவை குறித்து நிர்வாகக் குழு உறுப்பினர்களிடம் ராமதாஸ் ஆலோசனை மேற்கொண்டு வருகிறார்.

# வாக்காளர் அடையாள அட்டை இல்லையா? - வாக்களிக்க 12 மாற்று ஆவணங்களை பட்டியலிட்டது தேர்தல் ஆணையம்

**சென்னை, மார்ச் 19:**



வாக்காளர் புகைப்பட அடையாள அட்டையை அளிக்க இயலாத வாக்காளர்கள் இந்திய தேர்தல் ஆணையம் பட்டியலிட்டுள்ள மாற்று புகைப்படத்துடன் கூடிய 12 ஆவணங்கள் காண்பித்து வாக்களிக்கலாம் என்று மாநில தலைமைத் தேர்தல் அதிகாரி அறிவுறுத்தியுள்ளார்.

இது குறித்து மாநில தலைமைத் தேர்தல் அதிகாரி வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறப்பட்டிருப்பதாவது: நடைபெறவிருக்கின்ற, 2026-ம் ஆண்டிற்கான சட்டப்பேரவைத் தேர்தலில் வாக்காளர் புகைப்பட அடையாள அட்டை வழங்கப்பட்டுள்ள அனைத்து வாக்காளர்களும், அவர்கள் வாக்களிப்பதற்கு முன்னர், வாக்குச்சாவடியில் தங்கள் அடையாளத்தை மெய்ப்பிப்பதற்காக வாக்காளர் புகைப்பட அடையாள அட்டையை அளிக்க வேண்டும் என இந்திய தேர்தல் ஆணையம் உத்தரவிட்டுள்ளது.

வாக்காளர் புகைப்பட அடையாள அட்டையை அளிக்க இயலாத வாக்காளர்கள், அவர்களின் அடையாளத்தை மெய்ப்பிப்பதற்காக பின்வரும் மாற்று புகைப்பட அடையாள ஆவணங்களில் ஏதேனும் ஒன்றை காண்பிக்க வேண்டும் என இந்திய தேர்தல் ஆணையம் ஆணையிட்டுள்ளது.

அதன்படி, * ஆதார் அட்டை, * மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதியளிப்புத் திட்டத்தின் பணி அடையாள அட்டை, * புகைப்படத்துடன் கூடிய வங்கி, அஞ்சலக கணக்குப் புத்தகங்கள், * தொழிலாளர் நல அமைச்சகத் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட மருத்துவ காப்பீட்டு அட்டை, * ஆயுஷ்மான் பாரத் மருத்துவ காப்பீட்டு அட்டை, * ஓட்டுநர் உரிமம், * வருமான வரி நிரந்தர கணக்கு எண் அட்டை (PAN Card), * தேசிய மக்கள் தொகை பதிவேட்டின் கீழ் இந்திய தலைமைப் பதிவாளரால் வழங்கப்பட்ட திறனட்டை, * இந்திய கடவுச் சீட்டு, புகைப்படத்துடன் கூடிய ஓய்வூதிய ஆவணம், * மத்திய, மாநில அரசுகள், பொதுத்துறை நிறுவனங்கள், வரையறுக்கப்பட்ட பொது நிறுவனங்களின் தொழிலாளர்களுக்கு வழங்கப்பட்ட புகைப்படத்துடன் கூடிய பணி அடையாள அட்டைகள், * நாடாளுமன்ற, சட்டமன்ற, சட்டமேலவை உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ள அடையாள அட்டை மற்றும் *இந்திய அரசின் சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் அமைச்சகத்தால் வழங்கப்பட்ட இயலாமைக்கான தனித்துவமான அடையாள அட்டை ஆகியவற்றை வாக்களிக்க பயன்படுத்தலாம்.

வாக்காளர் பட்டியலில் வாக்காளரின் வரிசை எண்ணை அறிந்து கொள்வதற்காக புகைப்பட வாக்காளர் சீட்டிற்கு பதிலாக வாக்காளர் தகவல் சீட்டினை அச்சிட்டு வழங்க இந்திய தேர்தல் ஆணையம் முடிவு செய்துள்ளது.

வாக்குச் சாவடியின் பெயர், வாக்குப் பதிவு நாள், நேரம் போன்றவை இடம் பெற்றிருக்கும். மாவட்ட தேர்தல் அலுவலரால் வாக்குப் பதிவு நாளுக்கு ஐந்து (5) நாட்களுக்கு முன்னர் அனைத்து வாக்காளர்களுக்கும் வாக்காளர் தகவல் சீட்டு விநியோகிக்கப்படும். வாக்குச் சாவடியில் வாக்காளர் தகவல் சீட்டு அடையாளத்தை மெய்ப்பிப்பதற்கான ஆவணமாக ஏற்றுக்கொள்ளப்படாது.

# க்ரைம் கார்னர்

## 4 வயது சிறுமி பாலியல் பலாத்காரம் செய்து கொலை: வாலிபர் கைது

**நகரி, மார்ச் 19:**

தெலுங்கானா மாநிலம் நார்சங்கி பகுதியில் உள்ள தொழிலாளர் குடியிருப்பில் மேற்கு வங்காளத்தை சேர்ந்த தம்பதியினர் வசித்து வருகின்றனர். சம்பவத்தன்று, இவர்களது 4 வயது மகளை வீட்டில் விட்டுவிட்டு இருவரும் வேலைக்குச் சென்றனர். மதியம் வீடு திரும்பியபோது சிறுமி காணாமல் போனதை அறிந்த பெற்றோர், போலீஸ் நிலையத்தில் புகார் அளித்தனர்.

அதன்பேரில், போலீசார் தனிப்படை அமைத்து தீவிர தேடுதல் வேட்டையில் ஈடுபட்டனர். அப்போது அந்த பகுதியில் உள்ள கண்காணிப்பு கேமராக்களை ஆய்வு செய்தபோது, ஒரு வாலிபர், சிறுமியை அழைத்து செல்வது பதிவாகியிருந்தது. இதையடுத்து பி.ஆர்.எஸ். தொழிலாளர் குடியிருப்பில் வசிக்கும் பிஸ்வாஸ் (வயது 25) என்பவர் மீது போலீசாருக்கு சந்தேகம் எழுந்தது. தொடர்ந்து அவரை கைது செய்து போலீசார் விசாரணை நடத்தினர். அதில், அவர் குற்றத்தை ஒப்புக்கொண்டார். சாக்லெட் தருவதாக கூறி சிறுமியை ஆள்நடமாட்டம் இல்லாத இடத்திற்கு அழைத்து சென்று பாலியல் பலாத்காரம் செய்ததுடன், சம்பவம் வெளியே தெரியாமல் இருக்க பாறாங்கல்லால் தாக்கி கொலை செய்ததாக தெரிவித்தார். அதைத்தொடர்ந்து அவரை போலீசார் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி சிறையில் அடைத்தனர்.

## மாணவிக்கு பாலியல் தொல்லை கொடுத்த ஆசிரியருக்கு 3 ஆண்டுகள் சிறை

**மலப்புரம், மார்ச் 19:**

கேரளம் மாநிலம் மலப்புரம் மாவட்டம் மங்கடா பகுதியை சேர்ந்தவர் பையஸ் (வயது 30). இவர் வயநாடு மாவட்டம் மானந்தவாடி அருகே உள்ள தனியார் பள்ளியில் ஆசிரியராக பணியாற்றி வந்தார். அவர், கடந்த 2023-ம் ஆண்டு ஜூலை மாதம் அந்த பள்ளி மாணவியான 12 வயது சிறுமிக்கு பாலியல் தொல்லை கொடுத்ததாக தெரிகிறது. இதுகுறித்து சிறுமி தனது பெற்றோரிடம் தெரிவித்தார். சிறுமியின் பெற்றோர் மானந்தவாடி போலீசில் புகார் அளித்தனர். அதன் பேரில் போலீசார் விசாரணை நடத்தினர். பள்ளி மாணவிக்கு ஆசிரியர் பாலியல் தொல்லை கொடுத்தது தெரியவந்தது. இது தொடர்பாக போக்சோ சட்டத்தில் வழக்குப்பதிவுசெய்து, பையசை போலீசார் கைதுசெய்தனர். இந்த வழக்கு விசாரணை கல்பெட்டா போக்சோ விரைவு கோர்ட்டில் நடைபெற்று வந்தது. இந்த வழக்கில் பள்ளி ஆசிரியருக்கு 3 ஆண்டுகள் சிறை தண்டனை, ரூ.50 ஆயிரம் அபராதம் விதித்து நீதிபதி கிருஷ்ணகுமார் தீர்ப்பளித்தார். இந்த வழக்கில் அரசு வக்கீல் பபிதா ஆஜராகி வாதாடினார்.

## ராஜஸ்தானில் அரிய வகை பூனையை கொன்று எரித்த 3 பேர் கைது: வீடியோவால் சிக்கினர்

**ஜெய்ப்பூர், மார்ச் 19:**

ராஜஸ்தான் மாநிலத்தின் ஜெய்சல்மேர் மாவட்டத்தில், இந்தியா-பாகிஸ்தான் சர்வதேச எல்லைக்கு அருகில் அமைந்துள்ள ஷாகர் பகுதியை சேர்ந்த இப்ராகிம் கான் (32), உமா (31) மற்றும் சலிதாத் (50)அவர்கள் தங்களின்வாழ்வாதாரத்திற்காக ஆடு மற்றும் மாடுகளை வளர்த்து வருகின்றனர். இதனிடையே அவர்களின் கால்நடைகளை தொடர்ந்து ஒரு மர்ம மிருகம் தாக்கி வந்ததாக கூறப்படுகிறது. இந்த சூழ்நிலையில் அந்த மர்ம மிருகத்தினால் தாக்குதல் நடத்தப்பட்டு பலியாகும் ஆடு, மாடுகள் மற்றும் தங்களின் எதிர்கால வாழ்க்கை பற்றி அவர்கள் கவலை பட தொடங்கினர். அந்த மர்ம மிருகத்தைக் கண்டுபிடித்து தீர்த்துக்கட்ட முடிவுசெய்தனர். இதனைத் தொடர்ந்து, அவர்கள் அந்த மிருகத்தின் கால் தடங்களை பின் தொடர்ந்த சென்றனர். அப்போது அந்த மிருகத்தை கண்ட அவர்கள் அதை விரட்டி பிடிக்க முயன்ற போது அது எதிர்பாராதவிதமாக இறந்துவிட்டதாக அவர்கள் தெரிவித்தனர். இந்த நிலையில் அந்த மிருகத்தை எரித்த வீடியோ சமூக வலைதளங்களில் வைரலாக பரவியது. இதனை தொடர்ந்து வன அதிகாரிகள் தலைமையிலான இரண்டு குழுக்கள் அமைத்து தீவிர தேடுதல் வேட்டை நடத்தினர். பின்னர் இந்த சம்பவம் தொடர்பாக அந்த 3 பேரையும் கைது செய்தனர்.

# விளையாட்டு செய்திகள்

## மகளிர் கிரிக்கெட் தரவரிசை: முதலிடத்தில் நீடிக்கும் மந்தனா

**துபாய், மார்ச் 19:**

மகளிர் கிரிக்கெட் தரவரிசையில் இந்திய கிரிக்கெட் அணி வீராங்கனை ஸ்மிருதி மந்தனா தொடர்ந்து முதலிடத்தில் நீடிக்கிறார். மகளிர் கிரிக்கெட் அணி வீராங்கனைகள் தரவரிசையை சர்வதேச கிரிக்கெட் கவுன்சில் (ஐசிசி) நேற்று வெளியிட்டது.

இதில் இந்திய வீராங்கனை ஸ்மிருதி மந்தனா, 790 புள்ளிகளுடன் முதலிடத்தில் தொடர்ந்து நீடிக்கிறார். 2-வது இடத்தில் தென் ஆப்பிரிக்க வீராங்கனை லாரா வோல்வார்ட் 782 புள்ளிகளுடன் உள்ளார். 3-வது இடத்தில் ஆஸ்திரேலிய வீராங்கனை பெத் மூனியும் (749 புள்ளிகள்), 4-வது இடத்தில் ஆஸ்திரேலியாவின் ஆஷ்லி கார்டனரும்(724 புள்ளிகள்), 5-வது இடத்தில் இங்கிலாந்தின் நாட் ஷிவர்-பிரன்ட்டும் (714 புள்ளிகள்) உள்ளனர்.

674 புள்ளிகளுடன் 6-வது இடத்தில் ஆஸ்திரேலிய வீராங்கனை போப் லிட்ச்பீல்ட் இருக்கிறார். இந்திய வீராங்கனை ஹர்மன்பிரீத் கவுர், ஓர் இடம் முன்னேறி 7-வது இடத்தைப் பிடித்துள்ளார். அவர் 652 புள்ளிகளைப் பெற்றுள்ளார். இந்திய வீராங்கனை ஜெமிமா ரோட்ரிக் 12-வது இடத்தில் இருக்கிறார்.

## இந்திய வீரர் திலக் வர்மாவுக்கு தெலங்கானா முதல்வர் பாராட்டு

**ஹைதராபாத், மார்ச் 19:**

கடந்த 8-ம் தேதி நடைபெற்ற ஐசிசி டி20 கிரிக்கெட் போட்டியில் இந்திய அணி கோப்பையை வென்று சாதனை படைத்தது. இந்தப் போட்டியில், திலக் வர்மா மிகச்சிறப்பாக விளையாடி ரன்களைக் குவித்தார். அண்மையில் அவர் தெலங்கானா தலைநகர் ஹைதராபாத்துக்குத் திரும்பினார். இந்நிலையில் கோப்பையை வென்ற அணியில் இடம்பிடித்த இந்திய வீரர் திலக் வர்மாவை, தெலங்கானா முதல்வர் ரேவந்த் ரெட்டி நேற்று நேரில் அழைத்துப் பாராட்டினார். தெலங்கானா தலைமைச் செயலகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் அமைச்சர்கள், அதிகாரிகள் உள்ளிட்டோர் கலந்துகொண்டு திலக் வர்மாவுக்குப் பாராட்டுத் தெரிவித்தனர். அப்போது தெலங்கானா மாநில சிறுபான்மையினர் நலத்துறை அமைச்சரும், இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் கேப்டனுமான முகமது அசாருதீன் கூறும்போது, “திலக் வர்மாவின் சாதனைகள், தெலங்கானா முழுவதிலும் உள்ள இளம் விளையாட்டு வீரர்களை, விளையாட்டுத் துறையில் தங்கள் வாழ்க்கையைத் தொடரவும், சர்வதேச அளவில் இந்தியாவைப் பிரதிநிதித்துவப்படுத்தவும் ஊக்குவிக்கும்” என்றார்.

## கால்பந்து போட்டியில் தமிழக காவல் துறை வெற்றி

**சென்னை, மார்ச் 19:**

சென்னை கால்பந்து சங்கம் சார்பில் சீனியர் டிவிஷன் லீக் 2025-26 போட்டி சென்னை நகரில் உள்ள பாவேந்தர் பாரதிதாசன் கால்பந்து மைதானத்தில் நடைபெற்று வருகிறது. இதில் நேற்று நடைபெற்ற ஆட்டத்தில் தமிழக காவல்துறை, டிபிஒய்சி கீழ்ப்பாக்கம் அணிகள் மோதின. தமிழக காவல்துறை அணியின் வீரர் விஜயன் ஒரு கோலடித்து அணிக்கு வெற்றி தேடித்தந்தார்.

# உடல் எடையை குறைப்பதற்கான 3 மருந்துகளுக்கு ஒப்புதல் - மாநிலங்களவையில் மத்திய மந்திரி தகவல்

**புதுடெல்லி, மார்ச் 19:**

எடை குறைப்பு மருந்துகள் தொடர்பாக நாடாளுமன்ற மாநிலங்களவையில் எழுப்பப்பட்ட கேள்விக்கு மத்திய சுகாதாரத்துறை மந்திரி அனுப்பிரியா படேல் பதிலளித்தார். அப்போது அவர் கூறியதாவது:-


நாட்டின் உச்சபட்ச மருந்து ஒழுங்குமுறை அமைப்பான மத்திய மருந்து தர கட்டுப்பாட்டு அமைப்பு எடை குறைப்பு சிகிச்சைக்கான 3 மருந்துகளுக்கு ஒப்புதல் அளித்துள்ளது. அதன்படி ஓர்லிஸ்டாட், டிர்செபடைடு மற்றும் செமாக்ளூடைடு மருந்துகள் சில்லறை மருந்து கடைகளில் விற்கப்படும். அனைத்து மருந்துகளும், மருத்துவரின் பரிந்துரையின்படியும், மருத்துவ மேற்பார்வையின் கீழும் பயன்படுத்தப்பட வேண்டும்.

எடையை குறைக்கவோ அல்லது வளர்சிதை மாற்ற விகிதத்தை மாற்றுவதாகவோ கூறும் மருந்துகள், மருத்துவ பரிசோதனை விதிகளுக்கு உட்பட்டதாக இருக்க வேண்டும் என மருந்து நிறுவனங்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. இந்த விதிகள் மீறப்பட்டால் மாநில உரிமம் வழங்கும் அதிகாரிகள் மூலம் நடவடிக்கை எடுக்கப்படும்.

உடல்நல பிரச்சினைகளுக்கு வழிவகுக்கக்கூடிய மருந்துகளின் பயன்பாட்டை ஒழுங்குபடுத்தவும், அவற்றை முறையற்ற வகையில் பயன்படுத்துவதைத் தடுக்கவும் அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்துள்ளது. இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

# கோடை வெப்பத்திலிருந்து காப்பாற்ற வரும் ஜெட் ஸ்ட்ரீம்! சென்னைக்கு மழை?

**சென்னை, மார்ச் 19:**



ஜெட் ஸ்ட்ரீம் வளைவு காரணமாக மார்ச் 20 வரை தமிழ்நாட்டின் பல மாவட்டங்களில் மழை பெய்யும் வாய்ப்பு உள்ளதாகவும் இன்று (18ம் தேதி) உள் மாவட்டங்களில் இடியுடன் கூடிய மழை பெய்யலாம் என்றும் தமிழ்நாடு வெதர்மேன் கூறியுள்ளார்.

தமிழகத்தில் இன்றும் நாளையும் உள் மாவட்டங்களில் மழை பெய்யும் என்று அறிவிக்கப்பட்டிருக்கும் நிலையில், தமிழக மக்கள் கோடை வெப்பத்திலிருந்து சில நாள்கள் தப்பிக்கும் வகையில் ஜெட் ஸ்ட்ரீம் மழை மேகங்களைக் கொண்டு வருகிறது.

இது குறித்து வானிலை பற்றி சமூக வலைத்தளத்தில் பகிர்ந்து வரும் தமிழ்நாடு வெதர்மேன் பதிவிட்டிருப்பதாவது,

ஜெட் ஸ்ட்ரீம் என்பது மேல்மண்டலத்தில் மிக வேகமாக வீசும் காற்றோட்டம். இது மிகவும் குறுகியதாகவும், சுருண்டோடும் தன்மையுடன் இருக்கும். அதிக அழுத்த மாறுபாடுகள் காரணமாக, இந்த காற்று மிக அதிக வேகத்தில் நகர்கின்றன. இந்த காற்றோட்டம் பொதுவாக பூமியின் மேற்பரப்பில் இருந்து சுமார் 12 கிமீ உயரத்தில் (200 HPA அளவில்) காணப்படுகிறது.

சில நேரங்களில் ஜெட் ஸ்ட்ரீம் ஓட்டத்தில் ஒரு “வளைவு” (KINK) உருவாகிறது. இது மேல்மட்டத்தில் காற்று பிரிவை (UPPER LEVEL DIVERGENCE) உருவாக்கி, மேகங்கள் உயரமாக எழும்ப உதவுகிறது. இதனால் கீழே மழை உருவாகும் சூழல் ஏற்படுகிறது.

இந்த வகையான ஜெட் ஸ்ட்ரீம் வளைவு காரணமாக தமிழ்நாட்டின் பல மாவட்டங்களில் மார்ச் 20 வரை மழை பெய்ய வாய்ப்புள்ளது.

தமிழகத்தில் மார்ச் 17 மழை நிலவரம்! தமிழ்நாட்டின் மேற்குப் பகுதிகளான ஈரோடு, திருப்பூர், தென்காசி, கோயம்புத்தூர், மதுரை, தேனி, நீலகிரி, சேலம் ஆகிய இடங்களில் ஆங்காங்கே இடியுடன் கூடிய மழை பதிவானது.

தமிழகத்தில் இன்று! இந்த ஜெட் ஸ்ட்ரீம் அமைப்பில் ஏற்பட்டிருக்கும் சிறிய மாற்றத்தால், இன்று தமிழ்நாட்டின் பல உள் மாவட்டங்களில் மழை பெய்ய வாய்ப்பு உள்ளது. இன்று எந்த மாவட்டத்தில் மழை பெய்யும் என்று குறிப்பிட்டுச் சொல்ல முடியாது, ஏனெனில் பல மாவட்டங்களுக்கு இன்று மழை வாய்ப்பு உள்ளது.

கிருஷ்ணகிரி சேலம் திருச்சி மதுரை பகுதிகளுடன், அருகிலுள்ள திருப்பத்தூர், திருவண்ணாமலை, கள்ளக்குறிச்சி, நாமக்கல் மற்றும் வேலூர் மாவட்டங்களிலும் நல்ல மழை பெய்ய வாய்ப்பு உள்ளது.

மேற்குப் பகுதிகளான கோயம்புத்தூர், ஈரோடு மற்றும் நீலகிரி மாவட்டங்களிலும் மழை பெய்யலாம். அதேபோல் தெற்கு மாவட்டங்களான விருதுநகர், தேனி, தென்காசி, மதுரை, திண்டுக்கல், திருநெல்வேலி, கன்னியாகுமரி, தூத்துக்குடி பகுதிகளிலும் மழை வாய்ப்பு உள்ளது.

சில இடங்களில் ஆலங்கட்டி மழையும் (HAILSTORM) ஏற்படலாம், இது ஜெட் ஸ்ட்ரீம் வளைவு நேரிடும்போது ஏற்படும் நிகழ்வாகும். பெங்களூருவிலும் மீண்டும் மழை பெய்யும்.

சென்னை மற்றும் செங்கல்பட்டு, காஞ்சிபுரம், திருவள்ளூர் பகுதிகளில், அதிகாலை நேரத்தில் (மார்ச் 19) ஆங்காங்கே ஒரு சில இடங்களில் திடீர் மழைக்கு வாய்ப்பு உள்ளது. இது பொதுவாக மக்கள் உறங்கிக் கொண்டிருக்கும் நேரத்தில் ஏற்படக்கூடும், ஏனெனில் இது கடற்கரை பகுதிகளுக்கு அருகில் உள்ளது என்பதால். எனவே, சென்னை உள்ளிட்ட மாவட்ட மக்கள் இந்த மழையைக் காணும் வாய்ப்பைத் தவறவிடலாம்.

இந்த மழை காரணமாக வெப்பம் குறைகிறதோ இல்லையோ, மேகமூட்டம் அதிகரித்து, குறிப்பாக உள் மாவட்டங்களில் வெப்பம் குறைந்து சற்று குளிர்ச்சி ஏற்படும் என்று தெரிவித்துள்ளார்.

# 36 மணி நேரத்துக்குள் சிலிண்டர்: ஆந்திர முதல்வர் சந்திரபாபு உத்தரவு

**அமராவதி, மார்ச் 19:**





ஆந்திராவில் 14 ஆயிரம் டன் காஸ் இருப்பில் உள்ளது. இதனால் 15 நாட்களுக்கு எவ்வித பிரச்சினையும் இல்லை. ஆதலால் பதிவு செய்த 36 மணி நேரத்துக்குள் சமையல் காஸ் சிலிண்டர் வீடு போய் சேர வேண்டும். கள்ள சந்தையில் விற்றால் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என ஆந்திர முதல்வர் சந்திரபாபு நாயுடு எச்சரிக்கை விடுத்துள்ளார்.

அமராவதியில் உள்ள தனது அலுவலகத்தில் காஸ் விநியோகம் குறித்து அதிகாரிகள், முக்கிய விநியோக தாரர்களுடன் ஆந்திர முதல்வர் சந்திரபாபு நாயுடு நேற்று ஆலோசனை நடத்தினார். அப்போது அவர் பேசியதாவது: ஆந்திர மாநிலத்தில் தற்போது சமையல் காஸ் விநியோகத்தில் எவ்வித பிரச்சினையும் இல்லை. 14 ஆயிரம் டன் காஸ் இருப்பில் உள்ளது. இது 15 நாட்களுக்கு போதுமானதாகும். விரைவில் போதிய காஸ் ஆந்திராவிற்கு வர உள்ளது.

ஆதலால் காஸ் சிலிண்டர்கள் தட்டுப்பாடு என்கிற பேச்சுக்கே இடம் இல்லை. ஆனால், சில இடங்களில் சமையல் காஸ் சிலிண்டர்கள் கள்ள சந்தையில் விற்பதாக பொதுமக்களிடம் இருந்து குற்றச்சாட்டு வந்துள்ளது. அப்படி யாராவது கள்ள சந்தையில் காஸ் சிலிண்டர்களை பதுக்கி வைத்து விநியோகம் செய்தால் அவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும். பொது மக்கள் பதிவு செய்த 36 மணி நேரத்துக்குள் காஸ் சிலிண்டர் அவர்களின் வீடு தேடி சென்று சேர வேண்டும். மாநிலத்தில் இண்டக்‌ஷன் ஸ்டவ் உபயோகம் அதிகரிக்கும்படி செய்ய வேண்டும். நகர்ப்புறங்களில் காஸ் விநியோகத்தை சீரமைக்க வேண்டும்.

இவ்வாறு சந்திரபாபு பேசினார்.

# வணிகச் செய்திகள்

## ஈரான் மீதான தாக்குதலுக்குப் பின் 95 நாடுகளில் பெட்ரோல் விலை உயர்வு

**புதுடெல்லி, மார்ச் 19:**

அமெரிக்க, இஸ்ரேல் கூட்டுப்படை மற்றும் ஈரான் இடையிலான பேராரால், 95 நாடுகளில் எரிபொருள் விலை உயர்ந்துள்ளது. அமெரிக்காவில் ஒரு கேலன் (3.8 லிட்டர்) பெட்ரோல் விலை ரூ.2.94 டாலரில் இருந்து 3.58 டாலராக உயர்ந்துள்ளது. இது 20 சதவீத உயர்வாகும். அமெரிக்காவில் உள்ள மாநிலங்கள் தங்கள் இஷ்டத்துக்கு பெட்ரோல் விலைகளை உயர்த்தியுள்ளன. பல மாநிலங்களில் ஒரு கேலன் பெட்ரோல் 4 டாலரை தாண்டிவிட்டது. கலிபோர்னியாவில் ஒரு கேலன் 5 டாலரை தாண்டிவிட்டது. இது கடந்த 2 ஆண்டுகளில் மிக அதிகமான விலை உயர்வாகும். சில நாடுகள் மாத இறுதியில்தான் எரிபொருள் விலை மாற்றத்தை அறிவிக்கும்.

அதனால் அடுத்த மாதம் முதல் பல நாடுகளில் பெட்ரோல் விலை அதிகரிக்கும். கம்போடியாவில் பெட்ரோல் விலை அதிகபட்சமாக 68 சதவீதம் உயர்ந்துள்ளது. வியட்நாமில் 50 சதவீதம், நைஜீரியாவில் 35 சதவீதம், லாவோஸில் 33 சதவீதம், கனடாவில் 29 சதவீதம் பெட்ரோலிய எரிபொருள் விலை உயர்ந்துள்ளன.

ஹார்முஸ் ஜலசந்தி வழியாக கொண்டு வரப்படும் பெட்ரோலிய எரிபொருட்களை ஆசிய நாடுகள் அதிகம் சார்ந்துள்ளன. கிழக்கு ஆசியாவில் உள்ள ஜப்பான் 95 சதவீத எரிபொருளையும், தென் கொரியா 70 சதவீத எரிபொருளையும் ஆசிய நாடுகளில் இருந்து இறக்குமதி செய்கின்றன.

# ‘புவன்’ என்ற புதிய செயலியை அறிமுகம் செய்தது இஸ்ரோ




புதுடெல்லி, மார்ச் 19:

சுற்றுலாவை மேம்படுத்தவும். இந்தியா முழுவதும் உள்ள பாரம்பரிய மற்றும் கலாசார தலங்களை கண்காணித்து பாதுகாப்பதற்காக, இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம் (இஸ்ரோ) ‘புவன்’ என்ற பெயரில் புவி இடம் சார்ந்த இணையதளம் மற்றும் செல்போன் செயலியை உருவாக்கி உள்ளது. இந்த செயலி மூலம் 2 தொழில்நுட்பங்கள் அறிமுகப்படுத்தப்பட்டு உள்ளன.

பார்வையாளர்கள், ‘ஸ்பேஷியல்’ டெக்னாலஜிஸ் (கஸ்தூரி) மற்றும் பாரத் தர்ஷன் செயலிகள் மூலம் புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட இந்த அறிவுத்தளத்தை அணுகலாம். தேசிய தொலை உணர்வு மையம், தேசிய மேம்பட்ட ஆய்வுகள் நிறுவனம், கலாசார அமைச்சகம் மற்றும் இஸ்ரோ ஆகியவற்றின் ஆராய்ச்சியாளர்களால், பல்வேறு மாநில அரசு இணையதளங்கள், ஆய்வு கட்டுரைகள் மற்றும் தொடர்புடைய மூலங்களில் இருந்து பெறப்பட்ட ஆவணப்படுத்தப்பட்ட தகவல்களை பயன்படுத்தி இந்தச் செயலிகள் உருவாக்கப்பட்டன.

தற்போது, ‘பாரத் தர்ஷன்’ செயலியானது யுனெஸ்கோவால் பாதுகாக்கப்பட்ட 42 இடங்கள் குறித்த தகவல்களை வழங்குகிறது.

அதே நேரத்தில் கஸ்தூரி செயலியானது 20 கலாசார மற்றும் பாரம்பரிய நிலப்பரப்புகள் குறித்த விவரங்களை கொண்டுள்ளது. வரும் நாட்களில் மேலும் பல தளங்கள் சேர்க்கப்பட உள்ளது என்று இஸ்ரோ விஞ்ஞானிகள் கூறினர்.

## முத்ரா திட்டத்தின் கீழ் ரூ.39½ லட்சம் கோடி கடன் உதவி: நிர்மலா சீதாராமன்

புதுடெல்லி, மார்ச் 19:

பிரதமரின் முத்ரா யோஜனா திட்டம் குறித்து நாடாளுமன்ற மாநிலங்களவையில் கேள்வி எழுப்பப்பட்டது. இதற்கு மத்திய நிதி மந்திரி நிர்மலா சீதாராமன் பதிலளித்து கூறியதாவது:- பிரதமரின் முத்ரா யோஜனா திட்டம் ஏராளமான சிறு தொழில்முனைவோருக்கு பயனளித்துள்ளது. இத்திட்டம் தொடங்கப்பட்டதில் இருந்து இதுவரை ரூ.39.48 லட்சம் கோடி கடன் அனுமதிக்கப்பட்டுள்ளது.

இது வங்கி கடன் வழங்கும் திட்டங்களில் முக்கியமான ஒன்றாகும். பிணையாக வழங்குவதற்கு எந்த சொத்தும் இல்லாத மக்களையும் இத் திட்டம் சென்றடைந்துள்ளது.

முத்ரா திட்டத்தில் ‘சிசு’, ‘கிஷோர்’ மற்றும் ‘தருண்’ என மூன்று பிரிவுகள் உள்ளன. ‘சிசு’ பிரிவில் வழங்கப்பட்ட மொத்த கடன் தொகையில் 12.4 சதவீதம் நிலுவையில் உள்ளது. ‘கிஷோர்’ பிரிவில் 9.48 சதவீதமும், ‘தருண்’ பிரிவில் வழங்கப்பட்ட மொத்த தொகையில் 7.92 சதவீதமும் நிலுவையில் உள்ளன.

இந்த நிலுவை கடன்களை வசூலிப்பதற்கான நடவடிக்கைகளில் வங்கிகள் ஈடுபட்டு வருகின்றன. பிரிவு வாரியாக பார்க்கும்போது, வராக்கடன் விகிதமானது ‘சிசு’ பிரிவில் மிகவும் குறைவாகவே உள்ளது. இந்த பிரிவின் கீழ் வழங்கப்பட்ட மொத்த தொகையில் இது வெறும் 1.83 சதவீதம் மட்டுமே வராக்கடன் இருக்கிறது. தங்கள் தொழிலை வளர்ப்பதற்காக சிறிய அளவிலான கடன்களை பெறும் மக்களுக்கு ‘சிசு’ பிரிவின் கீழ் கடன்கள் வழங்கப்படுகின்றன. இத்திட்டத்தின் கீழ் மொத்த வராக்கடன்கள், மொத்த கடன் தொகையில் சுமார் 2 சதவீதமாக மட்டுமே உள்ளன. எனவே, வராக்கடன்கள் மிக அதிக அளவில் குவிந்துவிட்டன என்றோ அல்லது அவை பரவலாக பெருகிவிட்டன என்றோ சொல்ல முடியாது. வராக்கடன்களை வசூலிக்க வங்கிகள் எடுத்துள்ள நடவடிக்கைகளில், தொடர் கண்காணிப்பு மற்றும் பின்தொடர்தல், வாடிக்கையாளர்களுட னான தொடர்பை அதிகப்படுத்துதல், தவணைகளை மறுசீரமைத்தல் மற்றும் ‘ஒருமுறை தீர்வு திட்டம்’ ஆகியன அடங்கும். முத்ரா திட்டத்தை மேம்படுத்த நடவடிக்கை மேற்கொண்டு வருகிறோம். இவ்வாறு அவர் கூறினார்.

## ‘கடந்த 5 ஆண்டுகளில் ஒருவர்கூட அரசுப் பணியில் சேரவில்லை’

ஜெய்ப்பூர், மார்ச் 19:

வேலைவாய்ப்பு இயக்குநரகம் வெளியிட்ட தரவுகளின்படி, கடந்த ஜன. 14 வரை மொத்தம் 22,21,317 விண்ணப்பதாரர்கள் வேலை தேடி அந்தந்த மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்து காத்திருக்கின்றனர். அவர்களில் 13.08 லட்சம் ஆண்கள், 9.12 லட்சம் பெண்கள். 989 பேர் இதர பிரிவினர். அவர்களில் இதர பிற்படுத்தப்பட்ட வகுப்புகளைச் (ஓபிசி) சேர்ந்தவர்களே அதிகம். ராஜஸ்தானைப் பொருத்தவரையில் அதிகபட்சமாக ஜெய்ப்பூரில் வேலைவாய்ப்புக்காக பதிவு செய்து காத்திருப்பவர்கள் அதிகம். அங்கு மொத்தம் 2.51 லட்சம் பேர் வேலைக்காகக் காத்திருக்கின்றனர். மேலும், கடந்த ஐந்தாண்டுகளில் தனியார்துறையிலும் குறைந்த எண்ணிக்கையிலே பணி நியமனம் நடைபெற்றுள்ளது. கடந்த 2021-இல் 86 பேரும், 2022-இல் 825 பேரும், 2023-இல் மூன்றே பேரும், 2024-இல் 23 பேரும், கடந்தாண்டில் 71 பேரும் வேலைவாய்ப்பு அலுவலகங்கள் வழியாக நடத்தப்பட்ட வேலைவாய்ப்பு முகாம்கள் மற்றும் இதர முன்னெடுப்புகள் வழியாக தனியார் துறையில் பணிகளில் சேர்ந்துள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கேரளம் சட்டமன்ற தேர்தலில் களம் இறங்கும் நடிகைகள்..!



திருவனந்தபுரம், மார்ச் 19:

கேரளம் மாநிலத்தில் ஏப்ரல் 9-ந் தேதி சட்டமன்ற தேர்தல் நடக்கிறது. பா.ஜனதா தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணியில் டுவென்டி-20 கட்சி சமீபத்தில் இணைந்தது.

கடந்த 2021-ம் ஆண்டு நடந்த சட்டமன்ற தேர்தலில் டுவென்டி-20 கட்சி தனித்து போட்டியிட்டதோடு, 8 தொகுதிகளில் களம் இறங்கியது. இந்த முறை பா.ஜனதா கூட்டணியில் இணைந்து தேர்தலை சந்திக்கிறது. அந்த கட்சிக்கு 20 தொகுதிகள் ஒதுக்கீடு செய்யப்பட்டு உள்ளது.

இந்தநிலையில் டுவென்டி-20 கட்சி யின் 4-வது வேட்பாளர்கள் பட்டியலை கட்சி தலைவர் சாபு ஜேக்கப் நேற்று கொச்சியில் வெளியிட்டார். அங்கமாலி, திருப்புனித்துரா. பெரும்பாவூர், ஏட்டுமானூர் ஆகிய 4 சட்டமன்ற தொகுதிகளுக்கான வேட்பாளர்கள் அறிவிக்கப்பட்டு உள்ளனர்.

பெரும்பாவூர் சட்டமன்ற தொகுதியில் நடிகை லட்சுமி பிரியா போட்டியிடுகிறார். இவர் கடந்த 2005-ம் ஆண்டு முதல் மலையாள திரைப்படங்களில் நடித்து வருகிறார். திருப்புனித்துரா தொகுதியில் நடிகை அஞ்சலி நாயர் களம் இறங்குகிறார். அவர் திரைப்படங்கள் மற்றும் தொலைக்காட்சி தொடர்களில் நடித்து உள்ளார்.

ஏட்டுமானூர் தொகுதியில் நடிகை வீணா நாயர் போட்டியிடுகிறார். இவர் மலையாள திரைப்படங்களில் நடித்து உள்ளார். நடன கலைஞர் ஆவார். அங்கமாலி தொகுதியில் பிரோமி குரியாகோஸ் வேட்பாளராக அறிவிக்கப்பட்டு உள்ளார். அவர் வணிக மேலாண்மை ஆலோசகராக இருந்து வருகிறார். திருக்காக்கரா தொகுதியில் பிரபல திரைப்பட இயக்குனர் அகில் மாரர், திருவம்பாடி தொகுதியில் சன்னி தாமஸ், குன்னத்து நாடு தொகுதியில் பாபு திவாகரன், திருக்கரிப்பூர் தொகுதியில் ரவி குளங்கரா போட்டியிடுகின்றனர்.

## கரூர் கூட்ட நெரிசல் வழக்கு: செந்தில் பாலாஜியிடம் 6 மணிநேரமாக நடைபெற்ற சிபிஐ விசாரணை நிறைவு






புதுடெல்லி, மார்ச் 19:

கரூரில் கடந்த ஆண்டு செப்டம்பர் 27 அன்று தமிழக வெற்றிக் கழகத்தின் தலைவர் விஜய் பங்கேற்ற பிரச்சாரப் பொதுக் கூட்டத்தில் ஏற்பட்ட கூட்ட நெரிசலில் சிக்கி 41 பேர் உயிரிழந்தனர். இந்தச் சம்பவம் தேசிய அளவில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது. இந்த வழக்கை சிபிஐ விசாரித்து வருகிறது.

இந்த வழக்கு விசாரணைக்காக தவெக தலைவர் விஜய் டெல்லியில் சிபிஐ தலைமை அலுவலகத்தில் 3 முறை ஆஜராகியுள்ளார். அந்த வகையில் நேற்று முன் தினம் சிபிஐ அலுவலகத்தில் விஜய் ஆஜரானார். அவரிடம் விசாரணை நடைபெற்றது.

இதனிடையே, கரூர் கூட்ட நெரிசல் வழக்கில் திமுக கரூர் மாவட்ட செயலாளரும், முன்னாள் அமைச்சருமான செந்தில் பாலாஜிக்கும் சிபிஐ நோட்டீஸ் அனுப்பியது. வழக்கு விசாரணைக்கு 17ம் தேதி (இன்று) நேரில் ஆஜராகும்படி செந்தில் பாலாஜிக்கு நோட்டீஸ் அனுப்பப்பட்டிருந்தது. இதையடுத்து, கரூர் கூட்ட நெரிசல் வழக்கு விசாரணைக்காக செந்தில் பாலாஜி நேற்று சென்னையில் இருந்து டெல்லி புறப்பட்டு சென்றார்.

இந்நிலையில், டெல்லி சென்ற செந்தில் பாலாஜி காலை 11 மணிக்கு சிபிஐ தலைமை அலுவலகத்தில் ஆஜரானார். அவரிடம் 11 மணிக்கு தொடங்கி தொடர்ந்து 6 மணிநேரமாக விசாரணை நடைபெற்றது. கரூர் கூட்ட நெரிசல் தொடர்பாக செந்தில் பாலாஜி மீது தவெக பல்வேறு குற்றச்சாட்டுகளை முன்வைத்தது. மேலும், இந்த குற்றசாட்டுகள் தொடர்பாக செந்தில் பாலாஜி மீது சிபிஐ இடம் தவெக புகார் மனுவும் அளித்தது. இந்த புகார் தொடர்பாக செந்தில் பாலாஜியிடம் சிபிஐ அதிகாரிகள் விசாரணை நடத்தினர்.

தவெக தலைவர் விஜய், நிர்வாகிகள் நிர்மல் குமார், ஆதவ் அர்ஜுனா ஆகியோர் அளித்த வாக்குமூலம் அடிப்படையில் செந்தில் பாலாஜியிடம் விசாரணை நடைபெற்றது. தவெக கூட்டத்திற்கு வழங்கப்பட்ட தண்ணீர் பாட்டில்களில் செந்தில் பாலாஜியின் அறக்கட்டளை குறித்த அடையாளங்கள் எவ்வாறு இடம்பெற்றது? கரூர் கூட்ட நெரிசல் நடந்ததும் உடனடியாக மருத்துவமனைக்கு சென்றது எப்படி? உள்பட பல்வேறு கேள்விகளை செந்தில் பாலாஜியிடம் சிபிஐ அதிகாரிகள் எழுப்பினர். இந்த கேள்விகளுக்கு செந்தில் பாலாஜி பதில் அளித்தார். இதையடுத்து 6 மணிநேரமாக நடந்த சிபிஐ விசாரணை தற்போது நிறைவடைந்துள்ளது.

இந்த வழக்கில் செந்தில் பாலாஜியை மீண்டும் விசாரணைக்கு அழைக்க சிபிஐ அதிகாரிகள் திட்டமிட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

## டிஜிட்டல் கைது: மூதாட்டியை மிரட்டி ரூ.38 லட்சம் மோசடி

பெங்களூரு, மார்ச் 19:

பெங்களூருவைசேர்ந்த கீதா(வயது 67) என்ற மூதாட்டி, டிஜிட்டல் கைது மோசடி கும்பலிடம் ரூ.38 லட்சம் பணத்தை இழந்துள்ளார். அவருக்கு அறிமுகம் இல்லாத செல்போன் எண்ணில் இருந்து ஒரு அழைப்பு வந்துள்ளது. அதில் பேசியவர்கள், தங்களை மும்பை காவல்துறை அதிகாரிகள் என்று கூறியுள்ளனர். பின்னர் அவர்கள் மூதாட்டியின் வங்கி கணக்கில் இருந்து பயங்கரவாதிகளுக்கு பணம் அனுப்பப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளனர். இதனால் பயந்து போன மூதாட்டி கீதா, தனக்கு இதில் எந்த சம்பந்தமும் இல்லை என கூறியுள்ளார். ஆனால் அந்த நபர்கள், கீதாவை டிஜிட்டல் கைது செய்திருப்பதாகவும், விசாரணை முடியும் வரை யாரையும் தொடர்பு கொண்டு பேசக் கூடாது என்றும் கூறி மிரட்டியுள்ளனர். பின்னர், இந்த வழக்கில் இருந்து விடுபட வேண்டும் என்றால், வங்கி கணக்கில் உள்ள பணத்தை தங்களுக்கு உடனடியாக அனுப்ப வேண்டும் என்றும், விசாரணை முடிந்ததும் 2 நாட்களில் பணத்தை திருப்பி அனுப்பி விடுவோம் என்றும் கூறியுள்ளனர். வழக்கில் இருந்து தப்பிக்க வேண்டும் என்பதற்காக கீதா தனது வங்கி கணக்கில் இருந்த ரூ.38 லட்சத்தை அனுப்பி வைத்துள்ளார். அதன் பிறகு மோசடிக்காரர்கள் கீதாவை தொடர்பு கொள்ளவில்லை. நாட்கள் கடந்தும் தனக்கு பணம் திருப்பி வராததால் சந்தேகமடைந்த கீதா, இந்த விவகாரம் குறித்து தனக்கு தெரிந்தவர்களிடம் விசாரித்தபோது, இது ஒரு மோசடி என்பது தெரியவந்ததுள்ளது. இதனால் அதிர்ந்து போன மூதாட்டி கீதா, உடனடியாக பெங்களூரு சென் போலீஸ் நிலையத்துக்கு சென்று நடந்ததை கூறி புகார் அளித்தார். அதன்பேரில் போலீசார் வழக்குப்பதிவு செய்து மோசடி செய்த மர்ம நபர்களை வலைவீசி தேடி வருகின்றனர்.

## உடல் எடை குறைப்பு சிகிச்சை: மேலும் 3 மருந்துகளுக்கு அனுமதி!

புதுடெல்லி, மார்ச் 19:

உடல் எடை குறைப்பு சிகிச்சையில் மேலும் 3 மருந்துகளைப் பயன்படுத்த மத்திய மருந்து தரக் கட்டுப்பாட்டு அமைப்பால் (சி.டி.எஸ்.சி.ஓ.) அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

‘ஆர்லிஸ்டாட் (ORLISTAT)’, ‘டிர்ஸெபாடைட் (TIRZEPATIDE)’, ‘செமக்லூடைட் (SEMAGLUTIDE)’ ஆகிய மூன்று மருந்துகளை மருத்துவர்களின் பரிந்துரையின்பேரில் மட்டும் பயன்படுத்தவும் அவற்றை சில்லறை வணிகத்தில் விற்கவும் அனுமதி வழங்கப்பட்டிருப்பதாக மத்திய சுகாதாரத்துறை இணையமைச்சர் அனுபிரியா படேல் செவ்வாய்க்கிழமை(மார்ச் 17) தெரிவித்தார். மாநிலங்களவையில் கேள்வியொன்றுக்கு எழுத்துப்பூர்வமாக அவர் அளித்துள்ள பதிலில், ஆஸெம்பிக் (OZEMPIC) மற்றும் மௌஞ்ஜாரோ (MOUNJARO) ஆகிய இரு மருந்துகளும் உடல் எடை குறைப்பு சிகிச்சையில் பரவலாகப் பயன்படுத்தப்படும் மருந்துகள் என்று குறிப்பிட்ட அவர், ஸ்டீராய்டுகளை மருத்துவப் பரிந்துரையின்றி தன்னிச்சையாகப் பயன்படுத்துவதைத் தடுக்கவும் அவற்றின் பயன்பாட்டை ஒழுங்குபடுத்தவும் அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்திருப்பதாகவும் தெரிவித்தார். மேலும், ‘சிறப்பு மருத்துவ பயன்பாட்டுக்கான உணவு’ என்ற பிரிவின்கீழ் வரையறுக்கப்பட்டுள்ள ஊட்டச்சத்து மருந்துகள் போன்றவற்றை விற்கும்போது, அந்தப் பொருள்களில் கண் பார்வைக்கு தெளிவாகத் தெரியும்படி ‘மருத்துவப் பரிந்துரையின்பேரில் மட்டுமே இதனைப் பயன்படுத்த அறிவுறுத்தப்பட்டுள்ளது’ என்பதை பதிவிடுவதும் அவசியம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளதாகக் குறிப்பிட்டார்.

## மேற்காசிய பதற்றம்: சர்வதேச நோயாளிகள் வருகை 30% சரிவு!



புதுடெல்லி, மார்ச் 19:

மேற்காசிய பதற்றமான சூழல், டில்லி மற்றும் அதன் சுற்றுவட்டார என்சிஆர் பகுதியில் மருத்துவத் துறையில் கடும் தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கிறது.

கடந்த பிப். 28முதல் தொடங்கிய ஈரான் மீதான அமெரிக்கா, இஸ்ரேலின் கூட்டுத் தாக்குதல்கள் மற்றும் அதற்கு ஈரான் படைகளின் எதிர்வினை ஆகியவற்றால் மேற்காசிய பிராந்தியத்தில் பெரும்பதற்றமான சூழல் நிலவுகிறது. இதனால், அப்பகுதிகளுக்கான விமான சேவை கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளது. இதன் வெளிப்பாடாக, மேற்காசிய பிராந்தியத்திலிருந்து இந்தியாவுக்கு வருகை தரும் நோயாளிகள் எண்ணிக்கை வெகுவாகக் குறைந்துள்ளது.

இங்குள்ள நவீன மருத்துவ சுகாதார கட்டமைப்பு மற்றும் நிபுணத்துவம் காரணமாக வெளிநாடுகளிலிருந்து ஏராளமான நோயாளிகள் பல்வேறு சிகிச்சைகளுக்காக தில்லிக்கு வருகின்றனர். இந்திய மருத்துவ சுகாதார சேவைகளுக்கான மிகப்பெரிய சந்தையாகச், சுமார் 30 – 40 சதவீதம் சர்வதேச மருத்துவ பயணிகளுடன் மேற்காசியா முதன்மையாகத் திகழ்கிறது.

இந்நிலையில், அண்மைக் காலமாக இராக், ஓமன், சௌதி அரேபியா, ஐக்கிய அரபு அமீரகம் மற்றும் அதன் அண்டை நாடுகளிலிருந்து சிகிச்சைகளுக்கு வரும் நோயாளிகள் விகிதம் குறைந்துள்ளது. அவ்வகையில் கணக்கிட்டால், கடந்த மாதக் கடைசி 10 நாள்களில் பதிவான சர்வதேச நோயாளிகள் வருகையுடன் இம்மாத முதல் 10 நாள்கள் வருகையை ஒப்பிட்டால், மேற்காசியாவிலிருந்து வரும் நோயாளிகள் விகிதம் 75 சதவீதம் சரிவடைந்துள்ளது என்று இது குறித்த தகவலறிந்த மருத்துவர்கள் பிடிஐ செய்தி நிறுவனத்துக்கு அளித்துள்ள பேட்டியில் தெரிவித்தனர்.

# 46,500 டன் சமையல் எரிவாயுவுடன் குஜராத் வந்தடைந்த இரண்டாவது கப்பல்




புதுடெல்லி, மார்ச் 19:

மேற்காசிய போர் நிலவரம் காரணமாக ஹோர்முஸ் நீரிணையில் 46,500 மெட்ரிக் டன் சமையல் (எல்பிஜி) எரிவாயுவுடன் சிக்கியிருந்த ‘நந்தா தேவி’ என்ற இரண்டாவது கப்பல் பாதுகாப்பாக குஜராத்தின் வடினர் துறைமுகத்துக்கு செவ்வாய்க்கிழமை பாதுகாப்பாக வந்து சேர்ந்தது.

முன்னதாக, ‘ஷிவாலிக்’ என்ற கப்பல் எல்பிஜி ஏற்றிக்கொண்டு ஹோர்முஸ் நீரிணையைக் கடந்து குஜராத்தின்

இதுகுறித்து தீன்தயாள் துறைமுக ஆணைய தலைவர் சுசீல்குமார் சிங் செய்தியாளர்களிடம் கூறியதாவது: நந்த தேவி கப்பல் 46,500 மெட்ரிக் டன் எல்பிஜியுடன் (திரவ பெட்ரோலியம் எரிவாயு) வடினர் துறைமுகத்துக்கு வந்துள்ளது. இந்த எரிவாயு முதலில் பி.டபிள்யு. பிரிச் என்ற கப்பலுக்கு மாற்றப்பட்டு, பின்னர் தமிழகத்தின் சென்னை எண்ணூர் துறைமுகத்துக்கும், மேற்கு வங்கத்தின் ஹால்தியா துறைமுகத்துக்கும் அனுப்பிவைக்கப்படும். மணிக்கு 1,000 டன் என்ற வீதத்தில் இந்தப் பரிமாற்றம் நடைபெறும். இந்த எரிவாயு பரிமாற்றத்தை முழுமையாக நிறைவு செய்ய 2 நாள்கள் ஆகும்.

இந்த சமையல் எரிவாயு, மத்திய அமைச்சகத்தின் அறிவுறுத்தலின்படி முன்னுரிமை அடிப்படையில் பரிமாற்றம் மற்றும் விநியோகம் செய்யப்படும். இந்த ஒட்டுமொத்த நடைமுறைகளும் பன்முக முகமைகளால் தீவிரமாக கண்காணிக்கப்படும் என்றார்.

அமெரிக்க, இஸ்ரேல் கூட்டுப் படைகளின் தாக்குதலைத் தொடர்ந்து பாரசீக வளைகுடா பகுதியிலிருந்து வெளியுலகுக்கான சரக்கு கப்பல்களின் முக்கிய வழித்தடமான ஹோர்முஸ் நீரிணையை ஈரான் மூடிவிட்டது.

மேலும், அமெரிக்கா மற்றும் இஸ்ரேலுக்கு பொருள்கள் மற்றும் கச்சா எண்ணெய்யை ஏற்றிச் செல்லும் கப்பல்கள் மீது தாக்குதல்களை நடத்தி வருகிறது. மற்ற நாடுகளின் கப்பல்கள் இந்த நீரிணையைக் கடக்க ஈரானின் ஒப்புதலைப் பெற வேண்டும் என அறிவுறுத்தியது. இதனிடையே, தாக்குதல் காரணமாக, இந்தியாவுக்கான முக்கிய இயற்கை எரிவாயு ஏற்றுமதியாளரான கத்தார், அதன் உற்பத்தியை முழுமையாக நிறுத்தியது. இதனால், இந்தியாவில் சமையல் எரிவாயு விநியோகத்துக்கு கடும் தட்டுப்பாடு ஏற்பட்டது. இதனால், சமையல் எரிவாயு விநியோகத்துக்கு பல்வேறு கட்டுப்பாடுகளை மத்திய அரசு விதித்தது. ஹோர்முஸ் நீரிணை மூடப்பட்டதால், இந்திய கொடி பொருத்திய 28 சரக்கு கப்பல்களும் மேற்கொண்டு செல்ல முடியாமல் ஹோர்முஸ் நீரிணைப் பகுதியில் சிக்கின.

# அலி லாரிஜானி படுகொலை எதிரொலி: இஸ்ரேல் தலைநகரில் ஈரான் 'க்ளஸ்டர் குண்டு' வீச்சு!

**டெல் அவிவ், மார்ச் 19:**

இஸ்ரேல் தாக்குதலில் ஈரானின் 2-வது மிகப்பெரிய தலைவரான அலி லாரிஜானி, அவரது மகன் மற்றும் மூத்த தளபதி கோலம்ரெசா சுலைமானி உள்ளிட்டோர் படுகொலை செய்யப்பட்ட நிலையில், இஸ்ரேல் தலைநகரான டெல் அவிவில் கொத்து குண்டுகளை வீசி தாக்குதல் நடத்தி இருக்கிறது ஈரான்.



"ஈரான் ராணுவம் க்ளஸ்டர் குண்டுகள் எனப்படும் கொத்து குண்டுகளை வீசுகிறது அவை நடுவானில் பல்வேறு சிறு சிறு குண்டுகளாகப் பிரிந்து பரந்துபட்ட பகுதியை குறிவைத்து விழுவதால் அவற்றை இடைமறித்து அழிப்பது கடினமாக இருக்கிறது" என்று இஸ்ரேல் ராணுவம் தெரிவித்திருந்தது நினைவுகூரத்தக்கது.

இந்தச் சூழலில், மக்கள் தொகை அதிகம் உள்ள டெல் அவிவ் நகரில் இந்த குண்டுகளை நேற்றிரவு ஈரான் ராணுவம் பயன்படுத்திய நிலையில் 2 பேர் கொல்லப்பட்டதாகவும், இதுவரையிலும் இந்த மோதலில் இஸ்ரேல் தரப்பில் 14 பேர் இறந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முன்னதாக நேற்று மாலை ஈரானின் புஷெர் அணுசக்தி நிலையம் அருகே ஏவுகணை ஒன்று விழுந்தது. ஆனால் இதனால் அணுசக்தி நிலையத்துக்கோ மக்களுக்கோ எவ்வித பாதிப்பும் ஏற்படவில்லை என்று சர்வதேச அணுசக்தி முகமை ஐஏஇஏ தலைவர் ரஃபேல் க்ராஸி தெரிவித்துள்ளார். மேலும், அணுசக்தி நிலையத்தின் மீது தவறுதலாகக் கூட தாக்குதல் நடந்துவிடக் கூடாது அளவுக்கு மோதலில் ஈடுபட்டுள்ள நாடுகள் கவனமாக இருக்கும்படி அவர் வலியுறுத்தியுள்ளார்.

பிப்ரவரி 28-ம் தேதி ஈரான் மீது கூட்டாக தாக்குதலைத் தொடங்கிய அமெரிக்க - இஸ்ரேல் நாடுகள், ஈரானின் அணு ஆயுத தயாரிப்பு திட்டத்தை முறியடிக்கவே இத்தாக்குதல் என்று விளக்கியிருந்தது நினைவுகூரத்தக்கது.

இதற்கிடையில், ஈரான் வெளியுறவு அமைச்சகம் சார்பில் போர் பதற்றத்தைக் குறைப்பது, மோதலை தற்காலிகமாக நிறுத்துவது தொடர்பாக வழங்கப்பட்ட அனைத்து ஆலோசனைகளையும் ஈரானின் உச்ச தலைவர் மோஜ்தபா காமேனி நிராகரித்துவிட்டதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

உச்ச தலைவராக பதவியேற்ற பின்னர் காமேனி முதன்முறையாக வெளியுறவுக் கொள்கை ஆலோசனைக் கூட்டத்தில் கலந்து கொண்டார். அப்போது அவர், "அமெரிக்காவும், இஸ்ரேலும் அடிபணியும் வரை அமைதிப் பேச்சுவார்த்தையை முன்னெடுப்பது என்பது சரியானது அல்ல. அவர்கள் தோல்வியை ஒப்புக்கொண்டு இழப்பீடு வழங்க வேண்டும்." என்று கூறியதாகத் தகவல்.

இருப்பினும் இந்த ஆலோசனைக் கூட்டத்தில் அவர் கலந்து கொண்டதற்கான புகைப்பட, வீடியோ ஆதாரம் ஏதும் வெளியிடப்படவில்லை. அவர் நேரில் பங்கேற்றாரா அல்லது வீடியோ கான்ஃபரன்ஸிங்கில் பங்கேற்றாரா என்பதுகூட தெரியவில்லை.

## அமெரிக்க பாதுகாப்புத்துறை மந்திரியாக முன்னாள் மல்யுத்த வீரர் தேர்வு

**வாஷிங்டன், மார்ச் 19:**

அமெரிக்காவின் மிக முக்கிய துறையான உள்நாட்டு பாதுகாப்புத்துறை மந்திரியாக இருந்த கிறிஸ்டி நோம், நிர்வாக சிக்கல்கள் மற்றும் சமூக வலைதள சர்ச்சைகளால் பதவியை இழந்தார். அவருக்கு பதிலாக, முன்னாள் மல்யுத்த வீரரும், எம்.பி.யுமான மார்க்வேன் முல்லினை ஜனாதிபதி டிரம்ப் தேர்வு செய்துள்ளார்.

13 ஆண்டுகள் நாடாளுமன்ற அனுபவம் கொண்ட இவர், டிரம்ப்பின் தீவிர ஆதரவாளர் ஆவார். புதிதாக பொறுப்பேற்கும் மார்க்வேனுக்கு பல சவால்கள் காத்திருக்கின்றன. குறிப்பாக, சட்டவிரோத குடியேறிகளை ஒட்டுமொத்தமாக திரட்டி நாடுகடத்தும் டிரம்ப்பின் 'மெகா' திட்டத்தை இவர் செயல்படுத்த வேண்டும்.

மேலும், நிதி நெருக்கடியால் சம்பளம் இன்றி தவிக்கும் பாதுகாப்பு படை வீரர்களின் பிரச்சினை மற்றும் முடங்கிக் கிடக்கும் சுமார் ரூ.18 ஆயிரம் கோடி பேரிடர் மீட்பு நிதியை விடுவிப்பது போன்ற இக்கட்டான பணிகளை இவர் கவனிக்க வேண்டியுள்ளது. மல்யுத்த களத்தில் எதிரிகளை வீழ்த்திய முல்லின், இப்போது அமெரிக்காவின் பாதுகாப்பு சவால்களை எப்படி சமாளிக்கப்போகிறார் என்பதை உலகமே உற்று நோக்குகிறது.

## வடகொரிய தேர்தலில் 99.93% வாக்குகளுடன் கிம் ஜாங் உன் அபார வெற்றி: "மீதமுள்ள 0.07% யார்..?"



**பியாங்யாங், மார்ச் 19:**

வடகொரிய அரசு ஊடகமான கே.சி.என்.ஏ-வின் தகவலின்படி, அந்நாட்டு அதிபர் கிம் ஜாங் உன் மற்றுமொரு மகத்தான தேர்தல் வெற்றியைப் பெற்றுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. 15-வது உச்ச மக்கள் பேரவையின் உறுப்பினர்களை தேர்ந்தெடுப்பதற்காக இந்த தேர்தல் மார்ச் 15-ம் தேதியன்று நடைபெற்றது.

அதிகாரப்பூர்வபுள்ளிவிவரங்களின்படி, பதிவுசெய்யப்பட்ட வாக்காளர்களில் 99.99% பேர் வாக்களித்துள்ளனர். வெளிநாட்டில் இருந்ததாலோ அல்லது கடலில் பணிபுரிந்ததினால் 0.0037% பேரால் மட்டுமே வாக்களிக்க முடியவில்லை, மேலும் 0.00003% பேர் வாக்களிக்காமல் தவிர்த்துள்ளனர். வாக்களித்தவர்களில் 99.93% பேர் வேட்பாளர்களை ஆதரித்துள்ளனர், அதேசமயம் 0.07% பேர் எதிராக வாக்களித்துள்ளனர். இது வட கொரியத் தேர்தல்களில் வழக்கத்திற்கு மாறாக கவனிக்கப்பட்ட ஒரு எண்ணிக்கையாகும், வட கொரிய தேர்தல் சட்டங்களின்படி, தொழிலாளர்கள், விவசாயிகள், அறிஞர்கள், சேவைப் பணியாளர்கள் மற்றும் அதிகாரிகள் உட்பட 687 பிரதிநிதிகள் சட்டபேரவைக்கு தேர்ந்தெடுக்கப்பட்டனர். ஒவ்வொரு தொகுதிக்கும் ஒரே ஒரு வேட்பாளர் மட்டுமே பட்டியலிடப்பட்டிருந்ததால், வெளிநாட்டுப்பார்வையாளர்கள் இந்த செயல்முறையை ஒரு "காட்சித் தேர்தல்" என்று விவரித்தனர். குறிப்பிடத்தக்க வகையில், 1957ம் ஆண்டுக்குப் பிறகு முதல் முறையாக நாடாளுமன்ற தேர்தலில் எதிர்ப்பு வாக்குகள் பதிவாகி உள்ளதை அந்நாட்டு அரசு ஊடகங்கள் ஒப்புக்கொண்டுள்ளன. தேர்ந்தெடுக்கப்பட்டவர்களில், கிம் ஜாங்-உன்னின் சகோதரியான கிம் யோ ஜோங்கும் ஒருவர். இவர் கல்லிம்கில் தொகுதி எண் 5-ல் வெற்றி பெற்றார். வட கொரியாவில் இதுபோன்ற மகத்தான வெற்றிகள் வழக்கமானவை என்றாலும், இந்த 0.07% எதிர்ப்பு வாக்குகள் இணையத்தில் உடனடியாக கவனத்தை ஈர்த்தன. இதற்கு நெட்டிசன்கள் கிண்டலாகவும் நகைச்சுவையாகவும் எதிர்வினையாற்றி வருகின்றனர். அதில் நெட்டிசன்களில் ஒருவர், "அந்த 0.07% பேருக்காக ஒரு நிமிடம் மவுன அஞ்சலி" என்று எழுதினார். மற்றொருவர், கிம்மின் படத்துடன், "அந்த 0.07% பேரின் பெயர்களைக் கூறுங்கள்" என்று நகைச்சுவையாக பதிவிட்டுள்ளார். மூன்றாவது நபர், "இந்த கோடை காலத்தில் மக்கள் தொகை 0.07% குறையும் என எதிர்பார்க்கப்படுகிறது," என்று கிண்டலாக பதிவிட்டுள்ளார். "அந்த 0.07% பேர் இப்போது நாட்டின் மிகவும் தேடப்படும் நபர்களாகிவிட்டனர்" என்று மற்றொரு நெட்டிசன் பதிவிட்டிருந்தார்.

## "ஈரான் போர் நீடிக்க வாய்ப்பு": இஸ்ரேல் தூதர் ரூவேன் அசார் கருத்து

**தெஹ்ரான், மார்ச் 19:**

ஈரான் போர் நீடிக்க வாய்ப்பு உள்ளதாக இந்தியாவுக்கான இஸ்ரேல் தூதர் ரூவேன் அசார் தெரிவித்துள்ளார். ஈரானின் பாதுகாப்புக் குழுவின் செயலாளர் அலி லாரிஜானி கொல்லப்பட்டதாக இஸ்ரேல் தெரிவித்துள்ள நிலையில் ரூவேன் அசார் இதை கூறியுள்ளது கவனிக்கத்தக்கது.

இது தொடர்பாக முன்னணி செய்தி நிறுவனத்துக்கு அளித்த பேட்டியில் ரூவேன் அசார் கூறியதாவது: "ஈரான் மீதான இஸ்ரேலின் தாக்குதல் தீவிரமடைந்துள்ளது. நாளுக்கு நாள் அது அதிகரித்து வருகிறது. இந்த தாக்குதல் காரணமாக ஈரானின் ராணுவ பலம் பெரிய அளவில் குறைந்துள்ளது. மேலும், ஈரானில் மாற்றம் வரும் வரை போர் நீடிக்க வாய்ப்புள்ளது.

பல தசாப்தங்களாக ஈரானுடன் பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காண முயற்சிகள் நடந்தது. ஈரானின் அணு ஆயுத சோதனை, ஏவுகணை கட்டமைப்பு மற்றும் பிராந்திய அளவிலான ஆயுத குழுக்களுக்கு அளிக்கப்படும் ஆதரவு என பேசினோம். அது அனைத்தும் தோல்வி அடைந்தது. இந்த தாக்குதலை இஸ்ரேல் மற்றும் அமெரிக்கா என இரண்டும் இணைந்துதான் முன்னெடுத்தன. இந்த போரை நீண்ட காலம் கொண்டு செல்ல வேண்டுமென நாங்கள் விரும்பவில்லை. இருந்தாலும் கள சூழல்தான் அதை முடிவு செய்யும்" என்றார்.

கடந்த மாதம் ஈரான் மீது இஸ்ரேல் மற்றும் அமெரிக்க படைகள் இணைந்து தாக்குதல் மேற்கொண்டன. இந்த தாக்குதலில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட ஈரான் மக்கள் உயிரிழந்தனர். தங்கள் மீதான தாக்குதலுக்கு பதிலடியாக இஸ்ரேல் மற்றும் அமெரிக்காவின் நட்பு நாடுகள் மீது ஈரான் தாக்குதல் நடத்தி வருகிறது. இந்த போரின் முடிவு எப்படி இருக்கும் என உலக நாடுகள் எதிர்பார்த்துள்ளன. ஏனெனில், இந்த போர் காரணமாக ஆசிய அளவில் கச்சா எண்ணெய் விநியோகம் பாதிக்கப்பட்டுள்ளது.

## ஈரானின் 2-வது மிகப் பெரிய தலைவர் அலி லாரிஜானி, மூத்த தளபதி சுலைமானி உயிரிழப்பு: இஸ்ரேல் பிரதமர் தகவல்

**டெல் அவிவ், மார்ச் 19:**

இஸ்ரேல் தாக்குதலில் ஈரானின் 2-வது மிகப்பெரிய தலைவரான அலி லாரிஜானியும் மூத்த தளபதி கோலம்ரெசா சுலைமானியும் உயிரிழந்துவிட்டதாக கூறப்படுகிறது.



கடந்த பிப்.28ம் தேதி அமெரிக்கா, இஸ்ரேல் போர் விமானங்கள் நடத்திய தாக்குதலில் ஈரானின் உச்ச தலைவர் அயத்துல்லா அலி காமேனி உயிரிழந்தார். இதைத் தொடர்ந்து அவரது மகன் மோஜ்தபா காமேனி புதிய உச்ச தலைவராக நியமிக்கப்பட்டார். ஆனால் இஸ்ரேல் போர் விமான தாக்குதலில் மோஜ்தபா பலத்த காயமடைந்து கோமாவில் இருப்பதாக தகவல்கள் வெளியாகி வருகின்றன. இந்த சூழலில் மறைந்த அயத்துல்லா அலி காமேனியின் வலது கரமாக செயல்பட்ட அலி லாரிஜானி, ஈரானை வழி நடத்தி வந்ததாகக் கூறப்பட்டது. இந்த சூழலில் கடந்த திங்கள் கிழமை நள்ளிரவு முதல் செவ்வாய்க்கிழமை அதிகாலை வரை ஈரான் தலைநகர் டெஹ்ரானின் முக்கிய ராணுவ தளங்களை குறிவைத்து இஸ்ரேல் போர் விமானங்கள் குண்டுகளை வீசி தாக்குதல் நடத்தின.

இது குறித்து இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு வெளியிட்ட வீடியோவில், "இஸ்ரேல் வான் வழி தாக்குதலில் அலி லாரிஜானி கொல்லப்பட்டுவிட்டார். இவர் இஸ்லாமிய புரட்சிகர படையின் தலைவராக இருந்தார். ஈரான் ராணுவத்தின் பசிஜ் படைத் தளபதி சுலைமானியும் கொல்லப்பட்டார். இந்த நேரத்தில் ஈரானின் ஆட்சியை பொதுமக்கள் கைப்பற்ற வேண்டும்" என்றார். கடந்த சில நாட்களுக்கு முன்பு டெஹ்ரானில் நடைபெற்ற பேரணியில் அலி லாரிஜானி பங்கேற்றார். அப்போது முதல் அவரை தீவிரமாக கண்காணித்து, அவர் தங்கியிருந்த ராணுவ முகாம் மீது தாக்குதல் நடத்தப்பட்டதாகவும் 300 ஈரான் ராணுவ வீரர்கள் உயிரிழந்திருப்பதாகவும் இஸ்ரேல் ராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன. அலி லாரிஜானி, சுலைமானியின் உயிரிழப்பை ஈரான் அரசு உறுதி செய்யவில்லை.

## ஈரானின் கார்க் தீவைக் கைப்பற்ற அதிபர் ட்ரம்ப் திட்டம்: அமெரிக்க அதிகாரிகள் தகவல்

**வாஷிங்டன், மார்ச் 19:**

ஹார்முஸ் ஜலசந்தி பகுதியில் எண்ணெய் கப்பல்களின் போக்கு வரத்துக்கு ஈரான் கடும் நிபந்தனை விதித்துள்ளது. ஹார்முஸ் ஜலசந்தியில் பாதுகாப்பு பணியை மேற்கொள்ள போர்க் கப்பல்களை அனுப்ப அமெரிக்க அதிபர் ட்ரம்ப் விடுத்த கோரிக்கையை நேட்டோ நாடுகள் ஏற்கவில்லை. இந்த விஷயத்தில் நேட்டோ நாடுகள் உதவவில்லை என்றால், மோசமான எதிர்காலத்தை சந்திக்க வேண்டிய நிலை ஏற்படலாம் என ட்ரம்ப் எச்சரித்துள்ளார்.

ஈரானின் 90 சதவீத கச்சா எண்ணெய் ஏற்றுமதி கார்க் தீவில் நடைபெறுகிறது. இத னால் ஈரானின் வருவாயை முடக்க, இந்த தீவுக்கு ராணுவத்தை அனுப்பி கைப்பற்றும் திட்டம் குறித்தும் அதிபர் ட்ரம்ப் ஆலோசித்து வருகிறார். ஆனால், இந்த தீவுக்கு அமெரிக்க ராணுவம் சென்றால், ஈரான் பதிலடியில் இறங்கும். சவுதி உட்பட வளைகுடா நாடுகளில் உள்ள எண்ணெய் கிடங்குகள் மீதும் ஈரான் தாக்குதல் நடத்தலாம் என கூறப்படுகிறது.

இந்நிலையில் இந்தியாவுக்கான இஸ்ரேல் தூதர் ரூவேன் அசார் கூறுகையில், "ஈரானுக்குள் ஊடுருவும் எண்ணம் அமெரிக்காவுக்கும், இஸ்ரேலுக்கும் இல்லை. ஈரானில் ஆட்சி மாற்றம் ஏற்படுத்த மட்டுமே இரு நாடுகளும் கவனம் செலுத்துகின்றன" என்றார்.

## முக்கிய பாதுகாப்பு அம்சத்தை நீக்கும் இன்ஸ்டாகிராம்: பயனர்கள் அதிர்ச்சி

**நியூயார்க், மார்ச் 19:**

மெட்டா நிறுவனத்திற்கு சொந்தமான இன்ஸ்டாகிராம் சமூக வலைத்தளங்களில் அதிகம் பேர் பயன்படுத்தும் செயலிகளில் ஒன்றாக உள்ளது. புகைப்படம் மட்டும் பதிவேற்றும் செயலியாக இருந்த இன்ஸ்டாகிராமில் புதுப்புது வசதிகள் கொண்டு வரப்பட்டன. சில வினாடிகள் மட்டுமே ஓடக்கூடிய ரீல்ஸ் வீடியோக்கள், ஆடியோ, வீடியோ கால் வசதி, சாட்டிங் வசதி ஆகியவை இன்ஸ்டாகிராமில் கொண்டு வரப்பட்டன. பயனர்கள் மத்தியில் மிகவும் பிரபலமாக உள்ள இன்ஸ்டாகிராம் தனது தனியுரிமை கொள்கையில் முக்கிய மாற்றத்தை கொண்டுவந்துள்ளது. எண்ட்-டு-எண்ட் என்கிரிப்ஷன் அம்சம் நீக்கப்படுவதாக அறிவித்துள்ளது. கடந்த 2023-ல் இன்ஸ்டாகிராமில் எண்ட்-டு-எண்ட் என்கிரிப்ஷன் அம்சம் டைரக்ட் மெசேஜில் அறிமுகமானது. இந்த நிலையில், வரும் மே 8 முதல் இந்த அம்சத்தை நீக்க இருப்பதாக இன்ஸ்டாகிராம் கூறியுள்ளது. இந்த அம்சம் பரவலான பயனர்கள் பயன்படுத்தாத காரணத்தால் நீக்குவதாக மெட்டா தெரிவித்துள்ளது. எண்ட்-டு-எண்ட் என்கிரிப்ஷன் நீக்கப்பட்டால், பயனர்கள் அனுப்பும் மெசேஜ்கள், தரவுகளை மெட்டாவால் பார்க்க முடியும். அதனை விளம்பர நோக்கத்திற்காகவும், கன்டென்ட்களை கவனிக்கவும், சட்ட ரீதியான கோரிக்கையின் அடிப்படையில் அதை பல்வேறு முகமைகளுக்கும் அனுப்ப முடியும். மெட்டாவின் இந்த முடிவு பயனர்களின் தனியுரிமையை மீறும் வகையில் இருப்பதாக பயனர்கள் அதிருப்தி தெரிவித்துள்ளனர்.

## நைஜீரியாவில் அடுத்தடுத்து மனித வெடிகுண்டு தாக்குதல்கள் - 23 பேர் உயிரிழப்பு

**அபுஜா, மார்ச் 19:**

ஆப்பிரிக்க நாடுகளில் ஒன்றான நைஜீரியாவில், பயங்கரவாதிகள் அடுத்தடுத்து நிகழ்த்திய மனித வெடிகுண்டு தாக்குதல்கள் அந்நாட்டை உலுக்கியுள்ளன. நைஜீரியாவின் வடகிழக்கு மாகாணமான போர்னோவின் தலைநகர் மைதுகுரியின் மையப்பகுதியில் உள்ள தபால் நிலையம் அருகே முதல் மனித வெடிகுண்டு பயங்கர சத்தத்துடன் வெடித்தது. இதனால் மக்கள் அலறியடித்து ஓடிய நிலையில், அடுத்த சில நிமிடங்களிலேயே மக்கள் அதிகம் கூடியிருந்த சந்தையில் மற்றொரு குண்டு வெடித்தது. தொடர்ந்து, காயமடைந்தவர்கள் சிகிச்சைக்காக கொண்டு செல்லப்படும் மைதுகுரி பல்கலைக்கழக ஆஸ்பத்திரி நுழைவாயிலிலும் ஒரு குண்டு வெடித்தது. மேலும், கலேரி என்ற குடியிருப்புப் பகுதியிலும் இதே போன்று மனித வெடிகுண்டு தாக்குதல் நடத்தப்பட்டது. இவ்வாறு திட்டமிட்டு 4 இடங்களில் நடத்தப்பட்ட இந்த கோரத் தாக்குதலில் 23 பேர் உடல்சிதறி உயிரிழந்தனர். மேலும், சுமார் 108 பேர் படுகாயம் அடைந்துள்ளனர். அவர்கள் அனைவரும் தற்போது ஆஸ்பத்திரிகளில் அனுமதிக்கப்பட்டு தீவிர சிகிச்சை பெற்று வருகின்றனர். படுகாயம் அடைந்தவர்களில் பலரது நிலைமை கவலைக்கிடமாக இருப்பதால் பலி எண்ணிக்கை மேலும் அதிகரிக்கக்கூடும் என அஞ்சப்படுகிறது.

# "ஈரான் போரை மனசாட்சிப்படி ஆதரிக்க முடியாது": அமெரிக்க பயங்கரவாத எதிர்ப்பு பிரிவு இயக்குநர் ராஜினாமா

**வாஷிங்டன், மார்ச் 19:**

அமெரிக்காவின் தேசிய பயங்கரவாத எதிர்ப்பு மையத்தின் இயக்குநர் ஜோசப் கென்ட் தனது பதவியை ராஜினாமா செய்துள்ளார்.



இஸ்ரேலின் அழுத்தம் காரணமாகவே டொனால்ட் ட்ரம்ப் தலைமையிலான அமெரிக்க அரசு ஈரான் மீது போரைத் தொடங்கியது என்று அவர் சுமத்தியுள்ள குற்றச்சாட்டு பெரும் விவாதத்தை ஏற்படுத்தியுள்ளது.

ட்ரம்பின் நெருக்கமான அதிகாரிகளில் ஒருவராகக் கருதப்பட்ட ஜோ கென்ட், தனது ராஜினாமா கடிதத்தில் தற்போதைய வெளியுறவுக் கொள்கைகள் மீது கடும் அதிருப்தியை வெளிப்படுத்தியுள்ளார்.

அக்கடிதத்தில் அவர் கூறியுள்ளதாவது, "அதிபர் ட்ரம்ப், மிகுந்த ஆலோசனைக்குப் பிறகு, தேசிய பயங்கரவாத எதிர்ப்பு பிரிவின் இயக்குநர் பதவியிலிருந்து இன்று முதல் விலகுகிறேன். ஈரானில் நடக்கும் இந்தப் போரை எனது மனசாட்சியின்படி என்னால் ஆதரிக்க முடியாது. ஈரான் நமது நாட்டுக்கு எந்த உடனடி அச்சுறுத்தலையும் தரவில்லை. இஸ்ரேல் மற்றும் அதன் சக்திவாய்ந்த அமெரிக்க லாபியின் அழுத்தம் காரணமாகவே நாம் இந்தப் போரைத் தொடங்கினோம் என்பது தெளிவாகத் தெரிகிறது.

2016, 2020, 2024 தேர்தல்களில் நீங்கள் முன்வைத்த வெளியுறவுக் கொள்கைகளை நான் ஆதரிக்கிறேன்.

ஜூன் 2025 வரை, மத்திய கிழக்கு நாடுகளின் போர்கள் அமெரிக்க வீரர்களின் உயிரையும் செல்வத்தையும் வீணடிக்கும் ஒரு வலை என்பதை நீங்கள் உணர்ந்திருந்தீர்கள். உங்கள் முதல் ஆட்சியில், ஒரு முடிவில்லாத போருக்குள் சிக்காமல் ராணுவ பலத்தை எப்படிச் சரியாகப் பயன்படுத்துவது என்பதில் நீங்கள் சிறந்த அதிபராக இருந்தீர்கள்.

ஆனால், இந்த ஆட்சியின் தொடக்கத்தில் இஸ்ரேலிய அதிகாரிகளும் அமெரிக்க ஊடகங்களும் சேர்ந்து ஒரு தவறான பிரச்சாரத்தை மேற்கொண்டனர். ஈரான் அச்சுறுத்தலாக இருப்பதாக உங்களை நம்பவைத்து, போருக்குத் தூண்டினர். ஈராக் போரின் போது பயன்படுத்தப்பட்ட அதே தந்திரத்தை இப்போதும் பயன்படுத்தி நம்மை ஏமாற்றியுள்ளனர். போர்க்களத்திற்கு 11 முறை சென்ற ஒரு வீரனாகவும், இஸ்ரேலால் உருவாக்கப்பட்ட ஒரு போரில் தனது மனைவியைத் தொலைத்தவனாகவும், அமெரிக்க மக்களுக்குப் பயன் தராத இந்தப் போருக்கு அடுத்த தலைமுறையை அனுப்ப என்னால் முடியாது.

ஈரானில் நாம் யாருக்காக என்ன செய்து கொண்டிருக்கிறோம் என்பதை நீங்கள் சிந்திக்க வேண்டும். நீங்கள் நினைத்தால் இந்தத் தவறான பாதையை இப்போதே மாற்றி நாட்டைச் சரியான வழிக்குக் கொண்டு செல்ல முடியும். உங்கள் ஆட்சியில் பணியாற்றியதை கவுரமாக கருதுகிறேன்" இவ்வாறு ஜோசப் கென்ட் தனது கடிதத்தில் தெரிவித்துள்ளார்.



# “அரசியலில் ’முற்றுப்புள்ளி’ என்பதே கிடையாது”

## தமிழகத்தில் 3 நாட்களில் உரிய ஆவணங்கள் இல்லாத ரூ.42.65 கோடிக்கு பணம், பொருட்கள் பறிமுதல்

## தமிழகத்தில் ஜனவரி மாத பரிசோதனையில் 43 மருந்துகள் தரமற்றவை

## அமெரிக்க விசா கட்டணம் கடும் உயர்வு: சுற்றுலா, தொழில்முறை பயணிகளுக்கு கூடுதல் சுமை

## தமிழகத்தில் அதிகபட்ச வெப்பநிலை 7 டிகிரி வரை குறைய வாய்ப்பு


தமிழ்நாடு இ பேப்பர்.காம்

www. tamilnaduepaper.com Tamilnaduepaper

சென்னை 19.03.2026 வியாழக்கிழமை இலவச இ-பேப்பர்